www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

16-30 ஜூன் 88

3 _ 15

விலை ரூ

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு


## சுதேசி தர்பாரில் விதேசி ராஜா



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




அன்புள்ள ஆசிரியருக்கு,

❋ இதழ் எண் 12ல் அட்டைப்படம் கொள்ளைக்காரன் ராஜீவ்தானா என்பது சரியாகத் தெரியவில்லை. முன்பு இரண்டாமாண்டு 24வது இதழில் கொலைகாரன் ராஜீவ் என்று அட்டைப்படம் வெளியிட்டதைப் போல தெளிவாக அமைந்திருக்க வேண்டும். ரேசன் கடை ஊழலுக்குக் காரணம் ஊழியர்களல்ல; அவர்களைப் பின்னாலிருந்து ஆட்டுவித்து சுரண்டிக் கொழுக்கும் அதிகார வர்க்கம்தான் காரணம் என்று விளக்கியது சிறப்பானது. ஒரு நிமிடத்திற்க ரூ.1 லட்சம் வீதம் கட்டினால் நமது நாட்டின் கடனைத் திருப்பியடைக்க 42 வருடங்களாகும் என்று எளிமையாகப் புரியவைத்து. இந்திய நாட்டையும் மக்களையும் கடன் புதைசேற்றில் சிக்கவைத்த ஆட்சியாளர்களின் அயோக்கியத்தனங்களை அம்பலப்படுத்திக் காட்டும் வகையில் சிறப்பாக அமைந்திருந்தது. 'மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலையில் இந்திய அரசாங்கம்' என்ற கட்டுரை.

இதழ் எண் 13ன் அட்டைப்படம் பார்த்தவுடன் புரிந்து கொள்ளும் வகையில் அமையவில்லை. ஒரு பிரிவு சீக்கியத் தீவிரவாதிகளுக்கு 'ரா' உளவுப்படையே ஆயுதம் கொடுத்திருக்கிறது என்ற செய்தி தமிழில் புதிய ஜனநாயகத்தில் மட்டுமே வந்திருப்பது சிறப்பானது. நமது இதழை ஆதாரமாக வைத்து பல ஓட்டுக்கட்சி அரசியல் வாதிகள் மேடையில் பேசுமளவுக்கு புதிய ஜனநாயகம் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை எண்ணும்போது புதிய ஜனநாயகம் வாசகர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமிதமும் உற்சாகமும் அடைகிறோம்.

**வாசகர் வட்டம்**

**திருச்சி**

❋ தற்போது வெளிவரும் புதிய ஜனநாயகம் எழுத்துக்களில் வடிவமாற்றம் செய்திருப்பது சிறப்பாக உள்ளது. இதழில் இன்னும் கேலிச்சித்திரங்கள், கருத்துப்படங்கள், கருத்துப்படங்கள் இடம் பெற்றால் சிறப்பாக இருக்கும். திராவிடர் கழகத்தின் முகமூடியைக் கிழிக்கும் வண்ணம் உண்மை ஏட்டிற்கு சவால் விடுத்திருப்பது சரியானது. பிழைப்புவாதி வீரமணியின் சண்டப் பிரசண்டங்களையும், வெற்று வாய்ச்சவடால்களையும் அம்பலப்படுத்தியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஒரு கம்யூனிசத் துரோகியின் மரண சாசனம் என்ற தொடர் ராமமூர்த்தி போன்ற போலிக் கம்யூனிஸ்டுகளை தக்க ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறது; இளைய தலைமுறையினர் கடந்தகால வரலாற்றை அறிந்து கொள்ள உதவுகிறது. திராவிடர் கழகம் தோன்றிய விதம், அவர்களின் துரோகம், போலிக் கம்யூனிஸ்டுகளின் கையாலாகாத்தனம், காங்கிரசுக்கு வால் பிடித்து பொதுவுடமைக் கொள்கையை குழி தோண்டிப் புதைத்த அவர்களின் துரோகம் முதலானவற்றை இத்தொடரின் மூலம் நன்றாக உணரமுடிகிறது.

**வாசகர் வட்டம்**

**அதிராம்பட்டினம்**

❋ இதழ் எண் 13ல் வன்னியர் — அரிசன மோதலுக்கு சாதிய சங்க ஓட்டுக்கட்சித் தலைவர்கள் செய்து வருச் சதியை சரியான நேரத்தில் அம்பலப்படுத்தி உழைக்கும் மக்களை எச்சரித்த புதிய ஜனநாயகத்துக்குப் புரட்சிகர வாழ்த்துக்கள்! வரப்போகும் அபாயத்தை தொலை நோக்குப் பார்வையோடும் நுண்ணோக்கி ஆராய்ந்தும் உழைக்கும் மக்களுக்கு என்றும் நல்லாசிரியனாகத் திகழ்வது புதிய ஜனநாயகம் மட்டுமே!

**மனோஜ்**

**பென்னாகரம்**

❋ இதழ் எண் 14ல் வெளியான 'சீருடை தரித்த வெறிநாய்கள்' எனும் படைப்பு வெகு சிறப்பாக எதார்த்தத்தை அப்படியே விளக்கியிருந்தது. இந்த சட்டபூர்வ சமூகவிரோத கிரிமினல் கும்பலை சமீபத்தில் திண்டுக்கல் அருகே மக்கள் ஓட ஓட அடித்து விரட்டிய செய்தியை பரபரப்பை விற்றுக் காசாக்கும் ஜூனியர் விகடனில் படித்தேன். இது ஒரு நல்ல முன்னேற்றம்தான். இந்த கயவாளிக் கூட்டம் அத்துமீறிநடந்து கொள்ளும்போது தொப்பி பறக்க — காக்கிச் சட்டை கிழிய உதைத்து விரட்ட வேண்டும். ஆம் நீதியை நாம் தான் நிலைநாட்ட வேண்டும். அடுத்து, தஞ்சைத் தோழர் காளியப்பனின் சிறை அனுபவங்கள் நிறைய படிப்பினைகளைப் பெற்றுத் தந்துள்ளன. அவற்றை நம்முடன் பகிர்ந்து கொண்ட தோழருக்கு புரட்சிகர வாழ்த்துக்கள்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு மக்களை ஒன்றிணைக்கும் தங்களின் பணி அபாரமானது. என்றென்றும் எங்களின் பங்கு உண்டு.

**மாவோதமிழ்மணி**

**தஞ்சாவூர்**

❋ ஜூன் 1 — 15 இதழில் ''சாதி மத அவமானச் சின்னங்களை அழிப்போம்'' என்று தாங்கள் விடுத்திருக்கும் அறைகூவல் மிகச் சரியானது; மிகப் பொருத்தமானது. பள்ளியில் சேருவதிலிருந்து அரசாங்க வேலைக்கு விண்ணப்பிப்பது வரை நம்முடன் சாதிய அவமானச் சின்னம் ஒட்டிக் கொண்டுள்ளது. இதனை நாம் அழித்தேயாக வேண்டும். இதற்காக தாங்கள் முன் முயற்சியுடன் எடுத்துள்ள இப்புரட்சி வருங் காலத்தில் நிச்சயம் சரித்திரம் படைக்கும். இப்புரட்சிப் பணியில் என்னைப் போன்ற இளைஞர்களையும் வரவேற்று இணைத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

**ரவின்**

**மானாமதி**

❋ வளர்ந்து வருகின்ற முற்போக்கு சக்திகளுக்கு மட்டுமல்லாது அனைத்து மக்களுக்கும் எளிமையாகப் புரியும் வகையில் தரகு முதலாளிகளையும், பாட்டாளிவர்க்கத் துரோகிகளையும், ஓட்டுப் பொறுக்கிகளையும் தோலுரித்துக் காட்டும் ஒரு முற்போக்கப் பத்திரிக்கையாய் 'புதிய ஜனநாயகம்' வெளிவருவது தெளிவு.

**ஆ. ராசா**

**மே.ஜெர்மனி**

❋ ஆளும் வர்க்க ஊதுகுழல்களின் பொய்பிரச்சாரங்களை முறியடித்து புதைந்து கிடக்கும் உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் புதிய ஜனநாயகத்தின் பணி மகத்தானது. இலட்சியமற்ற வியாபாரப் பத்திரிக்கைகளின் மத்தியில் மார்க்சிய — லெனினியக் கோட்பாடுகளை நெஞ்சிலே நிறுத்தி புதிய ஜனநாயகப் புரட்சிக்காகப் போராடும் தங்களின் இலட்சியப் பயணம் வெல்க!

**புரட்சிநம்பி**

**சுந்தர பெருமாள் கோவில்**

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

நீங்கள் அனுப்பும் படைப்புகள், ரிப்போர்ட்டுகள், விமர்சனங்கள், வாசகர் கடிதங்களில் உங்களது முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதுங்கள். சிலர் வெறுமனே தங்கள் பெயரையும் ஊரையும் மட்டும் குறிப்பிட்டு எழுதுகின்றனர். இதனால் நீங்கள் அனுப்பியுள்ள கடிதத்தின் மீது விளக்கம் பெற்று வெளியிட இயலாத நிலைமை ஏற்படுகிறது. எனவே தங்கள் முகவரியை தெளிவாகக் குறிப்பிடுங்கள். அவசியத்தை முன்னிட்டு முகவரியை வெளியிட வேண்டாம் என்றால் அதைக் காப்பாற்ற உறுதியளிக்கிறோம். அதேசமயம் சுய முகவரியில்லாமல் வரும் கடிதங்களை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு,
புதிய ஜனநாயகம்.


படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

15

16-30 ஜூன் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# இடைத்தேர்தல்கள்: பாசிச கும்பலின் பயபீதி

ஏழு நாடாளுமன்றத் தொகுதிகளிலும், பதினோரு சட்டமன்றத் தொகுதிகளிலும் இடைத்தேர்தல்கள். ஓராண்டு காலத்திற்கு மேலாக தள்ளிப்போட்டு தவிர்த்து வந்த இந்த இடைத்தேர்தல்களை வேறு வழியின்றி சந்திக்கிறது, பாசிச ராஜீவ் கும்பல். தோல்வி பயம் பீதியாகி பாசிச ராஜீவ் கும்பலைத் தொற்றிக் கொண்டு விட்டது. தேர்தலுக்குத் தேர்தல் தனி விமானத்தில் பறந்துபோய் பெரும் ஆரவாரத்தோடு சவடால் அடிக்கும் பிரதமர் ராஜீவ் இப்போது இடைத்தேர்தல்கள் நடக்கும் தொகுதிகளின் பக்கமே தலைவைத்துப் படுக்கப் பயப்படுகிறார். இது தான் சாக்கு என்று சொல்லி வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் ஓடிப்போய்த் திரும்பினார்.

"மத்தியிலுள்ள காங்கிரசு அரசாங்கத்தின் தலை விதியைப் பாதகமாக பாதிக்கும் அளவு முடிவு இருக்காது என்பதால் இந்த இடைத்தேர்தல்களை மிகவும் சாதாரண முறையில் கட்சித் தலைமை எடுத்துக் கொண்டுள்ளது" என்று சப்பைக்கட்டு போடுகிறார் காங்கிரசின் பொதுச்செயலாளர். "ஆனால் இந்தத் தேர்தல்களில் தோல்வி கண்டால் அது காங்கிரசின் கொள்கைகளுக்கு ஏற்படும் தோல்வியாகக் கருத முடியாது" என்று முன்கூட்டியே அவர் சொல்லி வைத்துவிட்டார்.

ஆயதபேர ஊழல்கள் வெளிநாடுகளில் கருப்புப்பண குவிப்பு, அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்திலும் தோல்வி ஆகிய காரணங்களால் அம்பலப் பட்டுப் போய் முற்றாக தனிமைப்பட்டுப் போயுள்ளது பாசிச ராஜீவ் கும்பல். வாக்காளர்கள் தீவிரமாக வெறுப்புற்றிருக்கின்றனர். தேர்தல் பிரச்சாரத்துக்குப் போகும் மந்திரிகளை எதிர்க் கூச்சல் போட்டு, கேலி செய்து, அவமானப்படுத்தி விரட்டுகிறார்கள். உத்திரப் பிரதேசம் சாப்ராளி தொகுதியில் ஆத்திரமுற்ற காங்கிரசு பிரமுகர்கள் எதிர்க்கட்சியினர் மீது துப்பாக்கி சூடு நடத்தி 2 பேரைக் கொன்றனர். திரும்பத் தாக்கப் படும் அச்சத்தில் தொகுதிகளை காலி செய்து கொண்டு காங்கிரசு 'ஊழியர்கள்' ஓடிப் போயினர். உ.பி. முதல்வர் வீர்பகதூர் சிங், ம.பி முதல்வர் அர்ஜீன் சிங், காங்கிரசு பொருளாளர் சீதாராம் கேசரி ஆகியோருக்கு துரத்தித்துரத்திக் கருப்புக்கொடி காட்டுகிறார்கள். காங்கிரசு சேவாதள பெண் பிரமுகர் வீட்டில் ஆபாசக் கூத்தடித்துக் கொண்டிருந்த மாநில மந்திரியைக் கெரோ செய்து அவமானப்படுத்துகின்றனர்.

காங்கிரசுக் காரர்கள் எவ்வளவு தூரம் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய தேர்தல் வேலைகளே காட்டிக்கொடுத்து விட்டன. இதற்கு முன்பு நடத்திய தேர்தல் அக்கிரமங்களும் தில்லுமுல்லுகளும் ஒரு கால் தூசு தான் என்று சொல்லுமளவு செய்தால் ஒழிய வெற்றி பெற முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டுள்ளது. ஓரிரு தொகுதிகள் தவிர பெரும்பாலானவற்றில் எதிர்க்கட்சிகள் இடப்பங்கீடு செய்து கொண்டு, கூட்டுச் சேர்ந்து தேர்தல் வேலைகளைச் செய்கின்றன. அதே சமயம் காங்கிரசோ மிக மோசமான கோஷ்டிச் சண்டையில் சிக்கிக் கொண்டுள்ளது. குஜராத்திலும் இராஜஸ்தானிலும் மத்திய பிரதேசத்திலும் இப்போதைய முதல்வர்களின் கோஷ்டிகளுக்கு எதிராக முன்னாள் முதல்வர்களின் கோஷ்டிகள் அடிவெட்டு வேலை செய்கின்றன. போட்டியின் குவிமையமாக விளங்கும் அலகாபாத்தில் உத்திரபிரதேச முதல்வர் கோஷ்டிக்கு எதிராக உள்ளூர் காங்கிரசாரே வேலை செய்கின்றனர்.

எந்த அக்கிரமும் தில்லு முல்லும் செய்து வெற்றி பெற்று விடும் வெறியோடு செயல்படுகிறது பாசிச ராஜீவ் கும்பல். இடைத் தேர்தலுக்குக் காரணமாக இறந்து போனவர்களின் உறவினர்களைத் தேடி நிறுத்தியுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் சினிமா நடிகர்களோடு மந்திரிகள், எம்.பிக்கள், எம்.எல்.ஏகள் ஏராளமாகக் குவிக்கப் பட்டுள்ளனர். உ.பியிலுள்ள தண்டா சட்டமன்றத் தொகுதிக்கு மட்டும் 3 மந்திரிகள், 6 எம்.பிகள் 25 எம்.எல்.ஏகள், 50 ஜீப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளது. அலகாபாத் தொகுதிக்கு 100 கோடியும், தண்டா சட்டமன்றத் தொகுதிக்கு 25 கோடியும் என்று ஏராளமாக அரசுத் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இதே நிலைமைதான் இடைத்தேர்தல்கள் நடக்கும் எல்லா தொகுதிகளிலும். இது தவிர பாசிச ராஜீவ் கும்பலின் கருப்புப் பணம் ஆறாகப் பெருகி ஓடுகிறது. வழக்கமான சாராயமும் விருந்தும் மட்டுமல்ல கிராமங்களுக்கு அபினி-கஞ்சா கூட கிலோ கணக்கில் "சப்ளை" செய்யப் படுகிறது. இவ்வளவும் போதாதென்று வேட்பாளர்களிடையே குலை நடுக்கத்தைத் தோற்றுவித்து வோட்டுச் சாவடிகளைக் கைப்பற்றுவதற்காக சிறையிலுள்ள கிரிமினல் குற்றவாளிகளும் போலீசு ரௌடிகளும் குவிக்கப்படுகின்றனர்.

இதற்கெல்லாம் சளைத்தவர்கள் அல்ல என்ற நிரூபிக்கும் வகையில் எதிர்க் கட்சியினரும் படைதிரட்டுகின்றனர். அலகாபாத் தொகுதிக்கு மட்டும் 5000 பச்சை உடை குண்டர்களை அனுப்புகிறார் அரியானா முதல்வர் தேவிலால். பிரதமர் ராஜீவின் அமேதி தொகுதியில் வோட்டுச் சாவடிகளைக் கைப்பற்றுவதில் சாகசங்கள் புரிந்த வரும், நாட்டிலேயே அதிக வாக்குபெற்று எம்.எல்.ஏ ஆனவரும், முன்னாள் உ.பி மந்திரியும் அர்ஜீன் சிங்,வி.பி.சிங் ஆகியோருக்கு உறவினரும் அமேதி முன்னாள் ராஜாவுமான சஞ்சய்சிங் அலகாபாத் தொகுதியில் இப்போது வி.பி. சிங்கின் தேர்தல் பொறுப்பாளர். ஆகவே தேர்தல் நாய்ச்சண்டைக்கு எதிர்க் கட்சிகளும் தயாராய் உள்ளன. இந்த இடைத் தேர்தல்கள், அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல்களுக்கு ஒரு முன்னோடியாக இருக்கும் என்பதால் வெறியோடு செயல்படுகிறது பாசிச ராஜீவ் கும்பல். தமது அதிகாரத்தை இழக்கும் அபாயம் நேர்ந்தால் எவ்வளவு தூரம் போயும் காப்பாற்றிக் கொள்ளவே அது முயலும்; நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் துச்சமாகக் கருதி தூக்கி எறியவும் தயங்காது. 12 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஜூன் மாதம் பாசிச இந்திரா கும்பல் கட்டவிழ்த்து விட்ட அவசர நிலை பாசிச ஆட்சியை நிறுவவும் தயங்காது. இந்த இடைத்தேர்தல்கள் அதற்கு சான்றாக இருக்கின்றன!.

www.padippakam.com

# இந்தியப்படை விலகல் இன்னுமொரு மோசடி

ஆஃப்கானை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ரசிய இராணுவம்; கம்பூச்சியாவை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள வியட்நாம் இராணுவம்; அங்கோலாவில் போரிட்டுக் கொண்டிருக்கும் கியூபா படைகள்; இலங்கை மீது படையெடுத்து ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய இராணுவம். இந்த நாடுகளின் ஆக்கிரமிப்பாளர்கள் இப்போது கைக் கொண்டுள்ள ஒரே தந்திரம் ''படிப்படியாக படைகளை விலக்கிக் கொள்வது!'' என்பதாகும்.

ஜெனீவா ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ரசிய இராணுவம் ஆஃப்கானிலிருந்து விலக்கிக் கொள்ளப் படுவதாகவும் அங்கோலாவிலிருந்து கியூபா படையும், கம்பூச்சியாவிலிருந்து வியட்நாம் இராணுவமும் விலக்கிக் கொள்ளப் படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கியூபாவையும், வியட்நாமையும் முந்திக் கொண்டு அவர்களுடைய எஜமானின் அடியொற்றிப் படை விலக்கு நாடகமாடுகிறது ராஜீவ் கும்பல். லட்சம் பேருக்கும் மேலாக இராணுவத்தையும், கனரக ஆயுதத் தளவாடங்களையும், விமானப் படையும் குவித்துள்ள ரசியாவாவது சில ஆயிரம் பேரை விலக்கிக் கொண்டது. அதே அளவு படை கொண்டு ஆக்கிரமித்துள்ள இந்திய பாசிச ராஜீவ் கும்பல் சில நூறு பேர்களை மட்டுமே விலக்கிக் கொண்டுள்ளது. எட்டாண்டுகளில் 15000 இராணுவத்தினரைப் பலி கொடுத்தது ரசியா. இந்தியாவோ 1000 பேரைத் தான் பலிகொடுத்தது ஒரு வேளை இன்னும் கூடுதலாக உயிர்ப் பலி கொடுக்க நினைக்கிறதோ என்னவோ! எப்படியாயினும் ஆக்கிரமிப்பாளர்கள் நடத்தும் இந்தப் படை விலக்குகள் எல்லாம் வெறும் பித்தலாட்டம்; வெறும் நாடகம்; உலக மக்களையும் உள்நாட்டு மக்களையும் ஏய்ப்பதற்கான தந்திரம் மட்டுமே. ஏனெனில் ஆக்கிரமிப்பு - படையெடுப்பின் போது இவர்கள் சொன்ன காரணங்கள், நோக்கங்கள் எதுவும் நிறை வேறவில்லை. யாரை எதிர்த்து இவர்கள் போரிட்டார்களோ அந்த எதிரிகளிடம் எந்த ஒரு ஒப்பந்தத் திற்கும் வந்து விடவில்லை. ஆஃப்கான், கம்பூச்சியா, அங்கோலா மற்றும் ஈழத்தில் இன்னமும் போர் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ''படிப்படியாக படை விலக்கு!'' என்கிற மோசடி செய்து கொண்டே போரினால் வெறுப்புற்ற, களைத்துப்போன, தோல்வியுற்ற சக்தியிழந்த ஒரு படைப்பிரிவினரை விலக்கிக் கொண்டு ரகசியமான முறையில் புதிய படைப்பிரிவினரை களத்தில் இறக்குவது என்பது தான் ஆக்கிரமிப்பாளர்களின் உண்மையான நோக்கம்.

ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய படை பலம் என்ன, பலியானவர்கள் எவ்வளவுபேர் என்பதை பாசிச ராஜீவ் கும்பல் ரகசியமாகவே வைத்துக் கொண்டிருக்கிறது. ஜெயவர்த்தனே கும்பலுக்குக் கூட அந்த ரகசியத்தைச் சொல்ல மறுக்கிறது. 56,000 படையினர் இலங்கையில் ''அமைதிப் பணி'' புரிவதாகவும் இது வரை 450 பேர் மாண்டு போனதாகவும் கூறுகிறது. இலங்கை அரசு வெளியிட்டுள்ள தகவல்படி 70,000 படையினர் உள்ளனர். 700 பேர் பலியாகினர். 1,30,00 இந்திய இராணுவத்தினர் ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாகவும், 1000 பேருக்குமேல் அழித்தொழிக்கப் பட்டதாகவும், மே மாதத்தில் மட்டும் 120 பேர் கொல்லப் பட்டனர் என்றும் புலிப்படையினர் கூறுகின்றனர். இதுதான் உண்மையாக இருக்கும் என்று அதிகாரப்பூர்வமற்ற இராணுவ ஆய்வாளர்களும் பத்திரிக்கையாளர்களும் உறுதி செய்கின்றனர்.

இதில் எவ்வளவு பேர் விலக்கிக் கொள்ளப்பட்டனர் என்பதைச் சொல்ல இந்தியத் தூதரும் சகுனியுமான தீட்சித் மறுத்து விட்டார். இது இராணுவ ரகசியம் - சொன்னால் புலிகள் பலவீனமாக கருதிக் கொள்வார்கள் என்கிறார். இரண்டு தவணைகளில் 600 இராணுவத்தினரும், சில ஆயுதத் தளவாடங்களும் திரும்பியிருப்பதாக அரசு அறிவிப்பு கூறுகிறது. ஆனால் 400 துருப்புகளும் 10 கவச வண்டிகளும், சில லாரிகளும் மட்டுமே கப்பலில் ஏறக் காத்திருந்ததாக செய்தியாளர்கள் (இந்துஜூன்8, 1988) கூறுகின்றனர்.

ஆகவே படைவிலக்கு என்பது வெறும் கண்துடைப்பு, அதுமட்டுமல்ல, ஏதோ, ''அமைதிப்படை தனது களப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டது; போராளிகளை ஒடுக்கி விட்டது; எனவே களப்பணிக்குத் தேவையில்லாத படையினர் திரும்புகின்றனர்'' என்பதாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறதே அதுவும் பொய்யானதாகும். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் எதிர்வரும் தேர்தல்களைக் குறி வைத்து இந்தப் படைவிலக்குகள் நடக்கின்றன.

பொது மன்னிப்பும், தடை நீக்கமும் வேறு சில சலுகைகளும் கொடுத்து சிங்கள இனவெறி இளைஞர் அமைப்பான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி)யை சரிகட்டுவதற்கு ஜெயவர்த்தனே கும்பல் மேற்கொண்ட முயற்சிகள் தோற்றுப் போய் விட்டன. மூன்று கட்டங்களில் நடந்து முடிந்த ஏழு பிராந்திய கவுண்சில் தேர்தல்களில் ஆளும் அய்க்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருப்பதும்; ஜே.வி.பி, மற்றும் பண்டார நாயக்காவினுடைய சிரிலங்கா சுதந்திரா கட்சி விடுத்த தேர்தல் புறக்கணிப்பு கோரிக்கையை மக்கள் நிராகரித்து விட்டதும் ஒப்பந்தத்திற்கு இலங்கை மக்கள் தெரிவித்துள்ள ஆதரவு என்று இரண்டு அரசுகளும் கூறிக் கொள்கின்றன. ஆனால், பாசிச ஜெயவர்த்தனே கும்பலும் அதன் எடுபிடியான அய்க்கிய சோசலிச கூட்டமைப்பும் பெற்ற ''வெற்றிக்காக'' ஏராளமாக உயிர்ப்பலி கொடுக்க வேண்டியிருந்தது. நடந்து முடிந்த தேர்தல்களிலும் பாதிக்கும் குறைவான மக்களே வாக்களித்துள்ளனர்.

ஆகவே, ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, பெரும்பான்மையான சிங்கள மக்களும் பாசிச ஜெயவர்த்தனேயையும்

**அமைப்புச் செய்தி:**

## கொலைவெறி இந்திய இராணுவத்திற்கு எதிராக.....

இந்திய — இலங்கை துரோக ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதாகவும், விடுதலை புலிகளின் கரங்களிலுள்ள ஆயுதங்களைப் பறிமுதல் செய்வதாகவும் கூறிக்கொண்டு தனது மேலாதிக்க விஸ்தரிப்பை நிலை நாட்ட இந்திய ஆளும் கும்பல் இலங்கைக்கு அனுப்பிவைத்த இந்தியக் கொலைவெறி ராணுவம் கடந்த 8 மாதங்களாக ஈழத்தமிழர் பகுதிகளில் சொல்லொணா வெறியாட்டம் நடத்தி வருகிறது. ஈழத்திலுள்ள முல்லைத் தீவு பகுதியை முற்றுகையிட்டு புலிகளின் முகாம்களை அழித்தொழிக்கவும், போராளிகளை நரவேட்டையாடவும் கடந்த சில நாட்களாக முயற்சித்து வருகிறது. இந்திய ராணுவத்தின் இந்தக் கொலைவெறியாட்டத்தை எதிர்த்தும், ஒப்பந்தத்தை அமுலாக்குவது, ஆயுதப் பறிமுதல் செய்வது போன்றவற்றை எதிர்த்தும், இந்திய கொலைவெறி ராணுவத்தை இலங்கையிலிருந்து முற்றிலுமாகத் திரும்பப்பெற வலியுறுத்தியும் கடந்த 2.6.88 அன்று மாலை 4 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் தண்ணீர் தொட்டி அருகிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு திருப்பாதிரிபுலியூர் இரயில்வே அஞ்சல் பிரிப்பகம் (ஆர்.எம்.எஸ்.) வந்தடைந்து அங்கு ம.க.இ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இத்தகைய சூழ்நிலையிலும்கூட மழுப்பல் அறிக்கை, மடிப்பிச்சை கேட்கின்ற மாவீரன் கும்பலையும் வீரமணி, கருணாநிதி கும்பலையும் அம்பலப்படுத்தி ஆர்ப்பாட்ட இறுதியில் உரையாற்றப்பட்டது. திரளான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஆதரித்து ஊக்குவித்தனர்.

தகவல்: மக்கள் கலை இலக்கியக் கழகம், கடலூர் கிளை.

படிப்பகம்

www.padippakam.com

இந்திய ஆக்கிரமிப்பையும் எதிர்க்கிறார்கள். ''படை விலக்கு'' நாடகத்தின் மூலம் பிராந்திய தேர்தல்களிலும் எதிர்வரும் அரசுத் தலைவர் தேர்தலிலும் சிங்கள மக்களின் ஆதரவைப் பெற முடியும் என்பது ஜெயவர்த்தனேயின் நம்பிக்கை. இந்திய எதிர்க் கட்சிகளும், சில ஈழப் போராளி அமைப்புகளும் கூறுவதைப் போல இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஜெயவர்த்தனேயின் தந்திரத்தினால் இந்தியாவை சிக்கவைப் பதில் - அடைந்த வெற்றி அல்ல. இலங்கையின் மீது மேலாதிக்கம் வகிப்பதற்கான வகையிலானது தான். எனவே ஜெயவர்த்தனே கும்பல் தனக்குச் சாதகமான வகையில் மறு ஒப்பந்தம் போட மீண்டும் மீண்டும் முயலுகிறது. நேபாளத்தில் நடந்த ''சார்க்'' தலைவர்கள் சந்திப்புக்கு ஜெயவர்த்தனே வந்த போதும், அவரது மந்திரி காமினி திசநாயகே டெல்லிக்குத் தூது வந்த போதும் இதற்கு முயன்றனர். ஆனால் இந்திய ஆளும் கும்பல் நிராகரித்து விட்டது.

கடந்த மாதம் கொழும்பு போன இந்திய இராணுவ மந்திரி கே.சி. பந்த் மறு ஒப்பந்தத்திற்கு மறுத்து விட்டார். எனவே தான் இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தைத் திரும்பப் பெறுவதற்கான ஒப்பந்தம் எதுவுமின்றி வெறுமனே ''களப்பணிக்குத் தேவையில்லாத படைகளைத் திரும்பப் பெறுவது'' மட்டும் நடந்துள்ளது.

அதே சமயம் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக சிங்கள மக்களின் வெறுப்பு அதிகரித்து வருவதையும் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது, ''இந்திய அமைதிகாக்கும் படை ஒரு போதும் இந்தியா திரும்பாது; இறுதியில் இலங்கையையே கைப்பற்றிக் கொள்ளும் என்கிற பயம் பொது மக்களிடையே பரவலாக உள்ளது. இந்தச் சந்தேகங்களைச் களைவதற்காகவும் கூட படைகள் திரும்பப் பெறப்படுகின்றன. 'இந்தியாவின் நோக்கங்கள் குறித்த சந்தேகங்களையும், பயத்தையும் முடிவுக்குக் கொண்டு வர இது தொடக்கமாக இருக்கும் என்று நம்புகிறேன்' என்று வழியனுப்பு விழாவில் தீட்சித் கூறினார்'' (இந்து ஜூன் 8)

''இந்தியப் படைகள் இந்தத் தீவில் நிரந்தரமாகத் தங்கி விடும் நோக்கமில்லை என்று கோடிட்டுக் காட்டுவது, இப்போது இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் தேர்தல்களில் இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்கும் அரசியல் கட்சிகளின் வெற்றிக்குச் சாதகமாக அமையும்'' (இந்து ஜூன் 8) என்று அவர்களே கூறுகிறார்கள். அதேபோல இலங்கை அரசுத் தலைவர் - நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தமிழ் நாட்டுத் தேர்தல்களிலும் வெற்றி பெறவே ''படை விலக்கு'' - உதவும் என்று நம்புகிறார்கள். இதே நோக்கத்துக்காக ஈழத்திலும் மாநிலக் கவுண்சில் தேர்தல்களை எப்படியாவது நடத்தி விட முயலுகிறார்கள்.

விடுதலைப் புலிகளுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வருவதன் மூலமோ, அல்லது அவர்களை அடியோடு ஒழிப்பதன் மூலமோ மிக விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். அதற்காக பிரபாகரனுடன் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாகவும் பிரபாகரனையும் மாத்தையாவையும் உள்ளிட்டு விடுதலைப் புலிகளின் பிராதனப் படையை சுற்றி வளைத்து விட்டதாகவும் எந்த நேரத்திலும் அவர்கள் பிடிபடுவார்கள் என்பதாகவும் பிரச்சாரம் செய்கிறார்கள். ஒரு பிரிவுப் போராளிகளுடன் இரகசிய உடன்பாடு காண்பதன் மூலமாகவோ, அல்லது, இராணுவ ரீதியில் அவர்களை அழிப்பதன் மூலமாகவோ எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. பாசிச ராஜீவ் கும்பல் திரும்பத் திரும்ப இந்த வழியில் முயன்றும் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமற் போனது என்கிற படிப்பினையை ஏற்க மறுக்கிறார்கள்.

பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இரகசிய பேரத்துக்கு உடன்பட்டு துரோகம் செய்தாலும் சுய நிர்ணய உரிமைக்கான ஈழமக்களின் விடுதலை வேட்கையை விலை கொடுத்தும் வாங்க முடியாது! அழித்து விடவும் முடியாது! ஈழத் தமிழர்களின் ஒரு புதிய தலைமுறை எழுந்து போரிடும்!

**—மாணிக்கவாசகம்**



**யாழ் மக்களிடமிருந்து தப்பிவந்த மகிழ்ச்சியில் இந்திய ராணுவ வீரர்கள்**

## அவமானச் சின்னத்தை அழித்தோம்!

சாதி மத அவமானச் சின்னத்தை அழிப்போம் என்ற தலைப்பில் தாங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பு காலத்துக்கேற்ற அவசியமான வழிகாட்டுதல். அது சம்பந்தமான எமது அனுபவத்தைக் கூறுவது வாசகத் தோழர்களுக்கும் பயனுடையதாய் இருக்கும். சாதியை ஒழிப்பதாகப் பீற்றிக் கொள்ளும் இந்த அரசும் அரசியல் தலைவர்களும், மன முவந்து சாதி, மதமற்றவர் என முன் வரும் முற்போக்கு, புரட்சிகரமானவர்களை அங்கீகரிப்பதில்லை.

மூன்றாண்டுகளுக்கு முன் எமது மகள் கனலை பள்ளியில் சேர்க்கும் போது சாதி அற்றவர் மதமற்றவர் என எழுதிக் கொடுத்தோம். ஆனால் தலைமை ஆசிரியர் அப்படி சேர்ப்பதற்கு சட்டப்படி வழியில்லை என கூறிவிட்டார். ஆனால், ''நங்கள் அப்படி எந்தச் சாதியையும் அல்லது மதத்தையும் சேர்ந்தவர்களல்ல. உங்கள் பார்வையில் பார்த்தால் கூட நாங்கள் இருவரும் வேறுபட்ட சாதியையும் வேறுபட்ட மதத்தையும் சேர்ந்தவர்கள். எமது குழந்தைகளுக்கு எங்களில் யாருடைய மதத்தை அல்லது சாதியை குறிப்பிடுவது?'' என வாதிட்டோம். மேலதிகாரிகளை விசாரித்து வந்து கூறுவதாகக் கூறி எங்களை அனுப்பி விட்டார். பிறகு திரும்பச் சென்ற போது எதிர்காலத்தில் எமது குழந்தைக்கு எந்த விதத்திலும் சாதிச் சலுகைகள் கோருவதில்லை என உறுதி மொழியை எழுதி வாங்கிக் கொண்டு பிள்ளையைச் சேர்த்துக் கொண்டனர்.

சென்ற ஆண்டு எமது மகன் சமரனை சேர்க்கும் போது ஏதும் பிரச்சினை இல்லை. கனலைச் சேர்ந்த அனுபவத்தால் தலைமை ஆசிரியர் எந்த மறுப்பும் செய்யவில்லை.

அதோடு பெண்ணடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் விதமாக தந்தையின் முன்னெழுத்தை மட்டும் போடுவதைத் தவிர்த்து, தந்தை-தாய் இருவரது பெயரின் முன்னெழுத்தையுமே தலைப்பெழுத்தாக (Initial) இரு குழந்தைகளுக்குமே கொடுத்துள்ளோம்.

தேவபாண்டலம்
கல்லை வட்டம்

**கதிர்வேலன் - சவுந்தரி**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**

படிப்பகம்

www.padippakam.com

# பாசிச விதேசி ராஜா



அலகாபாத் இடைத்தேர்தல். அனல் பறக்கும் பிரச்சாரம். பிரமித்துப் போன இரண்டு சிறுவர்கள் பேசிக் கொள்கிறார்கள். அலகாபாத் தொகுதியிலுள்ள மாண்டா சமஸ்தானத்தின் வளர்ப்பு மகன் ராஜாசாகேப் - வி.பி சிங்கின் அருமை பெருமைகளைச் சொல்லுகிறான் ஒரு சிறுவன்.

''ராஜீவ் கூட ஒரு ராஜா என்று தான் சொல்லுகிறார்கள். ஆனால் அவர் விதேசி (வேற்று நாட்டு) ராஜா வாம்'' என்று தனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறான் வேறோரு சிறுவன்.

உண்மைதான். ஒரு வீரிய ஒட்டு ரகத்தைச் சேர்ந்த விதேசி ராஜாக்கள் நாட்டை ஆளுகிறார்கள். அவர்களுக்கு இந்த இந்திய நாட்டு மண்ணில் வேரும் கிடையாது, விழுதும் கிடையாது. அதாவது இந்த நாட்டின் யதார்த்த நிலைமைகளோடு எவ்விதத் தொடர்பும் இல்லாது அந்நியமாகிப் போனவர்கள். அவர்களுக்கென்று ஒரு 'அரசியலோ கொள்கையோ' கிடையாது. அவர்களுக்கென்று ஒரு 'ஒழுக்கமோ மரபோ' கிடையாது. இந்திய மக்களை இந்திய யதார்த்தத்தை அவர்கள்வெறுக்கிறார்கள். ஆங்கிலேயக் காலனியவாதி மெக்காலே தனது கல்வி முறையை அறிமுகப் படுத்தியபோது சொன்னான் ''நிறத்தாலும் ரத்தத்தாலும் இந்தியர்களாகவும் உணர்வாலும், சிந்தனையாலும், பழக்கவழக்கங்கள் பண்பாடால் ஆங்கிலேயர்களாகவும் உள்ள ஒரு அதிகார வர்க்கத்தை உருவாக்க வேண்டும்''. நிறத்தையும் ரத்தத்தை கூட மாற்றிக் கொள்ளும் ஆசையோடு இப்போதைய விதேசி ராஜாக்கள் வெள்ளையர்களைத் தேடிப் பிடித்து திருமணம் செய்து கொண்டு ஒரு கலப்பினத்தை உருவாக்குகிறார்கள்.

முன்னாளைய அரசர்களைப் போலவே அரசு சொத்துக்களை அரசாங்கக் கருவூலத்தைத் தமது சொந்த சொத்தாக கருதி தமது அந்தபுர, உல்லாச, ஆபாச வக்கிர வாழ்வுக்கு வாரி இறைக்கிறார்கள். பாசிச இந்திராவால் அரசியலில் திணிக்கப்பட்டு, அவர் கொலைக்குப் பிறகு அதிகாரப் பொறுப்பேற்றுள்ள இந்த விதேசி கும்பல் நாளும் சுருங்கி வருகிறது. வெகு சிலரேயான இவர்கள் மெய்க் காப்பாளர்களும் முகஸ்துதி பாடுபவர்களும் சூழ செல்வச் செழிப்பிலே மிதக்கிறார்கள். முட்டாள்தனமும் கோமாளித்தனமுமே அவர்களுடைய தகுதி. விளம்பர நிறுவனங்கள், பத்திரிக்கைகள், வானொலி - வானொளி பிரச்சாரங்களினால் அதீதமாகத் தூக்கி நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

வெறுக்கத்தக்க இந்த விதேசி ராஜாக்களைப் பற்றி சற்று விரிவாகவே தெரிந்து கொள்ள வேண்டும். மக்களின் முதுகிலேறி சவாரி செய்யும் இவர்களை தூக்கியெறிய இது அவசியம்.

## யார், யார்? அப்படி வந்தார்கள்

தற்போது நாட்டை ஆளும் ராஜீவையும் அவரது மனைவி உட்பட இந்த விதேசி ராஜாக்களும், ராணிகளும் மந்திரி பிரதானிகளும் ஆக அனைவருமே இந்தியாவோடு இந்திய மக்களோடு பூர்வீக உறவு கொண்டிருந்தார்கள் என்பதைத் தவிர அந்நியர்கள். இந்தியர்களே அல்லாத, இந்தியத் தன்மையே இல்லாத ஒரு பிரிவை, ஒரு தலைமுறையை இவர்கள் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.

தற்போது ஆட்சியிலுள்ள பாசிச ராஜீவ் கும்பல் பரம்பரை வாரிசுரிமை கொண்டாடும் நேரு - இந்திரா வரிசையில் இது மூன்றாவது தலைமுறை.நேருவின் தலைமுறையிலேயே காந்தீய-காங்கிரசு தலைவர்களும், உயர்மட்ட அதிகாரவர்க்கத்தினரும், தொழில் நிர்வாகிகளும், தரகு அதிகார முதலாளிகளும், முன்னாள் அரசர்களும் தமது வாரிசுகளை அந்நிய கல்வி கலாச்சாரம், வாழ்க்கை முறைகளுக்குப் பயிற்றுவித்தனர். இந்தியாவிலேயே சீமான் வீட்டுப் பிள்ளைகளின் உயர்ரகப் பள்ளிகளிலும், அமெரிக்க - ஐரோப்பிய கல்லூரிகளிலும் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தாலும் இந்திரா, சஞ்சய், ராஜீவைப் போல இவர்களில் பலரும் எவ்விதத் தகுதியும் பெறமுடியாத தறுதலைகளாகவே வந்து சேர்ந்தனர். வெறும் பகட்டு, மேல்சாதி திமிர், பரம்பரைத் தற்பெருமை, அகங்காரம் ஆணவம் ஆகியவற்றை தவறாமல் வளர்த்துக் கொண்டனர். அரசியல், நிர்வாக அதிகாரமும், சொத்துக்களும் கிடைத்ததும் கள்ளும் சாராயமும் கலந்து குடித்த குரங்குகள் போல ஆட்டம் போடுகிறார்கள்.

அரசியல்,நிர்வா கத்தகுதிகள் எதுவுமே இல்லாத இந்த விதேசி ராஜாக்கள் தமது ''ராஜ்ய பரிபாலனத்தை'' நடத்திச் செல்வதற்காக தன்னைச் சுற்றி இன்னுமொரு கும்பலை திரட்டிக் கொண்டுள்ளார்கள். எனவே தான் பத்திரிக்கையாளர்கள், சினிமாக்காரர்கள், விளம்பர ஆலோசகர்கள், கூட்டுப் பங்கு ஆலைகளின் முதலாளிகள் - நிர்வாகிகள், வெளிநாடுகளில் குடியிருக்கும் இந்தியப் புதுப் பணக்காரர்கள், பன்னாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் - வல்லுநர்கள் ஆகியோர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துள்ளார்கள்.

அந்நிய - ஏகாதிபத்தியப் பின்னனி இருப்பினும் இந்த விதேசி ராஜாக்களின் கும்பல் ஒரு நிலப்பிரபுத்துவ விசுவாச அடிப்படையில்தான் உருவாகி இருக்கிறது. பழைய நேரு - இந்திரா பரம்பரையினுடைய இரத்த உறவுகளுக்கும் அதன் விசுவாசிகளான காந்தீய-காங்கிரசு தலைவர்களின் வாரிசுகளுக்கும் முக்கியத்துவளிக்கப்படுகிறது. இவர்களோடு பாசிச ராஜீவ் கும்பலோடு பள்ளி - கல்லூரி கேளிக்கை விடுதி கூட்டாளிகளும் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள் கட்சி மற்றும் அரசு நிறுவனங்கள். அவற்றின் பொறுப்பில் உள்ளவர்கள் வெறும் எடுபிடிகளாக நடத்தப்படுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இரண்டு முன்னாள் விமான ஓட்டிகளான சத்தீஷ் சர்மா, ராஜேஷ் பைலட், ஒரு சினிமாக்காரனான அமிதாப்பச்சன், ஒரு தொழில் நுட்பக்கில்லாடி சாம்பிட்ரோடா, ஒரு கேளிக்கை விடுதி உல்லாசப் பேர்வழியான ரோமி சோப்ரா, ஒரு மோசடி முதலாளி திருபாய் அம்பாணி, ஒரு அரசியல் தரகன் பூடாசிங், மற்றும் ஒரு அதிகார வர்க்க தரகன் கோபி அரோரா - இவர்கள் தான் இன்று நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் முக்கிய புள்ளிகள்.

விதேசி ராஜாக்களின் ராஜா பேரரசர் ராஜீவுக்கு மிகமிக நெருங்கிய கூட்டாளிகள் பச்சன் சகோதரர்கள். இந்திரா காலத்திலிருந்தே குடும்ப விசுவாசிகளும் சினேகிதர்களாக இருக்கும் கும்பல் இது. இப்போது அமிதாப்பச்சன் ராஜீவின் அரசியல் ஆலோசகர் அவர் தம்பி அஜிதாப்பச்சன் ராஜீவின் வெளி நாட்டு சொத்துக்களுக்கு பினாமி. மர்மங்கள் நிறைந்த பெரும் தரகு அதிகார முதலாளிகளான திருபாய் அம்பானி, இந்துஜா குடும்பங்களோடு அமிதாப் - அஜிதாப் மூலம் ராஜீவ் உறவு வைத்துள்ளார். அடுத்து ராஜீவின் சக விமான ஓட்டியாக இருந்த சத்தீஷ் சர்மா; ராஜீவைப் போலவே இவருக்கு இத்தாலிய மனைவி உண்டு. ராஜீவின் அமேதி தொகுதிப் பொறுப்பிலிருந்து தொடங்கி, நாடா

படிப்பகம்

www.padippakam.com

ளுமன்ற மேலவை உறுப்பினராகவும், ராஜீவின் முக்கிய அரசியல் ஆலோசகராகவும் பெரும் தரகு அதிகார முதலாளிகளுக்கும் ராஜீவுக்கும் இடைத்தரகராகவும் உயர்ந்தார்.

கலாச்சார கேளிக்கை விடுதிக் கூட்டாளிகளான ரொமேஷ் சோப்ரா, ராஜீவ் சேத்தியா ஆகியோர் அடுத்து வரும் முக்கியக் கூட்டாளிகள். ராஜீவின் டூன் பள்ளி சகாவான ரொமேஷ் சோப்ரா அரசியல் கலாச்சார ஆலோசகர், இவரது ஆலோசனைகளின் பேரில்தான் வெளிநாடுகளில் கலாச்சார விழாக்களும் உள்நாட்டில் நமது கலாச்சார விழாக்களும் இந்திராவின் சமாதியை சக்திதளமாக அலங்கரிப்பது, 40வது சுதந்திர ஆண்டு ஓட்டம்' தண்டி யாத்திரை போன்றவை நடந்தன. கூலிக்கு ஆள்பிடித்து ராஜீவுக்கு கூட்டம் சேர்க்கும் முக்கிய பொறுப்பாளர். அரசுத்துறைத் தொழில்களைப் பின்னுக்குத் தள்ளி தனியார் துறைக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என்பதற்கான திட்டம் வகுத்தார். முன்பு இந்துஸ்தான் தாம்சன் என்கிற விளம்பரக் கம்பெனி தலைமை நிர்வாகியாக இருந்தவர். ராஜீவ் சேத்தியா - கலாச்சார விழாக்களுக்குப் பொறுப்பானவர் நேருவின் உறவினரும், இந்திராவின் தலைமை ஆலோசக அதிகாரியாகவும் இருந்த எல்கே ஜாவின் மருமகன்.

இவர்கள் தவிர தரகு அதிகார முதலாளிகளான கோயங்கா, பரத்ராம் ஆகிய முந்திய தலைமுறையினரோடு ராஜீவின் டூன் பள்ளி சகாக்களும் தரகு அதிகார முதலாளிகளின் வாரிசுகளான விவேக்ராம், மோகன் தடானி, லலித்தபார் ஆகியோர்களும் ராஜீவின் நெருங்கிய கூட்டாளிகள். டூன் பள்ளி மற்றும் ஐரோப்பிய - அமெரிக்கக் கல்வி கற்றவர்களான மாண்டேக் சிங் அலுவாலியா, விஸ்வஜீத் பிரிதிவிஜீத் சிங், சாம்பித்ரோடா, சிதம்பரம், சுமன்துபே போன்ற அரசியல், நிர்வாக, தொழில்-நுட்ப ஆலோசகர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

விதேசி ராஜா ராஜீவைப் போலவே, விதேசி ராணி சோனியா தனியே ஒரு சபையை வைத்துக் கொண்டு இயங்குகிறார். மந்திரிசபை மாற்றங்கள், ஆயுத பேரங்கள், இலங்கை ஆக்கிரமிப்பு போன்ற அனைத்து விவகாரங்களிலும் சோனியா தலையிடுகிறார். அமிதாப் பச்சன் மனைவி ஜெயா பாதுரி, சத்தீஷ் சர்மாவின் இத்தாலிய மனைவி ஸ்டெரா, டூன் பள்ளி சகாவான தரகு முதலாளி மோகன் தபாரின் மனைவி நிமா, மத்திய மந்திரி ராஜேஷ் பைலட்டின் மனைவி ரமா, மத்திய இராணுவ மந்திரி பந்தின் வெளிநாட்டு மனைவி இலா, எம். பி. அஜித் ஜோகியின் மனைவி ரேணு, வீடு-அரசு அலங்கார வல்லுநர் சுனிதா கோலி ஆகியோர் அடங்கிய ஒரு ''அந்தப் புற மந்திரி சபை'' தனியே இயங்குகிறது.

இந்த ''அந்தப்புற மந்திரி சபை'' உருவான விதமே வினோதமானது. சோனியாவோடு தினசரி பூப்பாந்தாடுபவர் ரமா, சோனியாவோடு கடைவீதிக்குப் போய் அழகு-கலைப் பொருட்களை வாங்குபவர் ஜெயா. ராஜீவின் மகள் பிரியங்காவிற்கு மத்திய மந்திரி சிவசங்கரின் மகள் நாட்டியம் சொல்லித்தருவதால் நெருக்கமானார். பிரதமரின் குதிரைப் பந்தய மைதான சாலை வீடு, லண்டன் விருந்தினர் மாளிகை, பிரதமரின் அலுவலகம், பிரதமர் பயணம் செய்யும் தனி விமானம் ஆகியவற்றை அழகுபடுத்தியதால் சுனிதா கோலி நெருக்கமானவரானார். மத்தியப் பிரதேசம், இந்தூரிலிருந்து 6 கத்தோலிக்க பாதிரிகளை உளவாளிகள் என்று சந்தேகித்து நாடுகடத்தும் உத்திரவு போட்டார், மந்திரியாக இருந்த போது அருண் நேரு. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த சோனியாவிற்கு ஆத்திரம் வந்தது. சோனியாவுக்காக அந்த உத்திரவை ரத்து செய்த இந்தூர் கலெக்டர் அஜீத் ஜோகியை எம்.பியாக்கினார். அவரது மனைவிதான் ரேணு - சோனியாவின் அரட்டைக்குத் தோழி. ஜோகியின் சகோதரியோ சோனியாவின் தயவால் இத்தாலிக்குக் குடியேறி விட்டார்!

நாட்டை ஆளுவது விதேசி ராஜாக்கள் என்கிற போது வெறும் வர்ணனை மட்டுமல்ல; வெளிநாட்டு குடிகளாகி விட்ட இந்தியர்களும் கூட இங்கே ஆதிக்கம் வகிக்கிறார்கள். இவர்கள் ஆயுதபேர ஊழல்களிலும், வெளிநாடுகளில் ராஜீவின் சொத்துக்களுக்கும் பினாமிகளாக உள்ளார்கள். ராஜீவ் கும்பலோடு ரத்த உறவுடையவர்கள். சோனியாவின் சகோதரி அனுஷ்காவின் கணவர் வால்டர் வின்சியோடு அஜிதாப்பச்சனின் சகபாடி அத்வானியும் சோனியாவின் இத்தாலிய குறுநில அரசு குடும்ப நண்பரின் மைத்துனன் அகாத் ஷிப்தானியும் போஃபார்ஸ் ஆயுத பேரத்தில் ராஜீவின் பினாமியாக இருப்பவர்கள். சோனியாவின் இன்னொரு சகோதரி நாடியாவின் கணவரானஸ்பெயின் நாட்டு இத்தாலிதூதர் ஜோஸ்வோல்டிமோரே பேஃபார்ஸ் பேரத்தில் சம்பந்தப்பட்டவரும் கொலை செய்யப்பட்டவருமான சுவீடன் பிரமர் ஒலஃப்பாமேயின் இறுதிச் சடங்கில் ராஜீவுடன் கலந்து கொண்டுள்ளார். சோனியாவின் நெருங்கிய நண்பர் ஒட்டாவியோ குட்ரோச்சி இத்தாலிய பன்னாட்டு கம்பெனியான ஸ்நாம் புரோகெட்டியின் பிரதிநிதி. இக்கம்பெனி இந்தியாவில் ஏராளமாக முதலீடுகளும் ஒப்பந்தங்களும் போட்டுள்ளது. காலாவதியாகிப் போன வெஸ்ட்லாந்து எலிக்காப்டர் விமானங்களை வாங்குவதில் ராஜீவுக்கும் ஒட்டாவியோவுக்கும் நண்பரான தரகு முதலாளி லலித்தபார் இடைத்தரகராக இருந்தார். இங்கிலாந்தின் அந்தக் கம்பெனி இத்தாலிய முதலாளிகளால் விலைக்கு வாங்கப்பட்டது.

இப்படிப்பட்ட இந்திய-இத்தாலி நாடுகளின் பூர்வீகம் கொண்ட விதேசி ராஜாக்களின் கூட்டம் தான் இந்திய நாட்டை ஆளுகிறது.

**அந்நாளைய காலனிய வைஸ்ராய்களைப் போல, அந்நாளைய அரசர்களைப் போல இப்போது ஆளும் விதேசி ராஜாக்களான பாசிச ராஜீவ் கும்பல் ஆடம்பர உல்லாச, வக்கிர மோகம் பிடித்து அலைகிறது. மாளிகை விருந்துகள் உல்லாச சுற்றுப் பயணங்கள் - ஓய்வுகள், வீர சாகச வேட்டைகள், வெளிநாட்டுப் பயணங்கள் எதற்கும் கோடிக்கணக்கில் வாரி இறைத்து கொண்டாடுகிறார்கள் இந்தக் கோமான்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

## அதிகாரத்தில் நீடிக்க செய்யும் தந்திரங்கள்

இந்தியாவையும், இந்திய மக்களையும் வெறுத்தாலும் பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சி அதிகாரத்தில் நீடிக்க வேண்டும்! அதற்காக தன்னை ஆதரிக்கும்படி பல சமூகப்பிரிவு மக்களை உருவாக்கத் தொடர்ந்து முயற்சிக்கிறது. அதற்காக உதிரித் தொழிலாளர்களிலிருந்து தரகு அதிகார வர்க்க முதலாளிகள்-நிலப் பிரபுக்கள் வரை எல்லா பிரிவினரிடையேயும் ஒரு ஒட்டிண்ணிக் கூட்டத்தை உருவாக்குகிறது. பெரிய பெரிய ஏகாதிபத்தியக் கூட்டுப்பங்குக் கம்பெனிகள், பங்கு மார்க்கெட்டுப் புள்ளிகள், தரகு அதிகார முதலாளிகளில் ஒரு பிரிவினருக்கு அதீதமான சலுகைகள் கொடுத்து திடீர் பணக்கார கும்பலை உருவாக்குகிறது. பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, மஞ்சள் புரட்சி, விவசாய உயிரியல் புரட்சி, புதிய விவசாய நுட்பங்கள் மூலம் நவீன முறை விவசாயத்தில் திடீர் பண்ணை முதலாளிகளை உருவாக்குகிறது. கூட்டுப் பங்கு கம்பெனிகள், பன்னாட்டுக் கம்பெனிகள், அரசுத்துறை கம்பெனிகள், மற்றும் பிற தனியார் கம்பெனிகளில் உள்ள தொழில் நுட்ப நிர்வாக வல்லுநர்களுக்கு சிறப்புப் பதவிகள் கொடுத்து ஈர்த்துக் கொள்கிறது. இந்தக் கம்பெனிகளின் தொழிலாளர்களில் ஒரு சலுகை பெற்ற செல்லப் பிள்ளைகளான மேட்டுக் குடியை வளர்க்கிறது. அழுகி முடைநாற்றமடிக்கும் நாடாளுமன்ற அரசியலுக்கு மாற்றாக ஒரு புறம் அரசியலற்ற வாதத்தை முன் வைத்து இளைஞர்களை ஏய்க்கிறது; மறுபுறம் பொறுக்கி அரசியலை வளர்த்து உதிரித் தொழிலாளர்களை ஈர்க்கிறது. பிறகு இளைஞர்கள், உதிரித் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து அடிமட்ட அரசியல் தரகர்களை உருவாக்குகிறது. புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியாவின் சாதி, மத, இனத் தன்மைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விசுவாசக் கூட்டத்தை புதிய தலைமுறையிலிருந்து உருவாக்க முயலுகிறது.

எப்போதும் பாதுகாப்புப் படையும் முகஸ்துதியாளர்களும் புடை சூழ வாழ வேண்டிய இன்றைய பகைமையான அச்சுறுத்தலான நிலைமைகளில் பல பிரிவு சமூக மக்களிடையேயும் தமது விசுவாசத்திற்கான அடிப்படையைத் தேடிக் கொள்வது இந்த விதேசி ராஜாக்களுக்கு அவசியமாயிருக்கிறது. ஏனெனில் அதிகாரத்தையும் அதனால் கிடைக்கும் செல்வம்-வசதிகளையும் தக்க வைத்துக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு அரசியலோ கொள்கையோ கிடையாது. நேரு - இந்திரா காலத்திய சோசலிசம், வறுமை ஒழிப்பு ஆகிய கவர்ச்சிகரமான முழக்கங்களைக் கூட மக்களை ஏய்ப்பதற்கான தந்திரங்கள் என்கிற முறையில் கூட - இவர்கள் வெறுக்கிறார்கள். அப்படிப்பட்ட சமூக பொருளாதார அடிப்படையிலான கவர்ச்சி முழக்கங்களுக்குப் பதில் 21-ஆம் நூற்றாண்டு, நவீனமயம், விஞ்ஞானி - நிர்வாகத்திறமை,



அதி உயர் தொழில்நுட்பம் ஆகிய மேற்கு நாடுகளிடமிருந்து காப்பியடிக்கப்பட்ட முழக்கங்களே முன் வைக்கப் படுகின்றன. இது இந்த விதேசி ராஜாக்களை இந்திய மக்களிடமிருந்து, இந்திய நிலைமைகளிலிருந்து மேலும் அந்நியப் படுத்தி விட்டது. மிகமிகக் குறுகிய மேட்டுக் குடியினரோடு மட்டுமே அதன் தொடர்பை சுறுக்கி விட்டது. அரசு எந்திரம்-பாதுகாப்புப் படைகள், அதிகாரவர்க்கம், அரசியல் தரகர்கள், மாநில மந்திரி மார்கள் அடங்கிய கும்பல் சூழ அந்நாளைய அரசர்களைப் போல மக்களுக்குத் தரிசனம் தருவதோடு சரி. முன்னரே திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சூழ்நிலைமைகளில், பாடம் சொல்லி ஒத்திகை பார்க்கப்பட்ட கூலிபெற்ற ''மந்தையையே'' விதேசி ராஜாக்கள் சந்திக்கிறார்கள்.

இந்திய மக்களைப்பற்றி, இந்திய நிலைமைகளைப் பற்றி இரகசிய உளவுப் படையின் அறிக்கைகள், நவீன முறையில் சந்தை விவரக் கணக்கெடுக்கும் கம்பெனிகள், முகஸ்துதிபாடும் அரசியல் தரகர்கள், அதிகார வர்க்க அறிக்கைகள் மூலம் மட்டுமே விதேசி ராஜாக்கள் அறிந்து கொள்கிறார்கள். போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள், பத்திரிக்கைகள், கல்லூரி-ஆய்வகங்கள், கலாச்சார-சமூக சேவை அமைப்புகளைச் சேர்ந்த ஞான பண்டிதர்களுடன் காலை நேரச் சிற்றுண்டி, மாலை நேரத் தேநீர் விருந்துகளின் போது நடத்தும் அரட்டைகள் மூலம் அறிந்து கொள்ளுகிறார்கள். தவணைமுறையில் தெரிவு செய்யப்படும் கட்சி எம்பிகளுடன் மதிய விருந்தின் போதும் அவர்களிடமிருந்து பெரும்கம்ப்யூட்டர் கேள்வி - பதில்கள் மூலமும் அறிந்து கொள்கிறார்கள். இந்த மூன்று மூலாதாரங்களிலுமே விதேசி ராஜாக்களுக்குப் பிடித்தமான வகையிலே ''விவரங்களை'' உருவாக்கித் தருகிறார்கள்.

நேரு-இந்திரா தலைமுறைகளில் செய்ததைப் போன்ற கவர்ச்சி முழக்கங்கள் கூட இல்லாமல் திறமையான நவீன விளம்பர உத்திகள் மூலமே மக்களைக் கவர்ந்து விட முடியும் என்று பாசிச ராஜீவ் கும்பல் நம்புகிறது. விளம்பரக் கம்பெனிகள் மூலம் செய்யும் பிரச்சாரங்கள், மக்கள் தொடர்பு சாதனங்களான சினிமா, வானொலி, வானொளி ஆகியவற்றைப் பன்மடங்கு பெருக்கி மக்களைப் போதையில் வீழ்த்த முயலுகிறது. 40வது ஆண்டு சுதந்திர ஓட்டம், தண்டியாத்திரை, நூற்றாண்டு விழாக்கள், கலாச்சார விழாக்கள், கூட்டுச் சேரா நாடுகள் - தெற்கு ஆசிய நாடுகள் மாநாடுகள் போன்றவற்றை படாடோபமாகச் செய்து ராஜீவை சர்வதேச கதாநாயகனாக்கிக் காட்டினால் போதும் என்று வேலை செய்கிறார்கள்.

## செல்வ குவிப்பு ஆடம்பர மோகம்

அந்நாளைய காலனிய வைஸ்ராய்களைப் போல, அந்நாளைய அரசர்களைப் போல இப்போது ஆளும் விதேசி ராஜாக்களான பாசிச ராஜீவ் கும்பல் ஆடம்பர உல்லாச, வக்கிர மோகம் பிடித்து அலைகிறது. மாளிகை விருந்துகள் உல்லாச சுற்றுப் பயணங்கள் - ஓய்வுகள், வீர சாகச வேட்டைகள், வெளிநாட்டுப் பயணங்கள் எதற்கும் கோடிக்கணக்கில் வாரி இறைத்து கொண்டாடுகிறார்கள் இந்தக் கோமான்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை நண்பர்கள் உறவினர்களுடன் ஓய்வு எடுக்கப் போகிறார்கள். முதலாண்டு ராஜாஸ்தானிலுள்ள ரத்தாம்பூர் தேசியப் பூங்கா, மறு ஆண்டு அந்தமான் தீவுகள், மூன்றாம் ஆண்டு லட்சத்தீவுகள். ஒவ்வொரு முறையும் இந்திய - இத்தாலிய பூர்வீகம் கொண்ட விதேசி ராஜாக்களின் பெருங்கூட்டம் அரசு இராணுவ விமானங்கள், கப்பல்கள் உட்பட கோடி கோடியாக அரசுப் பணத்தை விரயமடிக்கிறார்கள். ஒருமுறை மந்திரி சபை முழுவதும் ராஜஸ்தானிலுள்ள சரிஸ்கா பறவைகள் சரணாலயத்திற்கு ''பிக்னிக்'' போனது — மந்திரிசபைக் கூட்டத்தை இயல்பான சூழ்நிலையில் நடத்தப் போனதாக காரணம் சொன்னார்கள். இந்த உல்லாச - ஓய்வுகளின் போது விமானத்தளங்கள் சாலைகள், தங்கும் விடுதிகள் குளுகுளு வசதிகள், உணவு-மது வகைகள், விளையாட்டுப் பொருட்கள் எல்லாமே வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

''கருப்பர்'' களையும், பழங்குடிகளையும் வேடிக்கை பார்க்கப் போகும் வெள்ளைக்கார சுற்றுப் பயணியைப் போல மக்களிடம் வந்து போகிறது பாசிச ராஜீவ் கும்பல்-குறிப்பாக ராஜீவ் மட்டும் மூன்றாண்டுகளில் இப்படி 50 முறை வந்து போனார். ஒவ்வொரு முறையும் குறைந்தது 20 லட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. பல முறை பாதுகாப்பு ஒத்திகைகள், பரிவாரங்கள், சுற்றுப்பயணம் போகும் ஊர்களை அழகுபடுத்தும் திட்டங்கள், விமானங்கள் இறங்குவதற்கு புதிய தளங்கள் ஆகியவற்றுக்கு வாரி இறைக்கிறார்கள்.

இந்தியாவையும் இந்திய மக்களையும் வெறுக்கும் இந்த விதேசி ராஜாக்

படிப்பகம்

www.padippakam.com

கள் பல நாட்கள் வெளிநாடுகளில் சுற்றித் திரிகிறார்கள். மூன்றாண்டுகள் 30க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பயணம் போனார்கள், ராஜீவ்-சோனியா ஒவ்வொரு முறையும் இரண்டு விமானங்கள் கூடவே பெரிய பரிவாரங்கள். விமானத்தில் படுக்கைகள், சிகரெட்டுகள், உணவு, மதுவகைகள், அலங்கார விரிப்புகள் மற்றும் அனைத்துப் பாவனைப் பொருட்களும் வெவ்வெறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. ஒவ்வொரு நாள் பயணத்துக்கும் ஒரு கோடி வீதம் விழுங்கி ஏப்பம் விட்டனர். வெளிநாட்டு கார்கள் அதிவேகப் பயணம் என்றால் ராஜீவ் தம்பதிக்கு அதீத மோகம். ஜோர்டான் மன்னர் பரிசளித்ததாக ஒரு படகுக் காரும் ஒரு ஜீப்பும்·மலேசிய அரசு பரிசளித்ததாக இன்னொரு படகுக்கார். மன்னர்கள் வேட்டைக்குப் போவது போல பாதுகாப்புப் படையினருடன் பந்தயம் போட்டுக்கொண்டு ராஜீவே அதிவேகத்தில் பாய்ந்து செல்வார். கார்களிலேயே குளுகுளு வசதி, "வீடியோ-டி.வி." இசை அமைப்பு, தொலை பேசி என்று சகல வசதிகளும் உண்டு.

இந்த விதேசி ராஜாக்களின் வீட்டு சுவர்களுக்குப் பூசப்படும் வண்ணத்திலிருந்து கழிப்பறை வரை அனைத்தும் வெளி நாடுகளில் இருந்து வாங்கப்பட்ட விலை உயர்ந்த சரக்குகள். நீச்சல் குளத்தில் பதிக்கப்பட்ட ஓடுகள்-"டைல்ஸ்" கூட இத்தாலியிலிருந்து இறக்கு மதியானவை. இறக்கு மதியான தயாரிக்கப்பட்ட உணவில் அணுக்கதிர் வீச்சு இருக்கிறதா என்றறியும் இயந்திரமும் இறக்குமதியானது. இந்த விதேசி ராஜாக்கள் அணியும்காலணிகள் முதல் தலைக்குத் தடவும் வாசனை எண்ணெய், குளிர்ச்சிக்கு அணியும் கண்ணாடி வரை எல்லாமே வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப் பட்டவை. லட்ச லட்சமாக செலவழித்து பழங்காலக் கலைப் பொருட்களை வாங்கி வீடு, அலுவலகங்கள், பயணம் செய்யும் விமானம், கார் முதலிய வாகனங்களை அழகுபடுத்துகிறார்கள். வெளிநாடுகளுக்குப் போகும்போது அதே போல வைரங்கள், முத்துக்கள், ஓவியங்கள் மற்றும் பிற ஆடம்பரப் பொருட்களை வாங்கிக் குவிக்கிறார்கள்.

கட்சி விழாக்கள், அரசு விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் எல்லாமே பகட்டும் ஆடம்பரமும் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்றே விதேசி ராஜாக்கள் விரும்புகிறார்கள். பம்பாயில் நடந்த காங்கிரசு நூற்றாண்டு விழா, பெங்களூரில் நடந்த சார்க் மாநாடு, டெல்லியில் நடந்த "அப்னா உத்சவ்" என்ற கலை விழா போன்றவை கோடி கோடியாக விழுங்கின. இந்த கோமாளிகள் ஆட்சியில் நடக்கும் கேலிக் கூத்துக்கு ஒரு சில உதாரணங்கள்; விஞ்ஞானி சர்.சி.வி. ராமன் பிறந்த நாளில் கம்ப்யூட்டரில் கொடுத்து ஒரு படம் வரைந்து கொண்டு போய் ராஜீவிடம் காட்டினார்கள். "அருமையாக இருக்கிறது· ஒவ்வொரு மாதமும் ஒரு விஞ்ஞானியின் படத்தை வரைந்து நாட்டிலுள்ள எல்லா பள்ளிகளுக்கும் அனுப்புங்கள்" என்று உத்திர விட்டார். படம் வரையப்பட்ட காகிதம் ஜப்பானில் இருந்து இறக்குமதியானது. ஆண்டுக்குப் பல லட்சம் வீணடிக்கப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க நாட்டுப் பாடல்கள் பதிவு செய்து ஒளிப்பதிவு நாடா, கருவியுடன் எல்லாப் பள்ளிகளுக்கும் அனுப்புமாறு உத்திரவு போட்டார்கள். வறுமை ஒழிப்புத் திட்டத்தின் சாதனைகளை பிரதமருக்கு எடுத்துச் சொல்ல ஒரு விளம்பர நிறுவனத்திடம் பொறுப்புக் கொடுத்து 50 பக்கத்தில் பல வண்ணத்தில் வழவழத் தாளில் அச்சிட்டுக் கொடுத்தனர். பிரதமரைக் கொல்ல முயற்சிப்பவர்களைக் குழம்புவதற்காக அவர் பயணம் செய்யும் வாகனத்தைப் போலவே பல வாகனங்கள் கூடவே போகின்றன. ஓரிரு முறை லண்டன் மெக்சிகோ பயணம் போனபோது விமானம் பொய்யான அபாய ஒலி கிளப்பியது. அந்த விமானத்தை கீழிறக்கி விட்டு வேறு இரண்டு விமானங்களைக் கொண்டு வந்தனர். இதற்கு ஒரு விசாரணைக் கமிசன் போட்டு குற்றவாளி என ஒரு நிர்வாகியைப் பழி வாங்கினார்கள். பிறகு கோர்ட்டில் தவறு நிரூபிக்கப்படடு அவர் மீண்டும் பதவியேற்றார்.

இவ்வளவு ஆடம்பர, உல்லாச, வக்கிர வாழ்வும் அரசு பணத்தைக் கொண்டு நடத்தும் விதேசி ராஜாக்கள் பல வழிகளிலும் தாம் சேர்க்கும் முறைகேடான சொத்துக்களை வெளிநாடுகளில் குவிக்கிறார்கள்.

## இவர்கள் பாசிஸ்டுகள்!

இப்போது நாட்டை ஆளும் இந்த பாசிச கும்பல் அதிகாரத்தையும் அதனால் கிடைக்கும் செல்வம் - உல்லாச வாழ்வையும் சொத்துக்களையும் அனுபவிக்கவும் தக்க வைத்துக் கொள்ளவும் தான் விரும்புகிறார்கள். ஆனால் தற்போதைய நாடாளுமன்ற ஆட்சி முறையை நீட்டிக்கவும், அதன்மூலம் அரசியல் முறையில் மக்களை சரிகட்டவும் தெரியாதவர்கள், முடியாதவர்கள் தமது சுய நலனுக்காக இந்த நாடாளுமன்ற ஜனநாயக நிறுவனங்கள் ஒவ்வொன்றாக சிதைக்கிறார்கள். இதனால் விரக்தியும் வெறுப்பும் அடையும் பழம் காங்கிரசு-காந்திய பெருச்சாளிகளைப் பற்றியோ, எதிர்க்கட்சிகளைப் பற்றியோ அவர்களுக்கு அக்கறையில்லை. அதிகாரம் மேலும் மேலும் குறுகியதொரு கும்பலிடம் - கொஞ்சம் கூட "அரசியல்" வாடையே இல்லாத அந்நிய மோகங் கொண்ட பதவி வெறி பிடித்த கும்பலிடம் - குவிகிறது. நேரு-இந்திரா தலைமுறைகளில் கவர்ச்சித் தந்திரங்களைப் பயன்படுத்தி ஓட்டுப் பொறுக்கி மக்களை ஏய்த்து வந்த பழம் பெருச்சாலிகளை எல்லாம் எட்டி உதைத்து தள்ளி விட்டது. மக்கள் உணர்வுகளைச் சொல்லி அதற்கேற்ப தந்திரங்களை உருவாக்கும்படி கூறும் தைரியம் கொஞ்சமும் இல்லாத முகஸ்துதியாளர்களின் கூட்டம் தான் ஆளும் கட்சியில் எஞ்சியுள்ளது.

காங்கிரசின் அரசியல் தரகர்கள், விளம்பர நிறுவனங்கள், வானொலி, வானொளி, சினிமா முதலிய மக்கள் திரள் தொடர்பு சாதனங்கள், அரசு எந்திரம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு தொடர்ந்து தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று இந்த பாசிச கும்பல் நம்புகிறது. நாடாளுமன்ற ஜனநாயக நிறுவனங்கள் அனைத்தையும் சிதைத்து வரும் அதே சமயம் தொழில் நுட்ப-அதிகார வர்க்க வல்லுநர்களைக் கொண்ட பிரதமரின் செயலகத்தை மட்டுமே வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய நாட்டை ஆண்டு விட முடியும் என்று நம்புகிறார்கள். எனவே, பாசிச அடக்குமுறை ஆட்சி அச்சுறுத்தலாக மட்டுமின்றி நடைமுறையிலும் நெருங்கி வருகிறது என்பதைத்தை தான் விதேசி ராஜாக்களான பாசிச ராஜீவ் கும்பலின் கொள்ளை சுரண்டலும், அம்மண அடக்கு முறைகளும் நிரூபிக்கிறது.



"கருப்பர்" களையும், பழங்குடிகளையும் வேடிக்கை பார்க்கப் போகும் வெள்ளைக்கார சுற்றுப் பயணியைப் போல மக்களிடம் வந்து போகிறது பாசிச ராஜீவ் கும்பல்

படிப்பகம்

www.padippakam.com

# நாடோடிகளாக விவசாயிகள்!

"பசியும் தாகமும்தான் மனிதனின் முதன்மையான உணர்வுகள்; கலை, கலாச்சாரம், காதல், சாதி, மதம், இனம், அரசியல் ஆகிய எல்லா உணர்வுகளும் இரண்டாம் நிலையானவையே''.

எங்கோ கேள்விப்பட்ட வாக்கியங்கள், இவை நிதர்சனமான உண்மை. இதற்கு உதாரணமாய் விளங்குகிறார்கள் தமிழகத்தின் பெரு நகரங்களில் வாழும் 'நாடோடி விவசாயிகள்'. மழையே பெய்யாமல் ஊரே தீய்ந்து போனதால் வேறுவழி இல்லாமல் சொந்த கிராமத்தைவிட்டு, உற்றார் உறவினர்களை விட்டு, உயிருக்கு உயிராய் நேசித்த தமது நில புலன்களையும், கால்நடைகளையும் விற்றுவிட்டு பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், இவர்கள். குறிப்பாக சேலம், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், பெருவாரியாக சென்னையை நோக்கி ஓடி வருகின்றனர். அதிகார வர்க்கத்தினரும், மேட்டுக் குடியினரும் வாழும் சென்னை - அண்ணாநகர், கே.கே.நகர், அசோக் நகர், பெசன்ட் நகரின் விசாலமான சாலையோரங்களிலும் காலியாகஇருக்கும் பொட்டல் வெளிகளிலும் முடங்கிக் கொண்டு தினமும் கட்டிட வேலையைத்தேடி நகரமெங்கும் அலைகிறார்கள். இவர்களைப் போன்றே திருச்சி நகரில் 'சிம்கோ மீட்டர்' கம்பெனியின் எதிர்புறத்தில் முட்புதர்கள் மண்டிய பொட்டல் வெளியில் கூரையே இல்லாமல் வாழ்கிறார்கள், கிராமத்து விவசாயிகள்.

இவர்கள் எல்லோருமே நிலம் ஏதுமற்ற கூலிஏழை விவசாயிகள் அல்ல, பல குடும்பங்களுக்கு கிராமத்தில் நிலமும் கிணறும் கூட இருக்கின்றது. ஆனாலும் என்ன; கிணறும் வறட்சியால் வெடித்து வாயைப் பிளந்து காட்டிவிட்டது.

துவரங்குறிச்சி, பொன்னமராவதி, திருப்பத்தூர், சிங்கம்புணரி, மணப்பாறை ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், இவர்கள்.

கிணறுவெட்டுவது, வீடுகளுக்கு கடைக்கால் வெட்டுவது, சாலைகள் மடிப்பது போன்ற மண் வேலைகளுக்கும், கட்டிடங்களில் சித்தாள் வேலைக்கும் போகிறார்கள். இரவில் கல்லடுப்பு மூட்டி சமைத்துக் கொள்கிறார்கள். அந்த நெருப்பு வெளிச்சத்திலேயே - ஏறக்குறைய இருட்டிலேயே - சாப்பிட்டுவிட்டு அங்கேயே படுத்துக் கொள்கிறார்கள் சிலர் பக்கத்தில் உள்ள கடைகளின் வராந்தாவிலும், ஏதாவது ஒரு வீட்டு வாசல்களிலும் போய் படுத்துக் கொள்கிறார்கள். இரவில் மழை வந்துவிட்டால், குழந்தை குட்டிகளை வாரிக்கொண்டு ஒதுங்க இடம்தேடி அலைகின்ற அவர்களின் வேதனையை சொல்லி முடியாது.

இரவில் எங்கு ஓடி படுத்துக் கிடந்தாலும் சரி, விடிய ஆறு மணிக்கெல்லாம் திடலுக்கு வந்துவிட வேண்டும். சிறுபிள்ளைகள் தூக்கம் கலையாமல் புரண்டு படுக்கும் போது சுளீரென்று தொடையில் விளாசுகிறார்கள். சிறுவர்களுக்கு ஒவ்வொரு நாளும் அழுகை ஒலத்தோடுதான் பொழுது விடிகிறது. அரை மணி நேரத்துக்குள் தட்டு, மண்வெட்டி, கடப்பாறையோடும், கஞ்சிகலையம் கைக் குழந்தையோடும் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் ரோட்டுக்கு வந்துவிட வேண்டும். ரோட்டோரத்தில் காத்திருக்கும் கான்டிராக்ட் மேஸ்திரிகள் ஆளுக்கொரு கும்பலாய் அழைத்துச் சென்றுவிடுவர். வேலை கிடைக்காத ஒரு சிலரும், வேலை செய்ய முடியாத வயதானவர்களும், நோய் கண்டவர்களும் நிழல் கண்ட பக்கமாய் போய் விடுகின்றனர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பொட்டலே மயானமாகிப் போகிறது. இப்போது இந்த திடலைப் புதிதாய் பார்க்கும் எவரும், இங்கு நேற்றிரவு ஓராயிரம் பேர்கள் குடியிருந்தனர் என்று சாமி மேல் சத்தியம் செய்தாலும் நம்ப முடியாது.

காலை, மதியம் இரு வேளையும் பழைய சோறும் நீராகாரமும்தான். இந்த பழங்கஞ்சியை மட்டும் குடித்து விட்டு நாள்முழுவதும் உழைக்க சிறுவர்களால் முடிவதில்லை. வேறு வழியேதும் இல்லாமல் 10,12 வயது மட்டுமே நிரம்பிய சிறுவர்களும், சிறுமிகளும் பிஞ்சுக் கால்கள் நடுங்க பல்லைக் கடித்து கொண்டு மௌனமாய் மண்தட்டு சுமக்கிறார்கள். கர்ப்பமான பெண்கள் ஒன்பது மாதம் முடிந்த பின்னும் வேலை செய்கிறார்கள். உறவினர்கள் கஷ்டத்தை உணர்ந்து தடுத்தாலும் நிற்பதில்லை. கான்டிராக்ட் மேஸ்திரிகளே வேண்டாமென்று சொல்லுகிறவரை வேலைக்கு செல்கிறார்கள.

இதையெல்லாம் பார்க்கின்ற உற்றார் உறவினர்கள் ரத்தக்கண்ணீர் வடிக்கின்றனர். பழைய வாழ்க்கையையெல்லாம்' நினைத்துப் பார்த்து மனம் குமுறுகிறார்கள. ஊரிலும் கஷ்டம்தான் என்றாலும் ஊரோடும் உறவோடும் வாழ்ந்ததில் ஒரு நிறைவு இருக்கவே செய்தது. நிச்சயம் இந்த வெறுமை அப்போது இருக்கவில்லை. இப்படி பழையனவாகி மறந்துபோன சிறுசிறு மகிழ்வான சம்பவங்களையெல்லாம் நினைவில் தொடர்ந்து கொண்டே எந்திரமாய் உழைக்கிறார்கள். விடிந்தது முதல் குடித்த நீராகாரமெல்லாம் வியர்வையாய் வடியும் வரை உழைக்கிறார்கள்.

ஏறக்குறைய இருட்டியபிறகு வெவ்வேறு திசைகளிலிருந்தும் சிறுசிறு வரிசைகளாய் திடலுக்குத் திரும்புகின்றனர். அப்பாவும் மகனும், கணவனும் மனைவியும், அண்ணனும் தங்கையும், அக்காவும் தம்பியும் என்று இணை இணையாய் வருகிறார்கள். போகும்போது இருந்த அதே தலைச்சுமை, கைக் குழந்தை, காலியான கஞ்சி கலையத்தோடு உடல் முழுவதும் புழுதிபடிந்து வரண்டுபோன தலையோடு சோர்ந்து போய் வருகிறார்கள்.

திடலுக்கு வந்தபின் தலைச்சுமையை இறக்கிவிட்டு, கை குழந்தையை புடவைத் தொட்டிலில் கிடத்திவிட்டால், இனிமேல் தான் தூரத்திலிருக்கும் அடிபம்பில் போய் தண்ணீர் அடித்துக்கொண்டு வரவேண்டும்; இனிமேல் தான் கடைக்குச் சென்று அரிசி, மிளகாய், புளி வாங்க வேண்டும், கல்லை மூட்டிச் சமைக்க வேண்டும். சாப்பிட்டு விட்டு எட்டு மணிக்கெல்லாம் உறங்க போனால்தான் ஆறு மணிக்கு எழுந்திருக்க முடியும். இதுதான் இவர்களின் ஒரு நாளைய வாழ்க்கை, ஒரு வாரத்திய வாழ்க்கை, ஒரு மாதத்திய, ஒரு வருடத்திய வாழ்க்கை. பார்த்தீர்களா இந்த வாழ்க்கையை? இந்த வாழ்வின் மிக அடுத்த கட்டம்தான் கொத்தடிமையாகிப் போவது!

''நாயாய் அலைந்து திரிந்தாலும் நாளானால் அதுவே பழகிப்போகும்'' என்று தொந்தி சரிந்தவர்கள் சொல்லித் திரிவ

முட்புதர்கள் மண்டிய பொட்டல் வெளியில், வானமே கூரையாக வாழ்ந்திடும் விவசாயிகள்.



படிப்பகம்

www.padippakam.com

துண்டு. நாலைந்து ஆண்டுகளாய் இந்த நாடோடி வாழ்க்கை இவர்களுக்கு வாடிக்கையாகிப் போனது. ஆனாலும் இது பழகிப் போகவுமில்லை, பிடித்துப் போகவுமில்லை. இந்த அவலம் அவர்களின் கண்களில் ஏக்கமாய், நெஞ்சினில் துக்கமாய் நிறைந்து போயிருக்கிறது.

நான் அவர்களில் சிலரை சென்று சந்தித்தேன். எனது குரல் அவர்களுக்கு ஆதரவானதாய் தெரிந்திருக்க வேண்டும். குமுறல்களையெல்லாம் கொட்டினார்கள்.

“எங்க ஊர்ல எம்பையன் ஆறாங்கிளாஸ் படிச்சுக்கிட்டிருந்தான். மழையில்லாம போயிறவும் இப்படி பாதியிலேயே கூட்டியாந்துட்டோம். இனிமே எப்படிங்க அவன படிக்க வைக்க முடியும்'' என்று வேதனையோடு கேட்டார் ஒரு தாய்.

“இந்த காணாத தேசத்துல வந்து படாத பாடு பட்டாச்சு. உடம்பு முடியம போனவர்களக்கு, கூட இருந்து ஒரு நாட்டு வைத்தியம் பாக்க முடியாம எத்தினியோ உயிர பலி குடுத்துட்டோம்'' என்று தொண்டையடைக்க தனக்குத் தானே பேசிக் கொண்டார் ஒரு வயதான தாய்.

சொல்லொணாத் துயரங்களை மனதில் தெக்கி வைத்துக்கொண்டு உடம்பை ஓடாக்கி உழைத்து சம்பாதித்துப் பிழைக்கும் இவர்களிடமிருந்து பிடுங்கித் தின்று வயிறு வளர்க்கும் எச்சில் பிறவிகள் ரௌடிகள் என்ற பெயரில் உலாவுகின்றன.

“இது தலைவரோட இடம் - பொது இடம் - நீங்க இங்க இருக்கிறது எல்லோருக்கும் தொந்தரவா இருக்கு. பக்கத்துலயெல்லாம் அடிக்கடி திருடு போவுதுன்னு ஒரு போலீசு கம்ப்ளைண்ட் குடுத்தோம்னா அவ்வளவுதான்'', என்று 'பிளாக்மெயில்' செய்து மிரட்டி பிடுங்கித் தின்கின்றனர். யாராவது கணவன் - மனைவிக்குள் சண்டை போட்டுக் கொண்டாலும் இந்த நாய்கள் அதிலே பஞ்சாயத்து என்று நுழைந்து இரண்டு பேருக்கும் அபராதம் போட்டு வசூலித்துக் கொள்கின்றன. இரவில் பெண்கள் தூங்கும்போது இருட்டில் வந்து தொடுவது, புடவையை தூக்கி விட்டு விட்டு ஓடிவிடுவது என்று அக்கிரமங்கள் புரிகின்றன, இந்த மனித மிருகங்கள்.

“நிக்க நெழலில்லாம இருக்கிற எங்க கிட்ட பிடுங்கி தின்னு எச்சி பொழப்பு பொழக்கிறானுங்களே! இவனுங்க என்ன பன்னியோட சேர்ந்தா திங்கரானுங்க'' என்று காரித் துப்பினாள் ஒரு இளம்பெண்.



திறந்த வெளியில் கல் அடுப்பு மூட்டி சமைத்து சாப்பிட்டு விட்டு அங்கேயே படுத்துறங்குகிறார்கள்.

இந்தியாவில் ஏழ்மைக்கு எத்தனையோ கூர்முனைகளுண்டு அதில் விவசாயிகளின் நெஞ்சைத் துளைக்கும் விஷம் தோய்ந்த முனைதான் வறட்சி. நாற்பது ஆண்டுகால சுதந்திரமும், 20 அம்சத் திட்டங்களும் இந்திய விவசாயிகளுக்கு வழங்கியிருக்கும் வாழ்க்கை முறை இதுதான். பாசிச ராஜீவ் கும்பல் மட்டுமல்ல, எந்த ஓட்டு பொறுக்கி கட்சிகளும் இதுவரை விவசாயிகளின் மேம்பாட்டிற்காக, அவர்களின் முன்னேற்றத்திற்காக ஒரு துரும்பையும் எடுத்து போடவில்லை. அளித்த வாக்குறுதிகள், கொண்டு வந்த சீர்திருத்தங்கள், அனைத்தும் காகிதத்திலேயே முடங்கிக் கொண்டன. மாறாக விவசாயிகளுக்கு துப்பாக்கி தோட்டாக்களும், தடியடிகளும்தான் பரிசாக கிடைக்கிறது. குடிநீர் வசதி சாலை வசதி கோரி போராடும் விவசாயிகளின் பிரச்சினைகளைக்கூட தீர்க்க வக்கற்ற ஓட்டு பொறுக்கிகளும் அதிகார வர்க்கத்தினரும் அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதையே அனைத்திற்கும் தீர்வாக முன் வைக்கின்றனர்.

இவ்வளவு கொடுமை, துயரங்களுக்கு மத்தியிலும், வாழ்ந்தே தீர வேண்டும் அதுவும் உழைத்தே வாழ வேண்டும் என்பதில் உறுதியாய் இருக்கும் விவசாய பெருமக்கள், குட்ட குட்ட குனிந்து போவதால் பயனேதும் இல்லை என்பதை உணர வேண்டும். அதுமட்டுமல்ல தங்கள் வாழ்வுக்கான போராட்டத்தின் அவசியத்தை இப்போதும் உணராவிட்டால், ஓட்டுண்ணி அதிகார வர்க்கமும், ஓட்டு பொறுக்கி அரசியல்வாதிகளும் மீதிமிருக்கும் ஒட்டு கோவணத்தையும் உருவிக் கொள்வார்கள்.

-இராஜேஸ்வரன்
திருச்சி

## காங்கிரசின் 40 ஆண்டு சாதனை!

மூன்றாம் உலக நாடுகள் எந்த ஒரு சிறு துரும்புக்காகவும் தன்னைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏகாதிபத்தியங்கள் ஏராளமான சதித் திட்டங்களைத் தீட்டியுள்ளன. உணவு என்பது அவர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய ஆயுதம். '60களில் அமெரிக்கா பி.எல்.480 திட்டத்தின் கீழ் கோதுமையை இந்தியாவுக்குக் கடனாகக் கொடுத்தபோது, 'இது போதாது; ஏழைநாடுகள் அன்றாடம் உணவு தானியத்துக்காக நம்மிடம் கையேந்தும் நிலையை உருவாக்க வேண்டும்' என்று அமெரிக்கத் தூதன் கொக்கரித்தான். பாசிச ராஜீவ் கும்பல் அந்த நிலையை நோக்கி நாட்டை வேகமாக இழுத்து வந்து விட்டது.

இம்மாதம் தொடங்கி ஆகஸ்ட் இறுதிக்குள் 12 லட்சம் டன் கோதுமையை அமெரிக்காவிடமிருந்து சலுகை விலையில் இறக்குமதி செய்ய ராஜீவ் கும்பல் முடிவு செய்துள்ளது. இதுதவிர 5 லட்சம் டன் அரிசி தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும். இதோடு 50,000 டன் பருப்பு வகைகளையும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது. பருவ மழை தொடர்ச்சியாகப் பொய்த்து விட்டதால் உணவு உற்பத்தி வீழ்ந்துவிட்டது. கையிருப்பில் உணவு தானியம் இல்லை. எனவேதான் உணவு தானிய இறக்குமதி அவசியமாகிவிட்டது என்று பசப்புகிறது பாசிச கும்பல்.

1984 தேர்தலில் அன்னிய சார்பா, தன்னிறைவா என்பதை உங்கள் வாக்கு தீர்மானிக்கும் என்று கூறி ஓட்டுப் பொறுக்கி ஆட்சிக்கு வந்த ராஜீவ் கும்பல், கேவலம் உணவுக்காகக்கூட அந்நிய நாடுகளிடம் கையேந்தி நிற்கும் நிலைக்கு தள்ளி நாட்டையே சூன்யமாக்கிவிட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிட்டோம், ஏற்றுமதி செய்யுமளவுக்கு முன்னேறிவிட்டோம் என்று ஈராண்டுகளுக்கு முன்பு பாசிச கும்பல் பீற்றிக்கொண்டதெல்லாம் அப்பட்டமான பொய் என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சியில் மட்டுமல்ல; அவரது ஆத்தா, தாத்தா கால ஆட்சியிலும் இதே நிலைதான். கணக்கற்ற நிலச் சீர்திருத்த சட்டங்களும், ஐந்தாண்டுத் திட்டங்களும், பசுமைப்புரட்சியும், வளர்ச்சித் திட்டங்களும் விவசாயிகளுக்கோ விவசாய உற்பத்திக்கோ ஒரு மண்ணும் செய்யவில்லை; நாட்டை எதிர்திசையில் வழிநடத்திச் சென்று பஞ்சபூமியாக்கி கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது. கிராமப்புறங்களை அறவே புறக்கணித்து விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கி பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டுள்ளது. இதுதான் பீற்றிக்கொள்ளப்படும் 40 ஆண்டுகால காங்கிரசு ஆட்சியின் சாதனை!

படிப்பகம்

www.padippakam.com

# நவீனமயமும் பெருகிவரும் வேலையின்மையும்



சென்னை — மறைமலை நகரில் நடந்த காங்கிரசு மாநாடு என்ற கூத்தின் இறுதிக் காட்சியில் பிரதமர் ராஜீவ் அவர்கள் "வறுமையை ஒழிப்போம்; வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிப்போம்!" என்று முழக்கமிட்டார் அது விண்ணும், மண்ணும் எதிரொலித்தது. 'உழைக்கும் மக்களின் செவிகளில் தேனையும், வேலையில்லா இளைஞர்களின் நெஞ்சங்களில் பாலையும் வார்த்து விட்டோம், அது இனி ஓட்டுக்களாக் குவிந்துவிடும்' என்ற வெற்றிக்களிப்போடு டெல்லியும் போய்விட்டார்.

ஆனால் பாசிச ராஜீவின் நடைமுறை கொள்கைகளோ, அவருடைய மாநாட்டு முழக்கங்கள் வெறும் ஏமாற்று கோஷங்கள் தான் என்பதை அனுதினமும் நிருபிக்கின்றன.

1984 ஆம் ஆண்டு ஜனவரியில் போட்ட 'பொதுத்துறை ஆளெடுப்பு தடைச்சட்டம் இன்னமும் தொடர்கிறது. இந்த தடைச்சட்டத்தை நீக்கினாலே, அரசுதுறை நிறுவனங்களான ரயில்வே, தபால் தந்தி, தொலை தொடர்பு துறை போன்ற அலுவலகங்களில் காலியாக இருக்கிற இடங்கள் நிரப்பப்பட்டு சில ஆயிரம் இளைஞர்களின் வாழ்விலாவது 'வசந்தம்' வீசியிருக்கும். ஆனால் அந்த சட்டத்தை கெட்டியாக பாதுகாப்பதோடு மட்டுமல்ல, கம்ப்யூட்டரையும், நவீன மயங்களையும் புகுத்தி, இருக்கிற ஊழியர்களை உபரியாக்கி வேலையில்லாதவர்களுடைய எண்ணிக்கையை பெருக்குவதற்குத்தான் திட்டங்கள் தீட்டப்படுகிறது.

எல்.ஐ.சி., வங்கிகள், ரயில்வே, தொலை தொடர்புதுறை, அஞ்சல் துறைகளில் கம்ப்யூட்டர்களையும், மின்னனு சாதனங்களையும் புகுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1990க்குள் அனைத்து பெரிய வங்கிகளிலும், ரயில்வேயிலும், கம்ப்யூட்டர்கள் தனது 'சேவை'யைத் துவங்கிவிடும். ராஜீவின் நவீனமயமான பார்வை' தொலை தொடாபுத்துறையின் மீது இன்னும் கூடுதலாக விழுந்துள்ளது.

மேலோட்டமாக பார்க்கின்ற எவருக்கும் இந்த அறிவியல் வளர்ச்சி இந்தியாவின் எல்லாத்துறைகளிலும் புகுத்தப்படுமானால் மேலை நாடுகளோடு நாமும் போட்டி போட்டு முன்னேறலாமே என்று தோன்றும். அரைமணி நேரம் 'ரிசர்வேச'னுக்காக காத்திருப்பதைவிட அரைநொடியில் இடம் உள்ளதா? இல்லையா? என்று சொல்கிற கம்ப்யூட்டர் உயர்வாக தோன்றும். உள்ளூரில் இருந்து கொண்டே உலகம் முழுவதும் தொடர்பு கொள்வதற்குரிய வாய்ப்பை அதி நவீன தொலை — தொடர்பு துறை பெற்றுதருவதினால் அவைகளை வரவேற்கலாம் என்று தோன்றும்.

ஆனால், இந்த நவீனமயம் எங்கெல்லாம் புகுத்தப்படுகிறது என்று பார்த்தால் அதன் உண்மை சொருபம் தெரியவரும். எங்கெல்லாம் முதலாளிகள், நிலப்பிரபுக்கள், வர்த்தக சூதாடிகள், அதிகாரிகள் அதிகமான தொடர்பு வைத்திருக்கிறார்களோ அங்கெல்லாம் கம்ப்யூட்டரும் மின்னனு சாதனங்களும் புகுத்தப்படுகிறது.

உதாரணமாக, வங்கி, எல்.ஐ.சி. தொலை — தொடர்பு இங்கெல்லாம் சாதாரண உழைக்கும் மக்கள் மழைக்குக்கூட ஒதுங்குவதில்லை. வெயிலடித்தாலும், மழை பெய்தாலும் உழைத்தால்தான் கஞ்சி என்றிருப்பவர்களுக்கு; இங்கே என்ன வேலை? பக்கத்து நகரத்தையே பார்க்காதவனிடம் போய், தொலைத் தொடர்பு மூலம் பாரீஸ் பேசலாம், இலண்டன் பேசலாம் என்று சொன்னால் என்ன புரிய போகிறது? சரி! சிறிய முதலாளி, சிறு வியாபாரிக்காவது பயன்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. விருதுநகரில் இருக்கும் ஒரு வியாபாரி அதிகம் போனால் சென்னையோடு வியாபாரம் பற்றி பேசுவான். அவனுக்கு ஸ்வீடன் (!) எதற்கு?

ஆனால் தரகு முதலாளிகளுக்கும், வர்த்தக சூதாடிகளுக்கும், அதிகாரவர்க்கத்தினருக்கும் ராஜீவின் நவீன மயமோ மிகவும் அவசியமான ஒன்று.

இந்த நாட்டில் 3.5 கோடி பேர் படித்து, பட்டம் பெற்று, வேலையின்றி இருப்பதுப் பற்றியோ, பெரும்பான்மையான குழந்தைகள் ஆரம்பக் கல்விகூட இல்லாமல் இருப்பது பற்றியோ, 45 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து கொண்டிருப்பதைப் பற்றியோ, போக்குவரத்து, சுகாதாரமின்மை, மருத்துவ வசதி இல்லாமல் ஆண்டு தோறும் மக்கள் மடிவது பற்றியோ, வறட்சி வெள்ளத்தால் இருக்கும் அற்ப உடமைகளையும் இழந்து மக்கள் நாடோடிகளாய் திரிவது பற்றியோ, சிறிதும் அக்கறை காட்டாத அரசு, இத்துயரங்களைப் போக்க நிதி இல்லை என கையைவிரிக்கும் இக்கேடு கெட்ட அரசு, தரகு முதலாளிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காக — தொலை தொடர்புத் துறையை நவீனப்படுத்துவற்காக ரூ.50,000 கோடியை வரும் பத்தாண்டுக்குள் செலவழிக்க திட்டமிட்டு அமுலாக்கிவருகிறது.

கங்கை — காவேரி இணைப்புக்கு திட்டம் கொடுத்தபொழுது, தேவையான பணம் ரூ.20,000 கோடிதான். ஆனால், அத்திட்டத்திற்கு நிதி இல்லையென சொல்லி, கூடையில் தூக்கி போட்டுவிட்டது. அந்த திட்டம் நிறைவேறியிருந்தால் வெள்ளத்தையும், வறட்சியையும் கட்டுப்படுத்தியிருக்கலாம். தரிசு நிலங்கள் சோலைகளாக மாறியிருக்கும். குடிநீர் பிரச்சினை பெருமளவு தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விட, தரகு முதலாளிகள், வர்த்தக சூதாடிகளுக்கான தேவைகள்தான் ராஜீவ் அரசுக்கு முதல் முக்கியமாக தெரிகிறது.

தொலைத் தொடர்புத் துறையை நவீனமயப்படுத்த வந்திருக்கிற (C-DOT-ன் தலைவர்) சாம்பெட்ரோடா தன்னுடைய திட்டம் நிறைவேறினால், தொலைத் தொடர்புத்து



படிப்பகம்

www.padippakam.com

றையில் ஆண்டுக்கு 30,000 பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர் என்று மயக்கப் பொடியை தூவுகிறார். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? நவீன மயம் புகுத்தப் படுவதினால், வேலைவாய்ப்பு பறிபோகும் என்பதுதான் மேலைநாடுகளின் அனுபவம்.

உதாரணமாக ஜப்பான் நாட்டில் 1978ல் 20,000 ஊழியர்களை வைத்து 5 இலட்சம் யூனிட்களை உற்பத்திசெய்தது. 1986ல் ஒரு கோடி யூனிட் உற்பத்தி செய்ய தேவைப் பட்ட ஊழியர்கள் 30,000 மட்டுமே.... 20 மடங்கு உற்பத்தி கூடியது. ஆனால் 1/2 மடங்குதான் ஊழியர்கள் கூடினார்கள். காரணம் நவீனமயம்!

நவீனமயம் புகுத்தப்படுவதற்கு முன்னால் 20% இருந்த சூப்ரவைசர் பதவிகள் நவீனமயம் புகுத்தப்பட்ட பின் 2 சதமாக குறைந்தது. நவீனமயத்திற்கு முன் 50 சதமாக இருந்த ஊழியர்கள் நவீனமயத் திற்கு பின் 5 சதமாக குறைக்கப்பட்டனர்.

இந்த உண்மையை பார்த்த பின்தான் இந்த அரசு ஏகாசிபத்தியத்திற்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் சேவை செய்வதற்கு மட்டுமல்ல, ஆட்குறைப்புக்கும், நவீனமயத்தை ஒரு கருவியாக பயன்படுத்தப் பார்க்கிறது.

தொலைதொடர்பு துறையை எடுத்துக் கொண்டால், 1000 தொலைபேசிக்கு, 102 ஊழியர்கள் என்பது அளவீடு. ஆனால் நவீனமயத்தை புகுத்துவதன் மூலம், எதிர்காலத்தில் 1,000 தொலைபேசிக்கு 25 ஊழியர்கள் என்று குறைக்கப்படும். அதாவது 100க்கு 75 பேர் உபரியாக்கப்படுவார்கள். அதே போல் அஞ்சல்துறையில் 40 சதம் உபரி.

வங்கியிலும், எல்.ஐ.சி.யிலும் ஒவ்வொரு கம்ப்யூட்டரும் புகுத்தப்படும்போது 20% ஆட்குறைப்பு செய்கிறது என்றால் வேலையில்லா திண்டாட்டம் ஒழிந்து விடுமா?

அமெரிக்காவிடமிருந்து இறக்குமதியாகப் போகிற அதிநவீன கம்யூட்டர் 10,000 பேர் செய்யக்கூடிய வேலையை 500 பேரைக் கொண்டே முடித்துவிடும் என்றால் 9,500 பேர்களின் கதி என்ன?

ரயில்வேயின் .14 லட்சமாக இருக்கிற ஊழியர்களின் எண்ணிக்கை கம்யூட்டர் புகுவதினால் 9 லட்சமாக குறையப் போகிறது என்றால் எதிர்கால இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

தென்னக ரயில்வேயில் 10 டைப்பிஸ்டு காலி இடங்களுக்கு 18,000 பேர் விண்ணப் பித்தனர். இதன் மூலம் ரயில்வேக்கு வருமானம் 1,80,000 ரூபாய், என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் சொல்கிறது.

இந்திய மத்திய வங்கியில் பியூன் வேலைக்கு காலியிடங்கள் 80. விண்ணப் பித்தவர்கள் 2,65,358.

மத்திய அரசின் ஊழியர் தேர்வு கமிஷனில் 6,000 கிளார்க் வேலைக்கு, 7,00,000 பேர் விண்ணப்பம் செய்தனர். முதுநிலை பட்டதாரிகளில் தெருக்கூட்டும் வேலைக்கு கூட விண்ணப்பம் செய்கிற அவலநிலை அதிகமாகி கொண்டிருக்கிறது.

வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்கப் போவதாக தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிற அரசு உலக வங்கியின் கட்டளைகளை சிரமேற்கொண்டு, ஆட்குறைப்பு செய்து வேலை இல்லாதோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்த எல்லா வேலைகளையும் செய்கிறது. தொழிற்சங்கத் தலைவர்களை சரிகட்டுவது, அடாவடித்தனமாக வேலைப்பளுவை கூட்டுவது, நவீன மயத்திற்கு எதிர்ப்பு குறைய பதவி உயர்வு தருவதாகச் சொல்வது..... என்று எல்லா வழிகளையும் கையாள்கிறது.

தனது முகத்திரைகள் கிழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படும் போதெல்லாம் வறுமையை ஒழிப்போம் என்று கவர்ச்சியான கோஷங்களை எட்டுத்திக்கும் எதிரொலிக்கச் செய்து, தனது கோரமுகத்தை மறைத்துக் கொள்கிறது.

இந்த அரசின் முகத்திரைகள் கிழிக்கப் படாதவரை, போலி தொழிற்சங்க வாதிகளை வீதிக்கு இழுத்து வராதவரை, உழைக்கும் மக்கள் புரட்சிகர இயக்கங்களில் அணிதிரண்டு போராட்டத்தை முன்னெடுக்காத வரை, இந்த அவலங்களும், சோகங்களும் நம்மோடு எப்பொழுதும் இணைந்தே இருக்கும்.

— **விஷ்ணுவர்த்தன்**
**அதிராம்பட்டினம்.**

## யாகம் செய்தால் மழை வருமா?

ஓட்டுப் பொறுக்கிகளின் ஆட்சியில் பண்டாரங்கள், குறி சொல்பவர்களுக்கு என்றுமே தனிமரியாதைதான். அதிலும் பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சியில் பண்டாரங்கள், மடாதிபதிகள், சித்து வேலைக்காரர்களுக்கு என்றுமே ராஜ மரியாதைதான். ஆட்சி நிலைத்திருக்க, தேர்தலில் வெற்றிபெற என்று எதற்கெடுத்தாலும் குறிகேட்டு லட்சக் கணக்கில் செலவு செய்து யாகங்களை நடத்திவரும் ராஜீவ் கும்பல் இப்போது மழை பெய்விக்கவும் சித்து வேலைக்காரரின் தயவை நாடியிருக்கிறது.

தர்மசமாஜ் கல்விக் கழகத்தின் முதல்வரான, 84 வயதான சர்மா என்பவர் 'விருஷ்டி யாகம்' நடத்தி மழை வரவழைப்பதில் கில்லாடியாம்! 1976 முதலாக இப்படி பல யாகங்கள் நடத்தி வெற்றிகரமாக மழை வர வழைத்திருக்கிறாராம்! நாட்டின் வறட்சியைப் போக்கி மழை பெய்விக்க கருமேகங்கள் மீது ரசாயனப் பொடியை விமானத்தின் மூலம் தூவும் ஊதாரித் திட்டமும் தோற்றுப்போன நிலைமையில், அரசு சர்மாவின் காலில் போய் விழுந்தது. டெல்லியைச் சேர்ந்த விஞ்ஞான தொழில் நுட்பத் துறையே (DST) இந்த யாகத்துக்கு ஆதரவு தெரிவித்து மொத்த செலவில் பாதியை ஏற்றுக் கொள்வதாகக் கூறியது. அப்புறம் என்ன, சர்மாவுக்குக் கொண்டாட்டம் தான்! யாகச் செலவுக்காக 10,000 ரூபாயை அரசிடமிருந்து கறந்துவிட்டார்.

நாட்டு நலன் கருதி, வறட்சிப் பகுதியில் மழை பெய்விக்கவும் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கவும் டெல்லி அருகே மதுரா நகரில் மே 24 முதல் ஒரு வார காலத்திற்கு மழைவரம் வேண்டி வருண பகவானைத் தியானித்து நவீன விஞ்ஞான முறையில் யாகம் நடத்த ஆரம்பித்தார், சர்மா. யாகம் தொடங்கிய 48 மணி நேரத்தில் மழைபெய்யப் போகிறது; அந்த மழை 3 நாட்களுக்குத் தொடரப் போகிறது என்று மோடி வித்தைக் காரனைப் போல அவிழ்த்து விட்டார்.

அதை அப்படியே நம்பிக் கொண்டு டெல்லியின் விஞ்ஞான தொழில் நுட்பத் துறை (DST)யின் விஞ்ஞானிகளும் யாகம் நடக்கும் இடத்திற்கு தட்ப வெப்பநிலை பாராமீட்டர்கள், ஈரப்பத அளவீடு கருவி, காற்று வேக அளவுக் கருவி அத்தனையும் தூக்கி வந்து பொட்டிட்டு பூசை செய்து ஆராய்ச்சியைத் துவக்கினர். இவர்களுக்குப் போட்டியாக பூனாவின் இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் (IMD) வெப்ப மண்டல வானிலை ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் விஞ்ஞானிகளும் யாகத்தால் உருவாகும் அதிசய மழையை எதிர்பார்த்து ஆராய்ச்சிகளைத் துவக்கினார்கள்.

ஆனால் மழையும் இல்லை; மண்ணாங்கட்டியுமில்லை. யாகம் முடிந்த மே 31 அன்று 10 நிமிடத்திற்கு சிறு தூறல்தான் இருந்தது. இந்த லட்சணத்தில் தினமும் யாகத் தீயில் 15 கிலோ எடைக்கு அரிதில் கிடைக்கும் மரங்கள், வேர்கள், பழங்கள், காய்களைப் போட்டு எரித்து சாம்பலாக்கியதுதான் மிச்சம். இதோடு, இந்த யாகத்திற்கென 100 கிலோ நெய் தனிச்சிறப்பாக அரியானாவிலிருந்து கொண்டு வரப்பட்டு யாகத் தீயில் எரித்து நாசமாக்கப்பட்டது.

அயோக்கியத்தனமான யாகத்திற்கு ஒதுக்கிய ஆயிரக்கணக்கான ரூபாயில் ஒரு பகுதியாவது குடிக் தண்ணீரின்றி தவிக்கும் மக்களுக்காகச் செலவிட்டிருந்தால் ஓரளவாவது உதவி கிடைத்திருக்கும். ஆனால் ஊரைக் கொளுத்தியதற்கு ஒப்பாக உணவுப் பொருட்களை எரித்து சாம்பலாக்கிய கேடு கெட்ட அரசு யாகம் வெற்றியா தோல்வியா என்ற மயிர்பிளக்கும் வாதத்தில் இறங்கியுள்ளது. அடுத்த 3 ஆண்டுகளுக்குள் இதுபோல் 243 யாகங்களை நடத்த சித்து வேலைக்காரர் சர்மா திட்டமிட்டுள்ளாராம். இதற்குரூ.10 லட்சம் செலவாகுமாம். பண்டாரங்களின் பாதார விந்தங்களை நக்கும் ராஜீவ் அரசு இச் செலவுகளை ஏற்று ஆதரித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. கம்ப்யூட்டர் யுகம் பற்றி கனவு காணும் ராஜீவின் 21ம் நூற்றாண்டில் பண்டாரங்களும், பரமாச்சாரிகளும், குறி சொல்பவர்களும் ஆஸ்தான விஞ்ஞானிகளாக ராஜீவின் கொலுமண்டபத்தில் வீற்றிருப்பார்கள்! பரிசுத்த படுமுட்டாள்களின் ஆட்சி வெறெப்படி இருக்கும்?



படிப்பகம்

www.padippakam.com

# கொலைக்களமாகும் அணு உலைகள்

வறுமையில் இந்தியா சிக்கித் தவித்தாலும், அதற்குப் பெருமை சேர்க்கும் வித்தில் அணுசக்தி முக்கிய பங்காற்றுவதாக பீற்றிக் கொள்ளும் பாசிச ராஜீவ் கும்பல், அணுவெறி பிடித்து அன்னிய நாடுகளிலிருந்து அணுசக்திக்குத் தேவையான கனநீரைக் கடத்தி வந்து இப்போது அம்பலப்பட்டு சந்தி சிரிக்கிறது.

பாசிச இந்திரா காலத்திலேயே சர்வதேச விதிமுறைகளை மீறி கனநீரை இந்திய அரசு ரகசியமாகக் கடத்தி வந்துள்ளது. 1983-ல் நார்வேயிலிருந்து 15 டன் எடையுள்ள கனநீர் மே. ஜெர்மனிக்கு விமானத்தின் மூலம் அனுப்பப்பட்டு, பின்னர் அங்கிருந்து சுவிட்சர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து இந்தியாவுக்கு கடத்தி வரப்பட்டுள்ளது. இது தவிர, 1986-ல் 12.5 டன் எடையுள்ள கனநீர் நார்வேயிலிருந்து ருமேனியாவுக்கு அனுப்பப்பட்டு பின்னர் அங்கிருந்து ரகசியமாக இந்தியாவுக்குக் கடத்தி வரப்பட்டுள்ளது. பாகிஸ்தானைப் பார்த்து அணு உலைச் சாதனங்களை அன்னிய நாடுகளிலிருந்து கடத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டி உத்தம வேடம் போட்டுவந்த ராஜீவ் கும்பல் இப்போது சர்வதேசக் கடத்தல்காரனாக அம்பலப்பட்டு நிற்கிறது.

புளுகுவதைத் தவிர வேறொன்றையும் அறியாத பாசிசப் பிரதமர் ராஜீவ் வழக்கம் போலவே, 'இது பொய்! அவதூறு! எங்களிடம் தேவையான அளவு கனநீர் உள்ளது. அதை வெளிநாட்டிலிருந்து பெறவேண்டிய அவசியமே இல்லை' என்று சவடால் அடித்தார்.

ஆனால் கட்டுப்பாடு மற்றும் தணிக்கைத்துறை சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை இது அப்பட்டமான பொய் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. கனநீர் உற்பத்திக்காக நிறுவப்பட்ட அணு உலைகளில் தூத்துக்குடி உலைதான் அதிகமாக உற்பத்தி செய்கிறது. 1978-ல் மூன்றாண்டு தாமதத்திற்குப் பிறகு நிறுவப்பட்ட இந்த உலை கடந்த எட்டாண்டுகளில் மொத்த உற்பத்தித் திறனில் ஐந்தில் ஒரு பங்குதான் உற்பத்தி செய்கிறது. தூத்துக்குடி உலை ஆண்டுக்கு 71 டன் கனநீர் உற்பத்தி செய்யும் என்று கூறப்பட்டது. ஆனால் கட்டுப்பாடு மற்றும் தணிக்கை துறையின் அறிக்கையின்படி அது கடந்த எட்டாண்டுகளில் வெறுமனே 114 டன் எடையளவு கனநீரைத்தான் உற்பத்தி செய்துள்ளது. இது நாட்டின் மொத்த கனநீர் உற்பத்தியில் 60 சதவீதம். இதன்படி பார்த்தால் கடந்த எட்டாண்டுகளில் நாட்டில் மொத்த கனநீர் உற்பத்தி 190 டன்கள் தான்! ஆனால் கல்பாக்கம் மற்றும் துருவாவில் 83-85-ல் நிறுவப்பட்ட அணு உலைகளுக்குக் குறைந்தது 600 டன்கள் கனநீர் தேவையாயிருந்தது. மொத்தம் உற்பத்தியான 190 டன்கள் எடையுள்ள கனநீரைக் கொண்டு இதை எப்படி பூர்த்தி செய்திருக்க முடியும்? ரஷியாவிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 450 டன் கனநீர் போக, எஞ்சிய கனநீர் தேவையை இந்திய அரசு ரகசியமாகக் கடத்தி வந்துள்ளது என்பதே உண்மை!



ஓடினாலும் ஆபத்து; மூடினாலும் ஆபத்து! கோடிக்கணக்கான ரூபாய்களைவிழுங்கிவிட்டு கதிரியக்க அபாயத்தை கருக்கொண்டு நிற்கும் அணு உலை.

1983-ல் கல்பாக்கம் அணுஉலை நிறுவப்பட்டபோது, கட்டுப்பாடு மற்றும் தணிக்கைத் துறை அறிக்கையின் படி, அது கனநீர் பற்றாக்குறையால் 16 மாத காலம் இயங்கத் தொடங்காமல் முடங்கிக் கிடந்தது. இதனால் குறைந்தது ரூ56.42 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதே காலத்தில்தான் நார்வேயிலிருந்து ரகசியமாக கனநீரும் கடத்தி வரப்பட்டுள்ளது. அணு வெறி பிடித்தலையும் பாசிச கும்பல் இந்தியாவின் கனநீர் தேவையை எவ்வாறு கீழ்த்தரமான முறையில் பூர்த்தி செய்துள்ளது என்பதை இது மேலும் நிரூபித்துக் காட்டுகிறது.

பரிகசிக்கத்தக்க நிலையில், கோடி கோடியாய் நமது வரிப்பபணத்தை விழுங்கிவிட்டு விஞ்ஞான ரீதியில் படுதோல்வியடைந்தது தூத்துக்குடி அணு உலைத் திட்டம் மட்டுமல்ல; ஒட்டு மொத்தமாக அனைத்து அணுஉலைகளும், அணு மின்திட்டங்களுமே படுதோல்வியடைந்து சீக்குப் பிடித்து மரணப்படுக்கையில் கிடக்கின்றன.

★ இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி - சோதனை அணு உலை என்று படாடோபமாக விளம்பரம் செய்யப்பட்ட துருவா அணுசக்தி நிலையம் கடந்த ஈராண்டுகளாக முடங்கிக் கிடக்கிறது.

★ 1973-ல் நிறுவப்பட்ட ராஜஸ்தான் அணுசக்தி நிலையம் செயல்பட்டதே மூன்று மாதந்தான்! அதன் பிறகு நிரந்தரமாக மரணப்படுக்கையில் விழுந்துவிட்டது. இந்த லட்சணத்தில் அதைப் பராமரிக்க மட்டும் ஆண்டுக்கு ரூ50 கோடி செலவிடப்படுகிறது.

★ டெல்லி அருகே நரோராவில் நிறுவப்பட்ட அணுமின் நிலையம் நில நடுக்கப் பகுதியில் அமைந்துள்ளதால் இயங்குமா என்பதே கேள்விக்குறியாக உள்ளது. அப்படியே ஒருவேளை இயங்கினாலும் எந்நேரமும் விபத்து ஏற்படுவதற்கான அபாயம் நிலவுகிறது.

★ முற்றிலும் சுயசார்பானது என்று பீற்றிக் கொள்ளப்பட்ட கல்பாக்கம் அணுமின் நிலையம் இன்னமும் முழுத் திறனோடு இயங்கவில்லை. இதோடு ஈராண்டுகளுக்கு முன்னர் விபத்து ஏற்பட்டு சில விஞ்ஞானிகளின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் கதிர் வீச்சு அபாயம் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது. இன்று எப்போதும் விபத்து நேரலாம் என்ற நிலைமையில் பகுதி வாழ் மக்களிடம் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றி பிரச்சாரம் செய்கிறது அரசு.

மொத்தத்தில் இந்திய அணு உலைகள் அனைத்தும் ஒருபுறம் முடக்குவாதத்தால் பீடிக்கப்பட்டு மறுபுறம் எந்த உலையில் எப்போது விபத்து நேருமோ என்ற அபாயக் கட்டத்தி



படிப்பகம்

www.padippakam.com



## ஏழைகளின் வாழ்வைப் பறிக்கும் ஏவுகணைத் தளம்

பஞ்சம் பாரித்த ஒரிசாவின் கடற்கரையை ஒட்டிய பாலாசோர் மாவட்டத்தின் சந்திரபூர் வட்டாரத்தில் கடந்த ஜூன் 7-ம் நாள் பெரும் படையுடன் போலீசும், அதிகாரிகளும் புழுதிபறக்க வந்திறங்கினர். ''ஓடு! ஓடு இன்று இரவுக்குள் ஓடுவிடு!'' என்று கிராம மக்களை விரட்டத் தொடங்கினர். ''உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் நாங்கள் பொறுப்பல்ல; உடனே ஓடுவிடு. நாளை இப்பகுதியில் யாருமே தங்கக் கூடாது; அடுத்த நாள் திரும்பி வரலாம். இதனால் உங்களுக்கு ஏற்படும் இழப்புக்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 40 ரூபாய் நிவாரணமாகத் தருவோம்'' என்ற அதிகார மிரட்டலுடன் விரட்டினர்.

சந்திரபூர் பகுதியிலுள்ள நீலகிரி குன்றுகள் மீது நிறுவப்பட்டுள்ள ஏவுகணைத் தளத்திலிருந்து ஜூன் 8 அன்று அதி நவீன 'அக்னி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள ஏவுகணையை விண்ணில் செலுத்தி பரிசோதிக்கத்தான் இந்த அதிரடி நடவடிக்கை! ஏவுகணையால் உயிருக்கு ஆபத்து நேருமோ என்று அஞ்சி நடுங்கிய பகுதி வாழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகள் போல ஆடு, மாடு, அற்ப உடமைகளுடன் தப்பியோடினார். அப்பகுதியில் 3 கி.மீ சுற்றளவுக்கு 11 கிராமங்களிலிருந்து 10,000க்கும் மேலான மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். கடைகள் மூடப்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் யுத்த வெறியர்கள் தங்கள் சோதனையைச் சுதந்திரமாக நடத்தி முடித்தனர்.

பாலியபால் - பாலாசோர் மாவட்டத்தில் அணு ஆயுத ஏவுகணைத் தளத்தை நிறுவ எத்தணிக்கும் பாசிச ராஜீவ் கும்பலின் போர்வெறியை எதிர்த்து அப்பகுதிவாழ் மக்கள் கடந்த மூன்றாண்டுகளாக விடாப்பிடியாகப் போராடி வருகின்றனர். மக்களின் எதிர்ப்பைக் கண்டஞ்சிய அரசு, திடீரென பீதியூட்டி மக்களை வெளியேற்றி விட்டு தனது நோக்கத்தைச் சாதித்துக் கொள்ள இப்படியொரு கீழ்த்தரமான முயற்சியில் இறங்கியுள்ளது. இதே உத்தியைக் கையாண்டு இதர பகுதிகளில் இத்திட்டத்திற்கு எதிராகப் போராடி வரும் மக்களின் தடையரண்களை உடைத்தெறிவோம் என்று கொக்கரிக்கிறது அரசு.

இந்து மாக்கடல் பிரதேசத்தை அமைதி மண்டலமாக்கப் பாடுபடுவோம் என்று பசப்பிக் கொண்டே யுத்த வெறி பிடித்து, பிராந்திய மேலாதிக்க வல்லரசாக வலம் வருவதற்கும், ரஷிய-அமெரிக்க வல்லரசுகளின் அணு ஆயுதப் போர் வெறிக்கு இந்தியாவைத் தளமாக்கவும் ஏறத்தாழ 4000 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை நிறுவியுள்ளது பாசிச ராஜீவ் அரசு. ஏழைகளின் வாழ்வைப் பறிக்கும் இத்திட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடியாமல் ராணுவ ரகசியம் என்று மூடிமறைக்கிறது. எதிர்த்துப் போராடும் பாலியபால்-பாலாசோர் பகுதிவாழ் மக்களை அடக்கி ஒடுக்கிறது.

பாசிச கும்பலின் 'அக்னி' ஏவுகணை வெற்றி பெறுகிறதோ இல்லையோ, பாலியபால்-பாலாசோர் பகுதிவாழ் மக்களின் உறுதிமிக்க போராட்டம் வெற்றிபெறப் போவது நிச்சயம்! பாசிச கும்பலை பெருந்தீயாகச் சூழ்ந்து சுட்டெரிக்கப் போவது நிச்சயம்!

லேயே உள்ளன. இத்தனைக்கும், பல கோடி ரூபாய்களை விழுங்கும் ஒரு அணு உலையின் செயல்பாடு 25 ஆண்டுகள்தான். அதன்பிறகு மூடிவிட வேண்டியதுதான். அதுமட்டுமல்ல. மூடப்பட்ட அணு உலையையும் பல கோடி ரூபாய் செலவில் முறையாகப் பராமரிக்க வேண்டும். ஏனெனில் அணுக்கழிவுகள் பல நூறு ஆண்டுகளுக்கு கதிரியக்கச் சக்தி கொண்டவை.

இந்த லட்சணத்தில் அணுவெறி பிடித்த பாசிச ராஜீவ் கும்பல் 21-ம் நூற்றாண்டை நோக்கிச் செல்ல வகுத்துள்ள வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமானதாக அணுசக்தியையும் தீர்மானித்துள்ளது. கி.பி. 2000க்குள் 22 புதிய அணுசக்தி நிலையங்களை நாடெங்கும் நிறுவி 10,000 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென 15,000 கோடி ரூபாய்களை ஒதுக்கி பேரழிவை விலை கொடுத்து வாங்க முடிவு செய்துள்ளது. ஒரிசாவிலும்-ராஜஸ்தானிலும் பட்டினிச் சாவுகள், நாடெங்கும் வறட்சி, வடகிழக்கே பெருவெள்ளம் என்று உழைக்கும் மக்கள் தணலில் இட்ட புழுவாய்த் துடிக்கும்போது, மக்கள் நலனில் எள் முனையளவும் அக்கறையற்ற பாசிச கும்பல் வீண் ஜம்பத்திற்கும் தனது விஸ்தரிப்பு மேலாதிக்கப் பேராசைக்காகவும் அணுவெறி பிடித்தலைகிறது.

அணுசக்தி மீது பேராசை கொண்டு ராஜீவ் கும்பல் நாடெங்கும் அணுசக்தி நிலையங்களை வெறிபிடித்து நிறுவப் போக, அதற்கெதிரான மக்கள் திரள் போராட்டங்களும் பீறிட்டெழுகின்றன.

ஏற்கனவே கடந்த ஈராண்டுகளாக பஞ்சம் பாரித்த ஒரிசாவில் பாலியபால்-பாலாசோர் பகுதிவாழ் மக்கள் ராஜீவின் அணு ஆயுத ஏவுகணைத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விடாப் பிடியாகப் போராடி வருகிறார்கள்.

அதேவகையில் குஜராத்தின் தென் பகுதியிலுள்ள காக்ரபூர் பகுதிவாழ் மக்களும் அப்பகுதியில் அணுசக்தி நிலையம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளதை எதிர்த்து உறுதியாகப் போராடி வருகிறார்கள். ஏறத்தாழ 30 கி.மீ. சுற்றளவுக்கு 300க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட இப்பகுதியில் அணு எதிர்ப்பு இயக்கம் இன்று தீவிரமாக முன்னேறி வருகிறது.

1985 மே முதல் நாளன்று தொடங்கிய ''அணு உர்ஜா ஜக்ருதி'' என்ற இயக்கத்தில் விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், கலை இலக்கியவாதிகள், சமூக சேவகர்கள் முதலானோர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். மக்களிடம் அணு சக்தியின் தீமையை விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அதன் மூலம் அரசின் அணுசக்தி நிலைய நிர்மாணத் திட்டத்துக்கு ஒத்துழையாமை மற்றும் சட்ட மறுப்பு இயக்கங்களை நடத்துவது என்ற திட்டத்துடன்

பாசிச ராஜீவ் அரசு திணிக்கும் அணு மின் திட்டங்களுக்கு எதிராக, அணுக் கதிர் வீச்சு அபாயத்தை விளக்கி கைகா பகுதிவாழ் மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்- ஊர்வலம்.



படிப்பகம்

பொதுக்கூட்டங்களை, ஊர்வலங்கள் முதலானவற்றை நடத்தி வருகின்றனர். இதோடு அணு எதிர்ப்புப் பாடல்கள், வீதி நாடகங்கள், மேடை நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், விளக்கப் படங்கள் முதலானவற்றின் மூலம் மக்கள் மத்தியில் அசலான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர். சர்வோதயத் தலைவர் நாராயண் தோஷி இந்த இயக்கத்துக்குத் தலைமையேற்று செயல்வீரர்களுக்குப் பயிற்சி நிலையம் அமைத்து வழிகாட்டி வருகிறார்.

ஆகஸ்ட் 6-ம் நாள். ஜப்பானின் ஹிரோஷிமாவில் இரண்டாம் உலகப் போரின்போது அணுகுண்டு வீசி மக்களைக் கொன்ற கொடியநாள். அதே போல ஏப்ரல் 26ம் ஒரு இருண்ட நாள். ஈராண்டுகளுக்கு முன்பு இதே நாளில் தான் ரஷியாவின் செர்னோபில் அணு உலையில் விபத்து ஏற்பட்டு அதனால் ஐரோப்பிய நாடுகள்வரை கதிரியக்கம் பரவி கொடிய விளைவுகளை ஏற்படுத்தியது. இவ்விரு நாட்களையும் அணு எதிர்ப்பு நாளாக அறிவித்து கிராமந்தோறும் பிரச்சார இயக்கங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் ஊர்வலங்களையும் நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு ஹிரோஷமா நினைவுநாளில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஏறத்தாழ 15,000க்கும் மேலான உழைக்கும் மக்கள் பங்கேற்று, ராஜீவின் அணு வெறியை எதிர்த்து முழங்கினர்.

ஈராண்டுகளுக்கு முன்பு ஹிரோஷிமா நினைவு நாளன்று காக்ரபூரைச் சுற்றியுள்ள 292 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் ஆதிவாசிகளும் ஊர்வலமாகச் சென்றபோது, போலீசு கும்பல் வெறிகொண்டு தாக்கியது. பெண்களென்றும் குழந்தைகளென்றும் பாராமல் மிருகத்தனமாக போலீசு தாக்கியதையடுத்து உழைக்கும் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள போலீசு கும்பல் மீது கல்லெறிந்து திருப்பித் தாக்கினர். ஆத்திரமுற்ற போலீசு பெரும்படையுடன் வந்து அப்பாவி கிராம மக்களை காட்டுமிராண்டித் தனமாக அடித்து, அவர்களின் வீடுகளைச் சூறையாடி துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரைக் கொன்று பலரைப் படுகாயப்படுத்தி விட்டு ஓய்ந்தது.

இக்கோரச் சம்பவத்தைக் கண்டித்து இவ்வியக்கத்தின் அமைப்பாளர்களும் செயல்வீரர்களும் உண்ணாவிரதமும், கையெழுத்து இயக்கமும் நடத்தினர். இதோடு மக்கள்மீது அக்கறை கொண்ட ஒரு சில விஞ்ஞானிகளும் காக்ரபூர் அணு திட்டம் நிலநடுக்கப் பகுதியில் நிறுவப்படுவதால் பேரபாயம் ஏற்படும்; நிறுவப்படும் அணு உலையில் ஏற்படும் கழிவுகளைக் கொண்டு புளுடோனியமாக மறு உற்பத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது; அதன் மூலம் அணு ஆயுதங்களைத் தயாரிக்க முயற்சிக்கிறது என்ற உண்மைகளை அம்பலப்படுத்தி அணு எதிர்ப்பு இயக்கத்திற்கு வலுவூட்டி வருகிறார்கள்.

மேற்கே குஜராத் மக்கள் போராடுவதைப் போலவே தெற்கே கர்நாடகத்தின் வடக்கு கனரா மாவட்டத்தின் கார்வார் துறைமுகத்திற்கு அருகேயுள்ள கைகா பகுதி வாழ் மக்களும் போராடி வருகிறார்கள். இப்பகுதியில் பாசிச ராஜீவ் அரசு நிறுவ எத்தணித்துள்ள அணுமின் திட்டத்தால் சுற்றுச் சூழல் கடுமையாகப் பாதிக்கும். இத்திட்டத்தின் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலைக் காடுகள் அழிவுருவதால் மழை பெய்வதற்கான வாய்ப்பு சுருங்கிப் போய் விவசாயிகளின் பிழைப்பில் மண் விழும்; எனவேதான் கைகாவைச் சுற்றியுள்ள விவசாயிகள் கடந்த மூன்றாண்டு காலமாக இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து விடாப்பிடியாகப் போராடி வருகிறார்கள். அணு சக்திக்கு எதிரான குடிமக்கள் இயக்கம் என்ற பெயரில் போராடி வரும் இம்மக்கள் கடந்த மார்ச் மாதத்தில் 300 கி.மீ. தூரத்திற்குப் பாதயாத்திரை பிரச்சாரம் செய்தனர். தங்கள் கோரிக்கையை ஆதரித்து மத்திய அரசுடன் போராட வக்கற்ற ஜனதா முதல்வர் ஹெக்டேவை 'கெரோ' செய்தனர். சமீபத்தில் பெங்களூரில் விஞ்ஞானிகள், பத்திரிக்கையாளர்கள், பள்ளி மாணவர்கள், விவசாயிகளைக் கொண்ட அணு எதிப்பு ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடத்தினர். நாட்டுக்கும் மக்களுக்கும் பேரபாயத்தை விளைவிக்கும் இத்திட்டம் கைவிடப் படாதவரை எங்கள் போராட்டம் ஓயாது என்று உறுதியுடன் கூறுகிறார்கள் கைகா பகுதி வாழ் விவசாயிகள்.

அணுவெறி பிடித்து பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல் திணித்த இன்னுமொரு திட்டம் கேரளாவின் கொத்தமங்கலம் அணுமின் திட்டம். சுற்றுச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்படுவதோடு, மக்கள் தொகை அடர்த்தியாக உள்ள இப்பகுதியில் நிறுவப்படும் அணுமின் திட்டத்தால் மனித இனத்துக்கே பேரபாயம் ஏற்படும் என்று விஞ்ஞானிகளும் எதிர்கட்சியினரும் பகுதிவாழ் மக்களுடன் இணைந்த போராடினர். இதன் காரணமாக தேர்தலில் ஓட்டுப் பொறுக்க வாய்ப்பில்லாமல் போகும் என்றஞ்சிய காங்கிரசு கும்பல் இத்திட்டத்தை தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டது. மீண்டும் இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நரித்தனத்தோடு இப்போது முயற்சித்து வருகிறது.

கூடுதல் செலவு மட்டுமின்றி, மனித இனத்துக்கே பேரபாயமாக இருப்பதால் ரஷ்யா, அமெரிக்கா, ஸ்வீடன், மே.ஜெர்மனி, சீனா முதலான நாடுகள் அணுசக்தியையே கைவிட்டுக் கொண்டிருக்கும் நிலையில், மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறையின்றி, ஏழை நாடான இந்தியாவில் பெருஞ்செலவில் அணுசக்தி நிலையங்களை நிறுவ வெறிப்பிடித்தலைகிறது பாசிச ராஜீவ் கும்பல். அணுவெறியும் பிராந்திய மேலாதிக்க வெறியும் பிடித்தலையும் பாசிச ராஜீவ் கும்பல் ஒரு போதும் வெற்றி பெறப் போவதில்லை; மக்கள் போராட்டங்கள் தோற்றதாக வரலாறு மில்லை.

**மனோகரன்**

## குழந்தைகள் கறிக்காக கடத்திக் கொல்லப்படும் காட்டுமிராண்டித்தனம்

*'மனுஷனை மனுஷன் சாப்படுறாண்டா தம்பிப் பயலே' என்று கவிஞர் உருவகமாகக் குறிப்பிட்டது இன்று உண்மையாகி விட்டது. சமீபத்தில் உ.பி.யில் ஒரு கிரிமினல் கும்பல் கறிக்காக குழந்தைகளைக் கடத்தி சென்று கான்பூரிலுள்ள ஒரு ஓட்டலுக்கு விற்றுள்ளனர். தற்செயலாக இக்கும்பலைச் சேர்ந்த ஒருவன் போலீசாரிடம் சிக்கிய போது இந்த உண்மையை ஒப்புக் கொண்டுள்ளான். அவன் பிடித்து வைத்திருந்த இரண்டு குழந்தைகளையும், போலீசார் மீட்டுள்ளனர்.*

*கான்பூரிலுள்ள ஒரு ஓட்டலில் கறி பிரியாணியோடு மனிதக் கறியையும் கலந்து விற்பதற்காக பச்சிளம் குழந்தைகள் கடத்தி வரப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்; உ.பி.யில் பல மாவட்டங்களிலிருந்தும் குழந்தைகளைக் கடத்தி வந்து அந்த ஓட்டலுக்கு விற்பதையே ஒரு கிரிமினல் கும்பல் தொழிலாகக் கொண்டு செயல்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டுகின்றனர் திவாரி, ஓம்பிரகாஷ் முதலான சட்ட மேலவை உறுப்பினர்கள்.*

*உ.பி. சட்ட மேலவையில் இதுபற்றி உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலம் அரசை சாடிய பிறகு, போலீசு அந்த ஓட்டலில் சோதனை நடத்தி, அதன் உரிமையாளரைக் கைது செய்து, விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கறியை பரிசோதனைக்கு அனுப்பியது. பரிசோதனையாளர்கள் அது மனிதக் கறியல்ல என்று உறுதியளித்தனர். 'இல்லை! இது வெறும் பித்தலாட்டம்! திட்டமிட்டே போலீசார் அந்த ஓட்டலுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்துவிட்டு இப்படி சோதனை நாடகமாடி ஏய்க்கின்றனர்' என்று குற்றம் சாட்டுகிறார் கால்ராஜ் மிஸ்ரா என்ற பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்.*

*பிச்சை எடுப்பதற்காக மெக்காவுக்குக் குழந்தைகளைக் கடத்திச் சென்றது ஒரு கிரிமினல் கும்பல். இளஞ்சிறுமிகளை விபச்சாரத்திற்காக கடத்தி விற்கிறது இன்னுமொரு கும்பல். இப்போது கறிக்காக குழந்தைகளைக் கடத்தி சென்று கொல்லவும் துணிந்து விட்டனர்.*

*உகாண்டாவின் முன்னாள் காட்டுமிராண்டி ராணுவ சர்வாதிகாரி இடிஅமின் மனிதக் கறியை சமைத்து சுவைத்தானாம். சமூக விரோதிகளை சுதந்திரமாக உலவ விட்டுள்ள பாசிச ராஜீவ் கும்பல் இப்போது இந்திய மக்களுக்கும் அந்த 'வாய்ப்பை' ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இரக்கமற்ற அரக்கர்களின் ஆட்சியில் இதுவும் நடக்கும்; இன்னமும் நடக்கும்!*

www.padippakam.com




**வ**றுமையின் கோரப்பிடிக்குள் சிக்கிய குடும்பங்கள் பூண்டோடு தற்கொலை செய்துகொள்ளும் செய்திகள் நமது நாட்டில் புதிதல்ல. கூட்டு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு விதவிதமாக மாண்டுபோகும் குடும்பங்களைப் பற்றி பரபரப்பாக எழுதிக் காசு சேர்க்கும் பத்திரிக்கைகளும் உண்டு. ஆனால் இப்போது நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் அத்தனை பேரும் பட்டினியில் சிக்கி சிறுகச் சிறுகச் சாவும் செய்திகள் வருகின்றன. ஆங்கிலேயக் காலனி ஆட்சியில் நடந்தது போல கிராமம் கிராமமாகவும் பட்டினிச் சாவுகள் கவ்விக் கொண்டு வருகின்றன.

கிழக்கே ஒரிசாவின் கலகாந்தி, கோராபுட் மாவட்டங்களின் பட்டினிச் சாவுகளைத் தொடர்ந்து தெற்கே ஆந்திராவுக்குப் பரவியது. இப்போது மேற்கே ராஜஸ்தானிலும் பட்டினிச் சாவுகள் என்கிற செய்தி வந்துள்ளது.

வளமான காடுகள் நிறைந்த கலகாந்தி, கோராபுட் மாவட்டங்களில் அரசின் அலட்சியம் காரணமாகவும் அடுத்தடுத்து வந்த வறட்சி காரணமாகவும் பட்டினிச் சாவுகள். தெலுங்கு மக்களின் கௌரவத்தை நிலைநாட்டுவதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்த என்.டி.ஆரின் தெலுங்கு தேசக் கட்சி தெலுங்கு மக்களின் உயிரைக் கூடக் காப்பாற்றத் தவறியது. ராஜஸ்தானின் ஒரு பகுதி பாலைவனம் தான், ஆனால் என்ன, இந்திரா கால்வாய் வெட்டி சோலைவனமாக்கி மக்களுக்கு வாழ்வளிக்கப் போவதாக செய்திப் படங்கள் காட்டினார்கள். ஆனால் அங்கே இப்போது உள்ள நிலைமை என்ன?

ராஜஸ்தான் மாநிலம், பார்மெர் மாவட்டம். பார்மெர் நகரிலிருந்து தார்பாலைவன மணல் மேடுகளைக் கடந்து போகிறது பிரதானச் சாலை. பார்மெர் நகரில் இருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சாவா ஒரு பெரிய கிராமம். 2700 பேர் வாழும் இக்கிராமத்தில் கடந்த அக்டோபர் முதல் மார்ச் வரை ஆறு மாதங்களில் 64 பேர் பட்டினியால் மாண்டுபோனதாக ஓர் அறிக்கை வந்துள்ளது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் மட்டும் 46 பேர் பட்டினியின் கொடுமைக்குப் பலியாகிவிட்டனர் என அரசு நிர்வாகமே ஒப்புக் கொள்கிறது.

தலைநகருக்கு அருகே, பிரதானச் சாலையில் உள்ள கிராமத்திலேயே இந்த நிலை என்றால் தொலைவாகவும், மூலைமுடுக்குகளில் உள்ள கிராமங்களின் நிலைமை என்ன? மோசமாகத்தான் இருக்கிறது என்று இரகசியமாக ஒப்புக் கொள்கிறார்கள் 'நேர்மையான' ஒருசில அதிகாரிகள். கடந்த மூன்றாண்டுகளாகவே கடும் வறட்சி நீடிக்கிறது. பிராந்தியத்தில் பயிர் பச்சைகள் எல்லாமே பூண்டோடு ஒழிந்து போய் விட்டன. கால்நடைகள் அனைத்தும் மாண்டுபோய் விட்டன. இப்போது மழை வந்தாலும் விதைகளோ, உழுபடை கால்நடைகளோ கிடையாது. விவசாயத்தை விட கால்நடை வளர்ப்புகள் இந்தப் பகுதி மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது. இப்போது மாடுகள், ஒட்டகங்கள், ஆடுகள் எல்லாம் மாண்டுபோய் விட்டன.

பட்டினியால் சிறுகச் சிறுக செத்துக் கொண்டிருக்கும் மக்கள் வாய் வெளுத்து, ஈறுகள் சிவந்து கைகால்கள் வீங்கி நடைபிணமாக வாழுகிறார்கள். பாலைவன மருத்துவ ஆய்வுமைய அறிக்கையின்படி போதிய சத்துணவின்றி பெரும்பான்மையான மக்களை எலும்புருக்கி நோய் தொத்திக் கொண்டுள்ளது. சௌதான் தாலுக்காவிலுள்ள சாவா, கோன்ரா, பூஞ்சாசார், பிசோசார் இதானி போன்ற கிராமங்களுக்கு பட்டினிச் சாவுகள் பரவியுள்ளது. அங்கே வாழும் மக்கள் அரைவயிறு உணவு கூட இல்லாமல் பல நாட்கள் பட்டினி கிடக்கிறார்கள். போதிய சத்துணவின்றி வயிற்றுப் போக்கு, சுவாச முட்டுதல் ஏற்பட்டு பட்டினிச் சாவுகள் நடந்துள்ளன. பத்து வயதுக்குக் குறைவான குழந்தைகள் இரத்த சோகையினால் வெளிறிக் கிடக்கிறார்கள்.

பூஞ்ச்சார் கிராமத்தில் அரசு அறிக்கையின்படி பட்டினிச் சாவுகள் கிடையாது. ஆனால் வருட ஆரம்பத்தில் நிறையப் பேர் பட்டினியால் செத்ததாகக் கிராம மக்கள் கூறுகின்றனர். இப்போதும் 50, 60 பேர் மரணப் படுக்கையில் கிடக்கிறார்கள். இந்தக் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் ஒரே ஒரு ஒட்டகம் தவிர கிராமத்திலிருந்த எல்லாக் கால்நடைகளும் மாண்டு போய் விட்டன. 200-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கிராமத்தைக் காலி செய்து கொண்டு பஞ்சம் பிழைக்கப் போய் விட்டன. அதை அடுத்து பாகிஸ்தான் எல்லையில் உள்ள குக்கிராமம் பிசேசார் இதானி. அங்கே இப்போது பெண்களும் குழந்தைகளும் மட்டுமே வசிக்கிறார்கள். ஆண்கள் பிழைப்பைத் தேடிப் போய் விட்டார்கள். இவ்விரு கிராமங்களிலும் பட்டினியின் காரணமாக அனைவரையுமே மாலைக்கண் நோய் தாக்கியுள்ளது. பெண்களின் கைகால்கள் வீங்கியும் குழந்தைகளின் உடம்பு முழுவதும் கொப்புளங்களும் வந்து தவிக்கிறார்கள்.

சாவா கிராமத்தின் ஓரிரு படித்த இளைஞர்களின் முயற்சியினாலும் பாலைவன மருத்துவ ஆய்வு மையத்தின் மருத்துவர்களில் சிலரது அக்கறையினாலும் இக்கிராமங்களில் தற்காலிக நிவாரணங்கள் கொடுக்கப்படுகின்றன. அதுவும் கஞ்சி ஊற்றி உடனடிச் சாவிலிருந்து இப்போதைக்குத் தடுக்கும் நடவடிக்கைகள் தாம்!

இது பாலைவனப் பிராந்தியமாக இருந்தாலும் கால்நடை வளர்ப்பும், சில பள்ளத்தாக்குகளில் விவசாயமும், கலை வேலைப்பாடுகளுடைய கைத்தொழில்களும் செய்து மக்கள் சுயசார்பில் பிழைத்து வந்தனர். தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களின் புறக்கணிப்பு காரணமாக இத்தொழில்களும் நசிந்து போய்விட்டன. எத்தியோப்பியா உட்பட பல ஆப்பிரிக்க நாடுகளின் மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளி விட்டு பிறகு மனிதாபிமானம், நிவாரணம் என்கிற பெயரில் கஞ்சித் தொட்டிகள் திறந்துள்ளனர், ஏகாதிபத்திய வாதிகள். அதே போல சோசலிசம் பேசி ஏய்த்து நாற்பதாண்டுகள் நாட்டை ஆண்ட நேரு பரம்பரையும் காங்கிரசும் கிராமம் கிராமமாகப் பட்டினிச் சாவுக்குப் பலி கொடுக்கிறார்கள்

பசுமைப் புரட்சி செய்து, வளம் சேர்த்து, விவசாய உற்பத்தியில் தன்னிறைவடைந்து விட்டதாகச் சொன்னது பாசிச இந்திரா ராஜீவ் கும்பல். ஆனால் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் சமையல் எண்ணெய் ஆகிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. பசுமைப் புரட்சி உட்பட அரசின் விவசாயக் கொள்கைகள் நாட்டைப் பாலைவனமாகவும், பஞ்சபூமியாகவும் ஆக்கி வருகின்றன. கலகாந்தி, கோராபுட், அடிலாபாத் மற்றும் பார்மெர் மாவட்டங்களில் நிகழ்ந்துள்ள பட்டினிச் சாவுகள் இதையே நிரூபிக்கின்றன.

**மணி**

படிப்பகம்

www.padippakam.com

# சர்வமும் ஊழல் மயம்!

அப்பட்டமாகப் புளுகுவதென்பது பாசிஸ்டுகளின் பிறவிக்குணம். அதிலும் தனக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் வரும்போது திரும்பத் திரும்ப மறுத்து பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுவதென்பது பாசிச இந்திரா-ராஜீவ் கும்பலின் பரம்பரை குணம். போபர்ஸ் பீரங்கி பேரத்திலும், ஹெச்.டி.டபிள்யூ எனும் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் பேரத்திலும் ஊழல் எதுவும் நடக்கவில்லை; இடைத்தரகர்களே இல்லையென்று சத்தியம் செய்தும், பாராளுமன்றக் கமிட்டி மூலம் விசாரணை நாடகமாடியும் தன்னை திருவாளர் பரிசுத்தம் என்று நம்பச் சொன்னார் பாசிச ராஜீவ். ஆனால் ராஜீவ் அரசின் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியே, சமீபத்திய தனது அறிக்கையில், ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது என்ற உண்மையை அம்பலப் படுத்தி ராஜீவ் கும்பலின் முகத்தில் கரியைப் பூசியுள்ளார்.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழலுக்கு முன் ஊழல் சமுத்திரத்திலிருந்து வெளியே தலைகாட்டிய விவகாரம் தான் மேற்கு ஜெர்மனியின் ஹெச்.டி.டபிள்யூ எனும் நீர்மூழ்கிக் கப்பல் பேரம். பாசிச இந்திரா-சஞ்சய்-மேனகாவின்தாய் ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர். 430 கோடி ரூபாய் பேரத்தில் 7 சதவீதம் அதாவது ரூ30 கோடி கமிஷனாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கப்பல் பேர ஊழலில் இந்துஜாக்கள்தான் தரகர்களாகச் செயல்பட்டனர். தரகர்களுக்கு கமிஷன் தொகை தரவேண்டி உதிரிப் பாகங்களின் விலையை திடீரென உயர்த்தியது. அந்நிறுவனம்.

அன்றைய ராணுவ மந்திரி வி.பி.சிங் கப்பல் பேர விசாரணைக்கு உத்திரவிட்டதும் அவர் ஆட்சியைப் பிடிக்க சதி செய்கிறார் என்று ராஜீவ் கும்பல் அவதூறுகளையும் குற்றச்சாட்டுகளையும் அள்ளிவீசியது. தான் தூக்கியெறியப்படுமுன்னே வி.பி.சிங் விலகிக் கொண்டார். அதன் பிறகு புலனாய்வுத் துறையின் மூலம் விசாரணை நடத்தியதாகவும் ஊழல் எதுவுமே நடக்கவில்லை என்றும் ராஜீவ் கும்பல் பசப்பியது. ஊழல் விவகாரத்தை ஒருவழியாக அமுக்கிவிட்ட நிம்மதியில் ராஜீவ் கும்பல் பெருமூச்சு விட்ட நேரத்தில் இப்போது வெளியாகியுள்ள தணிக்கை கட்டுப்பாடுத்துறையின் அறிக்கை அதன் குரல்வளையை நெறிக்கிறது.

மே.ஜெர்மனியிடமிருந்து வாங்கப் பட்ட நீர்மூழ்கிக் கப்பல் தொழில்நுட்ப ரீதியில் பின்தங்கியதும், கூடுதல் செலவானதுமாகும். இதைவிட ஸ்வீடனின் 'கோக்கும்ஸ்' நீர்மூழ்கிக் கப்பல் குறைந்த விலையிலும், தொழில்நுட்ப ரீதியில் முன்னேறியதாக இருந்தும்கூட இந்திய அரசு அதைப் புறக்கணித்துள்ளது. இந்திய கப்பற்படை, ஜெர்மானிய நீர்மூழ்கியை தொழில்நுட்பக் காரணங்களால் வாங்க வேண்டாமென வலியுறுத்திய போதும்கூட அதை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்த காலாவதியான கப்பலை வாங்கியுள்ளது. 1980ல் பேச்சு வார்த்தை நடத்திவிட்டு 18 மாதகாலம் கழித்து ஒப்பந்தம் போட்டதால், இதற்கிடையே கப்பலின் விலை கூடுதலாகி அதற்காக இந்திய அரசு அனாவசியமாக கூடுதல் விலை கொடுத்து வாங்கியுள்ளது. இது தவிர ஒப்பந்தத்திற்குப் பின் உதிரி உறுப்புகளின் விலையை 355 சதவீதம் அநியாயமாக ஹெச்.டி. டபிள்யூ நிறுவனம் உயர்த்தியுள்ளது. இந்திய அரசு இதையும் ஏற்றுக்கொண்டதால் தேவையில்லாமல் இன்னும் கூடுதல் செலவாகியுள்ளது. இத்தனைக்கும் பிறகு ஒப்பந்தம் போட்டு 5 ஆண்டு கழித்து மிகத் தாமதமாகத்தான் அந்நிறுவனம் நீர்மூழ்கியை வழங்கியுள்ளது. மொத்தத்தில் ஹெ.டி.டபிள்யூ நீர்மூழ்கிக் கப்பல் வாங்கியதில் கோடிக்கணக்கான ரூபாய் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது என்று தணிக்கை கட்டுப்பாட்டுத்துறையின் அறிக்கை குற்றம் சாட்டுகிறது. ஆக, பாசிச இந்திரா-ராஜீவ் கும்பல் 30 கோடி ரூபாயைக் கமிஷனாகக் கொள்ளையடிப்பதற்காகவே தரங்குறைந்த, காலாவதியாகிப்போன ஹெ.டி.டபிள்யூ நீர்மூழ்கிக் கப்பல் வாங்கப்பட்டுள்ளது என்கிற உண்மை இப்போது மீண்டும் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.



இதுதவிர, பாசிச இந்திராவும் ராஜீவும் ரூ15,000 கோடிக்கு மேல் ஆயுதங்களை வாங்கிக் குவிக்க ஓடி ஓடி போட்டுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தும் கள்ளச் சந்தையில் ஈடுபட்டுள்ள போபர்ஸ், திவாலாகிப் போன இங்கிலாந்தின் வெஸ்ட்லாந்து, காலாவதியான ஆயுதங்களை விற்கும் ஹெர்மஸ் ஆகிய நிறுவனங்களுடன்தான். இதன் மூலம் அடித்த கொள்ளை எவ்வளவு என்பது தரகர்களுக்கே வெளிச்சம்!

பாசிச இந்திரா-ராஜீவ் கும்பல் தேசவிரோதக் கொள்ளைக் கூட்டம் மட்டுமல்ல; ராஜீவின் பொற்கால ஆட்சி ஊழலும் அராஜகமும் நிறைந்த, மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறையற்ற, ஊதாரித்தனமான, வேண்டாத சுமையாகிப்போன ஆட்சிதான் என்பதை தணிக்கை கட்டுப்பாடுத் துறையின் அறிக்கை மேலும் நிரூபித்துக் காட்டுகிறது.

★ 1982-83ல் மத்திய அரசு காசநோய் ஒழிப்புக்காக தீர்மானித்த இலக்கில் '87 வரை 49 சதவீதம்தான் நிறைவேறியுள்ளது. புதிதாக 65 மாவட்டங்களில் காசநோய் தடுப்பு மையம்- மருத்துவமனை நிறுவ 1982ல் தீர்மானிக்கப்பட்ட திட்டம் இன்றுவரை நிறைவேற்றப்படவேயில்லை. 14 மாநிலங்களில் உள்ள காசநோய் மருத்துவமனைகளில் 1635 பதவிகளில் பயிற்சி பெறாத, தகுதியில்லாத மருத்துவர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதே சமயம் பல மருத்துவமனைகளில் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதால் நோயாளிகள் முறையாகக் கவனிக்கப் படுவதில்லை. நாட்டிலுள்ள 370 காசநோய் மருத்துவமனைகள் தொடர்ந்து மிக மோசமான நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் 100க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் 25 ஆண்டுக்கும் மேலான காலாவதியாகிப் போன எக்ஸ்-ரே கருவிகளைக் கொண்டு நோயாளிகள் பரிசோதனை செய்யப்படுகிறார்கள். இதுபோல் ஏராளமான கருவிகளும் சாதனங்களும் பழுது பார்க்கப்படாமலும், தகுதியற்ற நிலையிலும் உள்ளன. மறுபுறம் காசநோய் தடுப்புக்காக அரசு ஒதுக்கியுள்ள மருந்துகள், சாதனங்கள் முதலானவற்றை மாநில அரசுகள் பெற்று கொள்ளாததால் அவை இனி பயன்படுத்த முடியாதபடி பாழாகிக் கிடக்கின்றன.

★ இந்தியாவின் பயணிகள் விமானத் துறையான இந்தியன் ஏர். லைன்ஸ் பெருந்தீனி தின்னும் ஒரு வெள்ளையானையாக தொடர்ந்து நீடித்து வருகிறது. பயணிகளுக்குப் பரிமாறப்படும் குளிர்பானங்களுக்குத் தேவையான ஐஸ்கட்டி தயாரிக்கும் எந்திரங்களை பல லட்ச ரூபாய் செலவில் இரண்டாண்டுகளுக்கு முன் ஏர் லைன்ஸ் நிறுவனம் வாங்கியது. ஆனால் அவை துவக்கத்திலேயே சரியாக வேலை செய்யவில்லை. ஆனாலும் அதேபோன்ற 11 எந்திரங்களை அதைவிட கூடுதலாக 3 லட்ச ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. ஆனால் அத்தனை எந்திரங்களும் ஆரம்பத்தில் வாங்கியதைவிட மோசமாக இருந்தன. இந்த லட்சணத்தில் விற்பனை செய்த நிறுவனமும் எந்திரங்களைப் பழுது பார்க்க உதவி செய்ய மறுத்துவிட்டது.

★ மிகப்பெரிய ஏர்பஸ் போயிங் விமானத்தை ஓட்டிப் பழகுவதற்கு வசதியாக ஒரு சிறிய பயிற்சி விமானம் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் 1978ல் வாங்கப்பட்டது. ஆண்டுக்கு 1878 மணிநேரம் பயன்படுத்தக்கூடிய அந்த விமானம் 1978லிருந்து '86

படிப்பகம்

www.padippakam.com

முடிய வெறுமனே 443 மணிநேரம் தான் பயன்படுத்தப்பட்டது. இந்த லட்சணத்தில் இதை வாங்கியபோது மொத்த தொகையையும் செலுத்தாத தால் அன்னியச் செலாவணி இழப்பு ஏற்பட்டு மேலும் ரூ25 லட்சம் கொடுக்க வேண்டியதாயிற்று.

★ 1986-87 இந்தியன் ஏர் லைன்சின் 152 சர்வீசுகளும் போதிய வருவாய் இல்லாமல் வீண் ஜம்பத்திற் காக விண்ணில் பறந்துள்ளன. ஆனா லும் அவற்றை அரசு நிறுத்திவைக்க வில்லை. இது மட்டுமின்றி சிறு நகரங் களுக்கிடையிலான 'வாயுதூத்' விமா னங்கள் பயணிகளே இல்லாமல் பறந்து கொண்டு தொடர்ச்சியாக வரிப் பணத்தை விழுங்குகின்றன.

★ இந்திய விமானப்படைக்கு உதவிகரமாக உதிரிப்பாகங்கள் தயாரிக் கவும், பழுதுபார்க்கவும் இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் என்ற பொதுத்துறை நிறுவனம் நிறுவப்பட்ட திலிருந்து தொடர்ந்து வீண் விரயத்தி லும் ஊழலிலும் மூழ்கிக் கிடக்கிறது. விமானப்படைக்குத் தேவையான டாங்கி எதிர்ப்பு 'சீட்டா', 'சேடக்' எனும் ஹெலிக்காப்டர்களைத் தயா ரித்து வழங்குவதில் இந்நிறுவனம் தொடர்ச்சியாக தாமதப்படுத்தி வந்துள் ளது. இதனால் ஒவ்வொரு ஹெலிகாப் டருக்கும் ரூ3 கோடிவரை உற்பத்திச் செலவு தேவையில்லாமல் அதிகரித்துள் ளது. இதோடு இந்த ஹெலிகாப்டர் களை உரிய முறையில் பராமரிக்கவும் பழுது பார்க்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இழுத்தடித்ததன் விளை வாக ஏராளமான ஹெலிக்காப்டர்கள் துருப்பிடித்துக் கிடக்கின்றன.

-இப்படி அடுக்கடுக்காக குற்றச் சாட்டுகளை ராஜீவ் அரசு மீது தொடுக் கிறது தணிக்கை கட்டுப்பாட்டுத் துறை யின் அறிக்கை. "இந்தியா ஒரு ஏழை நாடு. எந்த வகையிலும் நாம் விரயமாக் கக்கூடாது. தவறுகள், குளறுபடிகள் நடப்பதைக் கண்டறிந்து தடுக்கவும், மக் களுக்குப் பயன்தரும் வகையில் பொரு ளாதாரத்தை செம்மைப்படுத்தவும் தணிக்கை கட்டுப்பாட்டுத்துறை நமக்கு உதவும். இதன் மூலம் தேவையற்ற வீண் செலவுகளை நாம் குறைக்க முடியும் என்று 1971ல் பொதுக்கணக்குக் கமிட் டியின் ஒரு பிரிவாக தணிக்கை கட்டுப் பாடுத்துறை நிறுவப்பட்டபோது மறைந்த குடியரசு தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக தணிக்கை கட்டுப்பாட்டுத்துறை இந் திரா-ராஜீவ் கும்பலின் ஆட்சியில் நீடித்து வரும் ஊழல், வீண்விரயம் அனாவசியச் செலவுகளை தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்துள்ள போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக் கப்படவேயில்லை.

குறிப்பாக, இந்திய ராணுவத்துறை யில் ஊழலும், அராஜகமும், தேவை யற்ற செலவுகளும் பெருகிக்கொண்டே போவதை தணிக்கை கட்டுப்பாட்டுத் துறை பலமுறை சுட்டிக்காட்டியும் இது வரை எந்த மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக ஊழலும் விரயமும் பூதாகர மாகப் பெருத்துவிட்டது.

★ கடந்த 25 ஆண்டுகளில் ராணு வத்துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச் சித்துறையின் செலவு மட்டும் 300 மடங்கு உயர்ந்துவிட்டது. 40 பரி சோதனைக் கூடங்கள், 30 இயக்குனர் கள், 3000 விஞ்ஞானிகள், 35 ராணு வத் தளவாடத் தொழிற்சாலைகள் இருந்தும்கூட ஒரு சாதாரண கைத்துப் பாக்கியை அரசு வெளிநாடுகளிட மிருந்து இறக்குமதி செய்கிறது.

★ ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி கள் 65 வயதுக்குப் பின்னரும் வெளி நாட்டுத் தூதராகவும், கவர்னராகவும் அனாவசியமாகப் பதவியில் ஒட்டிக் கொண்டு தின்று கொழுக்கின்றனர். ஓய்வு பெறும் ராணுவ அதிகாரியின் பென்சனை ரூ1500லிருந்து ரூ5000 மாக கடந்த ஐந்தாண்டுக்குள் உயர்த்திக் கொண்டுள்ளனர்.

★ தரக்குறைவான ஆயுதங்களை மட்டுமல்ல சிப்பாய்களுக்கு தரப்படும் உணவு உடைகளில்கூட தரக்குறை வானதை வாங்கி ராணுவ அதிகாரிகள் கமிஷன் அடிக்கின்றனர். 1985ல் சிப் பாய்களுக்கு தரப்பட்ட ஜட்டிகள் ஒரே சலவையில் சாயம் வெளுத்துப் போனது; பனியன்கள் தண்ணீரில் போட்டதும் சுருங்கிப் போனது. ஆனா லும் இவற்றை சலுகை விலையில் வாங் கியதாகக் கூறிக்கொண்டு 17 லட்ச ரூபாயைப் பாழடித்துள்ளனர்.


★ 1981ல் வெளிநாடுகளிலிருந்து ராணுவ மருத்துவமனைக்கு வாங்கப் பட்ட 4.42 லட்ச ரூபாய் மதிப்புடைய கருவிகள் இன்றுவரை பயன்படுத்தப் படாமல் துருப்பிடித்துக் கிடக்கின்றன. இதிலும் கமிஷன் அடித்துகொள்ளை யடித்துள்ளனர் ராணுவ அதிகாரிகள். இதில் வேடிக்கை என்னவென்றால், அனுமதிக்கப்பட்ட 7.5 சதவீத கமி ஷனுக்கு மாறாக 20 சதவீதம் வரை கமி ஷன் கொடுக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டுகிறது தணிக்கை கட்டுப் பாட்டுத்துறையின் அறிக்கை.

இவை எல்லாவற்றையும்விட, 1947-48ல் தொடங்கிய 'ஜீப்' ஊழல் கொள்ளையிலிருந்து இன்றைய போபர்ஸ் பீரங்கி பேர ஊழல்வரை ஒவ் வொரு ஆயுத பேரத்திலும் கோடி கோடியாய் கமிஷன் கொள்ளை நடந் துள்ளது. ஆனாலும், 'வீண் விரயமே கிடையாது; ராணுவத்துறை திட்டமிட்ட முறையில் இயங்கி செலவுகளைக் கட் டுப்படுத்துகிறது; 15 ஆண்டுகால தொலைநோக்குத் திட்டம் தீட்டி ஒழுங் கமைந்த முறையில் முன்னேறி வரு கிறது' என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறது பாதுகாப்புத்துறை அமைச் சகம். போதாக்குறைக்கு பாசிசப் பிர தமர் ராஜீவும், 'ராணுவச் செலவு களைக் குறைக்கச் சொல்பவர்கள் தேச விரோதிகள்' என்று முத்திரை குத்து கிறார்.

இத்தனைக்கும் பிறகும் தணிக்கை கட்டுப்பாட்டுத்துறை சுட்டிக்காட்டிய இக்கேடுகெட்ட ஆட்சிக்கு தனிப்பட்ட முறையிலும் தார்மீக ரீதியிலும் பொறுப் பேற்று பாசிச ராஜீவ் கும்பல் பதவி விலகிவிடும் என்று நம்புவது முட்டாள் தனம். தனது ஊழல் கொள்ளையால் மேலும் மேலும் அம்பலப்பட்டு முற் றாகத் தனிமைப்பட்டுப் போயுள்ள பாசிச ராஜீவ் கும்பல் தனது அதிகாரத் தைத் தக்க வைத்துக்கொள்ள வெறி பிடித்து தாக்கவே துணியும். நாடாளு மன்ற தேர்தல் வழிமுறைகளின் மூலம் இப்பாசிச கொள்ளைக் கூட்டத்தை ஒரு போதும் வீழ்த்தமுடியாது. நாடாளுமன் றப் பாதைக்கு வெளியே தொடுக்கும் பரந்துபட்ட மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் மூலமே முறியடிக்க முடியும்.

குமார்

ஹாடில் சமுத்திரத்திரத்திலிருந்து வெளியே தலைகாட்டும் ஹை. டி. டபிள்யூ நீர்மூழ்கிக் கப்பல்



படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்

# "ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்"

⑩

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இறந்துபோன போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் திருவாளர் பி. ராமமூர்த்தி எழுதிய "விடுதலைப் போரும் திரா விட இயக்கமும்" என்கிற இந்த நூலின் முதல் வரியிலிருந்து கடைசி வரிவரை திரும்பத் திரும்பப் படித்து விட்டோம்.

மார்க்சிய - லெனினிய சித்தாந்த அடிப்படையில் பாட்டாளி வர்க்கத் தனித்துவத்தோடு கூடிய கம்யூனிஸ்டுக் கட்சியைக் கட்டி வளர்ப்பது, காந்தீய - காங்கிரசின் துரோகத்தை அம்பலப் படுத்தி விடுதலைப் போரில் கம்யூனிச இயக்கத் தலைமையை நிறுவுவது; ஆயு தந் தாங்கிய புரட்சிப் பாதையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போரை நடத்தி, வெல்வது; பாட்டாளி வர்க்கத் தலைமையில் மக்கள் ஜனநாயக தேசீய அரசை நிறுவுவது;

— இந்த இலட்சிய நோக்கத்துக்காக அன்றைய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமை முயன்றதாக ராமமூர்த்தி தனது நூலில் எங்கேயும் குறிப்பிடவே இல்லை. மாறாக காந்தீய - காங்கிரசுத் தலைமைக்கு மிகவும் விசுவாசமாக வால்பிடித்துப் போன நிகழ்ச்சி களையே பெருமைக்குரிய சாதனை களாக வாக்கு மூலமளிக்கிறார்! அந்த வகையில் ராமமூர்த்திக்கு நன்றி சொல் வோம்! ஒரே ஒரு விவகாரத்தில் மட்டும் அந்தப் போலிக் கம்யூனிஸ்டு தலைமை காந்தீய - காங்கிரசுக்கு வால்பிடிக்க மறுத்து விட்டது. அந்த விவகாரத்திலும் கூட காந்தீய - காங்கிரசின் எஜமானர் களான ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதி களுக்கு நேரடியாக வால் பிடிப்பதாக முடிவு செய்தார்கள். அதாவது 1942 ஆகஸ்டில் காங்கிரசு "வெள்ளையனே வெளியேறு" போராட்டம் நடத்து வதாக இருந்த போது "மக்கள் திரள் போராட்டம் நடத்துவதாக பிரிட்டி ஷாரை மிரட்டக் கூடாது" என்று போலிக் கம்யூனிஸ்டுகள் எதிர்த்தார் கள்.

மற்றபடி "விடுதலைப் போராட்ட" காலகட்டம் முழுவதும் காங்கிரசுக்குள் ஒளிந்து கொண்டோ, வெளியிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்தோ, "முழுச் சுதந் திரம் உட்பட முற்போக்குத் தீர்மானங் களை" நிறைவேற்றும்படி காங்கிரசை நிர்பந்திப்பதே தமது புரட்சிகரக் கடமை யாக கொண்டு போலிக் கம்யூனிஸ்டு கள் செயல்பட்டனர். இந்த இலட் சணத்தில் வெட்கப்பட வேண்டிய ஒரு சம்பவத்தைப் பற்றி பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார் ராமமூர்த்தி.

காங்கிரசின் பார்பணீய - வர்ணா சிரமக் கொள்கைகளை எதிர்த்துப் போராடி வெளியேறி 10 ஆண்டு களாக சுயமரியாதை இயக்கம் நடத்திக் கொண்டிருந்த பெரியாரை மீண்டும் காங்கிரசில் சேர்ப்பதற்கு ராமமூர்த்தி முயன்றார். 1936-இல் ஜெயப் பிர காஷ் நாராயணனுடன் போய் பெரி யாரைச் சந்தித்தார். " 'காங்கிரசில் இருந்து எந்த சமதர்மத்தை நீங்கள் சாதிக்கப் போகிறீர்கள். அது வர்ணா சிரமத்தை, ஜாதிப்பாகுப்பாட்டைப் பாதுகாக்கும் மிகப் பெரிய கேடய மாகும். நான் காந்தியை நம்பினேன். அவரைப் பார்த்தாச்சு' என்று கூறி எங் கள் கோரிக்கையை உறுதியாக நிரா கரித்து விட்டார்" என்று எழுதுகிறார் ராமமூர்த்தி (பக்.154)

நம்பிக்கை இழக்காத ராமமூர்த்தி, "15, 16 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலை இன்று காங்கிரசில் இல்லை. அன்று காங்கிரசு இயக்கத்தில் பிரா மணர்கள் தான் அதிகம் தலைமையி லிருந்தனர். இன்று அப்படி இல்லை" என்று கூறி காங்கிரசு தலைமையிலும், அடுத்த மட்டத்திலும் இருந்த பல பார்ப் பணரல்லாதவர் பெயர்களைச் சொன் னார். அவர்கள் எல்லாம் சாதியத்தின் அடிமைகள் என்று பளிச்சென்று சொல்லி மீண்டும் காங்கிரசில் சேரு வதை மறுத்து விட்டார் பெரியார்.

"என்னமோ, இந்த காங்கிரஸ் பசங் கள நம்பி, அவர்கள் நடத்தும் இயக்கத் தில் சேர்ந்து கொண்டே கம்யூனிச இயக்கத்தைப் பரவச் செய்யலாம் என்று நீங்களெல்லாம் நம்புகிறீர்கள். ஏமாந்து போவீங்க. விடமாட்டார்கள். ஏதோ சாணக்கியத் தந்திரம் செய்யலாம் என்று நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தோணுது. எனக்கு நம்பிக்கையில்லை. நீங்கள் வெற்றி பெற்றால் நான் மகிழ்ச் சியடைவேன்' என்று கடைசியாகச் சொல்லி அனுப்பினார்" (ராமமூர்த்தி நூல், பக். 158)

எவ்வளவு தெளிவாகவும், தீர்க்க மாகவும் சொல்லியிருக்கிறார் பெரி யார்! ஆனால் போலிக் கம்யூனிஸ்டுத் தலைமைக்கு அது உரைக்கவில்லை. தொடர்ந்து காந்தீய - காங்கிரசு தலை மைக்கு வால் பிடித்துப் போய் தொழி லாளர் வர்க்கத்துக்குத் துரோகமிழைத் தனர். 1942 துவக்கத்தில் இரண்டா வது உலகப் போரில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் பெருந்தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருந்தது. இந்தியாவு க்குச் "சுதந்திரம் தரும்படி" அதன் நேச நாடுகளான அமெரிக்கா, ஆஸ்திரே லியா, பழையசீனா ஆகியன நிர்பந்தித் துக் கொண்டிருந்தன. ஆங்கிலேயக் காலனியாகவிருந்த பர்மாவின் தலை நகரான ரங்கூனைக் கைப்பற்றிய ஜப் பானிய ஏகாதிபத்தியபடைகள் வடகிழக் கிந்தியாவில் காலடி எடுத்து வைத்தன. கல்கத்தாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன.

உலகப் போரைப் பற்றியும், ஏகாதி பத்திய நாடுகளைப் பற்றியும் என்ன அணுகு முறையைக் கையாள்வது என்று அறியாது காங்கிரசு தலைமை பிளவு பட்டுக் குழம்பிப் போயிருந்தது. முஸ் லீம் லீக் தலைமையோ தனி நாடு கோரிக்கையை முன் வைத்து நிர்பந்தித் தது. இந்நிலையில் ஏகாதிபத்தியப் போருக்கு இந்திய அரசியல் சக்திகளின் ஆதரவைத் திரட்டும் நோக்கத்தோடு 1942 மார்ச்சில் சர்ஸ்டாஃப்போர்டு கிரிப்ஸ் என்ற இங்கிலாந்து மந்திரியின் தலைமையில் ஒரு தூதுக் குழுவைப் பிரிட்டிஷ் காலனிய அரசு அனுப்பி யது. அது காங்கிரசு-முஸ்லீம்-லீக் தலை வர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு "கம்யூனிஸ்டு" கட்சிப் பிரதிநிதி களைச் சந்தித்தது.

கிரிப்ஸ் கமிஷனரிடம் "கம்யூ னிஸ்டு" கட்சிப் பிரதிநிதிகள் எழுத்து பூர்வமாக ஒரு விண்ணப்பத்தைக்

> "என்னமோ, இந்த காங்கிரஸ் பசங்கள நம்பி, அவர்கள் நடத்தும் இயக்கத்தில் சேர்ந்து கொண்டே கம்யூனிச இயக்கத்தைப் பரவச் செய்யலாம் என்று நீங்களெல்லாம் நம்புகிறீர்கள், ஏமாந்து போவீங்க! விட மாட்டார்கள்; ஏதோ சாணக்கியத் தந்திரம் செய்ய லாம் என்று எனக்குத் தோணுது. எனக்கு நம்பிக்கையில்ல. நீங்கள் வெற்றி பெற்றால் நான் மகிழ்ச்சியடைவேன்" என்று ராமமூர்த்தி யிடம் கூறினார், பெரியார். எவ்வளவு தெளிவாகவும், தீர்க்கமாகவும் சொல்லியிருக்கிறார் பெரியார்! ஆனால் போலிக் கம்யூனிஸ்டுத் தலைமைக்கோ, ராமமூர்த்திக்கோ அது உரைக்க வில்லை.

படிப்பகம்

www.padippakam.com

கொடுத்தனர் அதில் "சமஷ்டி அரசியல் அமைப்பைக் கொண்ட சுதந்திர அரசியல் அமைப்பைக் கொண்ட சுதந்திர இந்தியாவின் அரசியல் அதிகாரத்தை காங்கிரசு-முஸ்லிம் லீக் அடங்கிய கூட்டுத் தலைமையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்கு வழிவகுக்கும் வகையிலும் பிரிட்டிஷாரின் உலகப் போருக்கு உதவும் வகையிலும் உடனடியாக காங்கிரசு - முஸ்லீம் லீக் தலைமையிலான ஒரு தேசீய சர்க்கார் நிறுவி அதனிடம் சகல அதிகாரங்களையும் ஒப்படைக்க வேண்டும்" என்று கோரியிருந்தனர். ஆனால் கிரிப்ஸ் கமிஷன் எல்லா கோரிக்கைகளையும் நிராகரித்து விட்டது.

இரண்டாம் உலகப் போர் முடிந்த போது உலக ஏகாதிபத்தியங்கள், குறிப்பாக ஆங்கிலேய ஏகாதிபத்தியம் மிகவும் பலவீனமடைந்து இருந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைமையிலான மக்கள் ஜனநாயக அரசுகள் அமைந்தன. வட கொரியாவிலும் வட வியத்நாமிலும் கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைமையிலான குடியரசுகள் பிரகடனப் படுத்தப்பட்டன. சீனாவில் மாவோ தலைமையிலான கம்யூனிஸ்டு கட்சி நாடு தழுவிய வெற்றியை நோக்கி முன்னேறியது.

மலேசியா, பர்மா இந்தோனேசியா ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான மக்கள் படைகளும்' தேசீயவாதிகளும் இணைந்து காலனிய ஆட்சிகளுக்கு முடிவு கட்டுவதற்கான ஆயுதப் போராட்டங்களை உக்கிரமாக நடத்தினர். இந்தியாவிலும் மக்கள் தன்னெழுச்சியான பலாத்காரமான விடுதலைப் போராட்டங்களில் இறங்கினர். அது நாடு தழுவியதாக வளர்ந்து இந்தியப் போலீசாரும், முப்படைகளும் காலனிய ஆட்சிக்கு எதிரான கலகங்களில் இறங்கினர். தளபதிகளின் கட்டளைகளுக்குக் கீழ்படிய மறுத்தனர். குறிப்பாக கடற்படைத் தளபதியின் எச்சரிக்கையைச் துச்சமென மதித்தனர். போராட்டத்தைக் கைவிடக் கோரிய காங்கிரசுத் தலைவர்களின் வேண்டுகோளை நிராகரித்து பம்பாய் நகரத் தொழிலாளர்களோடும் மக்களோடும் சேர்ந்து வெற்றிகரமான முறையில் பொது வேலை நிறுத்தம் செய்தனர்.

நாடெங்கும் நடந்த இந்த புரட்சிகர எழுச்சிக்கு உள்ளூர் அளவில் கம்யூனிஸ்டுகள் ஆதரவளித்தனர்; அணிகள் தீவிரமாக ஈடுபட்டனர். காலனிய அரசு நிலைகுலைந்து போயிருந்த இந்தச் சமயத்திலும், தேசீய விடுதலை போராட்டத்தின் மீது தனது பிடிப்பை காங்கிரசு – முஸ்லிம் லீக் தலைமை இழந்து போயிருந்த இந்தச் சமயத்திலும் புரட்சிகர எழுச்சிக்குத் தலைமையேற்று நடத்தக் கம்யூனிஸ்டு கட்சி தவறியது.

ஆங்கிலேய காலனிய அரசு நீடிக்க முடியாது என்கிற நிலை உறுதியான பிறகு, மூன்று பிரிட்டிஷ் மந்திரிகளடங்கிய உயர் மட்ட தூதுக் குழுவை அனுப்பி காங்கிரசு-முஸ்லிம் லீக் தலைவர்களுடன் அதிகார மாற்றம் பற்றிய பேரம் பேசியது. அந்த நிலையிலும் நாட்டைத் துண்டாடவும், காங்கிரசு முஸ்லிம் லீக் தலைமையிடம் அதிகாரத்தை ஒப்படைக்கவும் சம்மதித்து துரோகமிழைத்தது கம்யூனிஸ்டுக் கட்சி தலைமை. விடுதலைப் போர் பற்றி ராமமூர்த்தியே தரும் விவரங்கள், இந்த முடிவுக்குத்தான் வரவைக்கின்றன.

1947-அரசியல் அதிகார மாற்றத்துக்குப் பிறகு, டாங்கே - ராஜேஸ்வர ராவ் தலைமையிலிருந்த ஒரு பிரிவு துரோகக் கம்யூனிஸ்டுகள் அப்பட்டமாகவே காந்தீய-காங்கிரசுக் கட்சியின் ஒட்டுக் கட்சியாக இருந்து செயல்பட்டு வருகின்றனர். ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த பால தண்டாயுதம் காமராஜுடன் பேரம் பேசிக் கொண்டு விடுதலையாகி வெளியே வந்து போலிக் கம்யூனிஸ்டுகளுக்குத் தலைமையேற்று காங்கிரசுக்கு ஊழியஞ் செய்தார். அதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆருக்கும் காங்கிரசுக்கும் இடையே அரசியல் தரகர்களாக இருந்து ஆதாயம் அடைந்தனர், கலியாண சுந்தரமும் பாலதண்டாயுதமும்.



டாங்கே-ராஜேஸ்வரராவ் கும்பலிடமிருந்து பிரிந்து நம்பூதிரிபாடு-ராமமூர்த்தி - ரனதிவே - ஜோதிபாசு கும்பல் தனிக்கட்சியாக அமைத்துக் கொண்ட பிறகு, காங்கிரசு எதிர்ப்புதான் தமது கொள்கை என்று கூறி வருகின்றனர். இதுவும் கூட பிற ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளுடன் மாறிமாறி சந்தர்ப்பவாதத் தேர்தல் கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கானதொரு கைமருந்து தான்! அதே சமயம் வெளிநாட்டுக் கொள்கைகளிலும் பிளவுவாத, பிராந்தியவாத, வகுப்புவாத சந்திகளுக்கு எதிராகவும், ஏகாதிபத்திய சதிகளுக்கு எதிராகவும் காங்கிரசின் முற்போக்கு நடவடிக்கைகளை ஆதரிப்பதாகச் சொல்லிக் கொண்டு வால்பிடிக்கின்றனர். 1969-இல் காங்கிரசு பிளவுபட்டு இந்திரா அரசு சிறுபான்மையான போது நாடாளுமன்றத்தில் ஆதரித்தது, 1974-இல் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தில் ஒதுங்கியிருந்தது. 1975-76 அவசர நிலையின் போது தொடர்ந்து சட்டபூர்வமாக, இயங்கி இந்திராவின் பாசிச ஆட்சிக்கு மறைமுக ஆதரவளித்தது; 1987 அரசுத் தலைவர் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குள்ளிருந்து ஐந்தாம் படையாக இயங்கி பாசிச ராஜீவ் கும்பலின் பிரதிநிதி வெற்றிபெற உதவியது - ஆகிய பல்வேறு நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் காந்தீய - காங்கிரசுக்கு நம்பூதிரிபாடு தலைமையிலான கும்பல் சேவை செய்தது.

ஆனால் காங்கிரசு எதிர்ப்புதான் தமது தேர்தல் கூட்டுக்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருந்ததாக சாதிக்க முயல்கிறார் ராமமூர்த்தி. அமெரிக்க ஏகாதிபத்திய எடுபிடிக்கட்சியான ராஜாஜியின் சுதந்திரா கட்சியிலிருந்து பாசிச எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. வரை தேர்தல் கூட்டுகள் ஏற்படுத்தியதில் ராமமூர்த்தி நடத்திய பேரங்களை மறைத்து அவற்றைத் தனது சொந்த அரசியல் ராஜதந்திரங்களாக, கடைசி அத்தியாயத்தில் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்.

தி.மு.க. வுடனும் அ.தி.மு.க. வுடனும் மாறிமாறி கூட்டுப் போட்டு "முற்போக்கு ஜனநாயக" அணி அமைத்ததெல்லாம் காங்கிரசை வீழ்த்துவதற்குத் தான் என்று கூறுகிறார். ஒவ்வொரு முறை தேர்தல் கூட்டை மாற்றிக் கொண்டதற்கும் அவர் சொல்லும் காரணம் ஆட்சிக்கு வந்த பிறகு அவை காங்கிரசிடம் கூட்டு சேர்ந்ததுதான் என்று கூறுகிறார். ஆனால் அடிப்படையிலேயே மக்கள் விரோத, தொழிலாளி விரோத, ஜனநாயக விரோதக் கொள்கையைக் கடைப்பிடிப்பவை தான் என்பதை மூடி மறைத்து ஏதோ ஜனநாயக முற்போக்குக் கட்சிகள் போல் சித்தரிக்கிறார். அதுவும் எவ்வளவு பாமரத்தனமாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

1972-இல் கருணாநிதியும் எம்.ஜி. ஆரும் பிளவுபட்டதும் திண்டுக்கல் இடைத் தேர்தல் பற்றி பின்வருமாறு எழுதுகிறார், ராமமூர்த்தி. "மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சம்பந்தப்பட்ட மட்டில், இந்தப் பிளவு ஏற்பட்டவுடன் இதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்து, புதிதாக அமைக்கப்பட்ட அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் என்ன? குறிப்பாக மத்தியில் சர்வாதிகார போக்கில் போய்க் கொண்டிருக்கும் இந்திரா காங்கிரசின் மீது அதன் கொள்கை என்ன? அந்த மத்திய அரசு இந்த நாட்டில் ஏகபோக முதலாளித்துவத்தை வளர்க்கும் பாதையில் செல்லும் அடிப்படையான கொள்கைகளின் மீதும் அதன் கொள்கை என்ன? என்ற கேள்விகளைக் கிளப்பியது. இதற்கு ஆரம்பத்தில் எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை. தி.மு.க. சம்பந்தப்பட்ட மட்டில் அந்த சர்க்கார் தொழிலாளர்கள், விவசாயிகள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்த அடக்கு முறையின் சூழ்நிலையில் அதை ஆதரிப்பதற்கு இடமே இல்லை." (ராமமூர்த்தி நூல், பக். 447)

www.padippakam.com

''இப்படிப்பட்ட நிலையில் திண்டுக்கல் உபதேர்தலில் நாம் போட்டியிடுவது என்றே ஆரம்பத்தில் முடிவு செய்து, தோழர் என். சங்கரய்யாவை வேட்பாளராக நிறுத்துவது என்றும் அறிவித்துவிட்டோம்.

''இந்திரா காங்கிரசோடு கூட்டு இல்லை என்ற நிலை அ.தி.மு.க. வுக்கு ஏற்பட்ட பிறகு திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் நமது கட்சியின் சார்பாக என்னைச் சந்தித்தார். தன் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவு அளிக்குமாறு கோரினார். நான், எங்கள் கட்சியின் நிலை தெளிவானது; இந்திரா காங்கிரசோடு கூட்டுச் சேரும் எந்தக் கட்சியையும் நாங்கள் ஆதரிக்க முடியாது என்ற நிலை அது. நீங்களோ இது குறித்து உங்கள் நிலையை தெளிவாக்காத வரையில் எங்கள் கட்சி உங்களுடைய கட்சி வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பது என்ற பேச்சிற்கே இடமில்லை' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன்.

''அதன் பின்னர், சித்ரா கிருஷ்ணசாமி என்பவர் (திரைப்பட ஏடு ஒன்றின் ஆசிரியர்) வீட்டில் என்னைச் சந்தித்து, தனது கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்துவதாகக் கூறினார். பிறகு ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதன் முழு வாசகம் அவருடைய பத்திரிக்கையாகிய 'அண்ணா'வில் வெளியாயிற்று. ஏனைய பத்திரிக்கைகளிலும் அதன் சாராம்சம் வெளியாயிற்று, ''ஏகபோகங்களை ஆதரிப்பவர்கள் அவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், அவர்களை அ.தி.மு.க. ஆதரிக்காது'' என்பதே அந்த அறிக்கையின் சாராம்சம்.

''இந்த அறிக்கை வெளிவந்த பிறகு, நான் மாநிலக் கமிட்டித் தோழர்களுடனும், பொலிட்பீரோ தோழர்களுடனும் தொடர்பு கொண்டு, இந்திரா காங்கிரசின் வேட்பாளரை முறியடிப்பதுதான் பிரதானமான குறிக்கோள் என்ற அடிப்படையில், நமது கட்சி வேட்பாளரை வாபஸ் பெற்றுக் கொண்டு, அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்று ஏகமனதாக முடிவுக்கு கட்சி வந்தது.'' (மேற்படி நூல், பக். 448)

ஏகபோகங்களை எதிர்ப்பதாக எம்.ஜி.ஆர் அறிக்கை விட்டதும், தனது வேட்பாளரை விலக்கிக் கொண்டு அவரது கட்சியை வெற்றிபெறச் செய்தாராம்! அதுவரையும் அதன் பிறகு அவசர நிலை ஆட்சி உட்பட இந்திரா காங்கிரசின் எல்லா பாசிச நடவடிக்கைகளையும் ஆதரித்த எம்.ஜி.ஆரே ஒரு பாசிஸ்டு என்று போலிக் கம்யூனிஸ்டுகள் கருதவில்லை.

''தி.மு.க. சம்மந்தப்பட்ட மட்டில் அந்த சர்க்கார் தொழிலாளர்கள், விவசாயிகள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்த அடக்குமுறையின் சூழ்நிலையில் அதை ஆதரிப்பதற்கு இடமில்லை'' என்று கூறும் ராமமூர்த்தி 1977 தேர்தலில் மீண்டும் தி.மு.க. வுடன் கூட்டு சேருகிறார். அதற்குச் சொன்ன காரணம் அவசர நிலை ஆட்சியையும் காங்கிரசையும் தி.மு.க. எதிர்த்ததாம்! அதன் பிறகு தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, ஜனநாயக விரோத கொள்கைகளைத் தி.மு.க. கடைப் பிடிக்காது இந்திரா காங்கிரசுடன் சேராது என்று நம்பினார்களா.? தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால் அதன் யோக்கியதை புரிந்திருக்கும்; ஆனால் விரைவிலேயே இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தது ராமமூர்த்தியின் ஒட்டாண்டித்தனத்தை நிரூபித்தது.

திண்டுக்கல் தேர்தலின் போது ஏகபோகத்தை எதிர்ப்பதாக அறிக்கை விட்ட எம்.ஜி.ஆர். அவசர நிலை ஆட்சியை ஆதரித்ததோடு அதன் பிறகு வந்த பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரசோடு கூட்டுச் சேர்ந்து வெற்றி பெற்று, ராமமூர்த்தியின் முகத்தில் கரிபூசினார். அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் இடப்பங்கீட்டில் இந்திரா காங்கிரசோடு எம்.ஜி. ஆருக்கு தகராறு ஏற்பட்டதும் ஓடிப்போய் அவரோடு ஒட்டிக் கொண்டார், ராமமூர்த்தி. அதைத் தமது மகத்தான ராஜதந்திரமாக நினைத்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

''இந்தியாவில் மாநில சட்ட சபைக்கு 1977 ஜுனில் தேர்தல்கள் நடந்தன, அந்த தேர்தலில் தமிழ்நாட்டில் அ.தி.மு.க வுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் இருந்து வந்த உறவில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. மாநில சட்ட சபைக்கு அதிகமான (அளவுக்கு மீறி அதன் செல்வாக்குக்கும் மிஞ்சிய) தொகுதிகளை இந்திரா காங்கிரசு கோரியது.

''இந்த சிக்கலை கவனித்துக் கொண்டிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தக்க தருணத்தில் தலையிட்டது, எப்படியும் இந்திரா காங்கிரசு தமிழ் நாட்டில் அதிகப்படியான இடங்களை ஜெயிக்க விடக்கூடாது என்ற நோக்கத்துடன், அ.தி.மு. வுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தேர்தல் உடன்பாட்டிற்குச் சம்மதித்தது. இந்த உடன்பாட்டிற்கு முன்பு கட்சியின் மாநிலக் கமிட்டி மத்திய கமிட்டியின் பொலிட்பீரோ உறுப்பினர்கள் ஆகியோருடன் அவசர அவசரமாக கலந்து பேசி, இன்று தமிழ்நாட்டில் உள்ள நிலையில் இதுதான் இந்திரா காங்கிரசு ஆட்சி பீடத்தையோ அல்லது சட்டமன்றத்தில் கணிசமான இடங்களையோ பெறாமல் இருப்பதற்கு சரியான உபாயம் என்ற முறையில் கட்சியின் மேலிட, மாநில அமைப்புகளும் இந்தத் தொகுதி உடன்பாடு ஏற்பாட்டிற்கு சம்மதம் தெரிவித்த பிறகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஒப்பந்தத்தை செய்தது.

''இந்த ஏற்பாடு தமிழ் நாட்டிலிருந்த பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை. கட்சி அணிகளிடமும் ஆரம்பத்தில் ஒரு சிறிய அளவு குழப்பம் ஏற்பட்டது. ஆனால் இந்த ஏற்பாட்டைக் கண்டு இந்திரா காங்கிரசுக்கும், தி.மு.க. வுக்கும் ஏற்பட்ட பெரிய அதிர்ச்சியை கட்சி அணிகள் பார்த்தவுடன் சிறிதளவே இருந்த அந்தக் குழப்பம் கதிரவனுக்கு முன்னே மறையும் மூடுபனியைப் போல் மறைந்து விட்டது.'' (மேற்படி நூல், பக். 451)

அதேபோல 1980 ஜுனில் நடந்த சட்டமன்றத் தேர்தலிலும் எம்.ஜி.ஆர். கட்சியுடன் கூட்டுச்சேர்ந்தார். இரண்டு முறையும் எம்.ஜி.ஆர். கட்சி ஆட்சிக்கு வந்தது பற்றி, ''இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான அணுகுமுறையினால் தமிழ்நாட்டில் மீண்டும் இந்திரா காங்கிரசு பதவிக்கு வரமுடியாமல் தடுக்கப்பட்டது. இதன் விளைவாக சென்னை சட்டமன்றத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், வாலிபர்கள், டாக்டர்கள், நர்ஸுகள் ஆகியோரின் கோரிக்கைகள் மார்க்சிஸ்ட் கட்சியினரால் வன்மையாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதும் அவர்களுடைய போராட்டங்களுக்கு ஊக்கமளிக்கப்

## பச்சோந்திகள்

'மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்!' என்ற பழமொழிக்கு இன்றைய இன்றைய அரசியலில் மிகப் பொருத்தமாக இருப்பவர்கள் இடது — வலது போலிக் கம்யூனிஸ்டுகள் தான்.

ராஜீவின் மைய அரசு பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறைக்குத் தாரை வார்க்கிறது என்று மக்கள் மத்தியில் ஒப்பாரி வைக்கும் இந்த போலிகள் தங்கள் கூட்டணி ஆளுகின்ற கேரளாவில் மின் உற்பத்தி நிலையங்களை தனியார் துறைக்குவிட பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆளும் இடதுசாரி ஐக்கிய முன்னணி இணைப்புக்குழு கூட்டத்தில் கேரள மின்வாரியத்துறை அமைச்சர், மாண்புமிகு மார்க்சிஸ்ட் சிவதாஸ் மேனன்தான் இந்த முடிவை முன்மொழிந்திருக்கிறார்.

மேதாவி மேனன், பெரிய மின்திட்டங்களில் அதிக முதலீடு செய்வது அரசுக்கு சிரமமாக இருப்பதால், மைக்ரோ மற்றும் சிறிய மின்உற்பத்தி நிலையங்களை சோதனை முயற்சியாக தனியார் முதலாளிகளிடம் விட்டு சுலபமாக மின்தேவையைப் பூர்த்தி செய்யலாமென விளக்கியிருக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் 1986ல் கேரளாவில் ஆட்சியிலிருந்த காங்கிரசு கருணாகரன் அரசு, முன்னாரில் உள்ள டாட்டா தேயிலை எஸ்டேட்டில் சிறிய மின் உற்பத்தி நிலையம் நிறுவிக் கொள்ள அனுமதியளித்ததை எதிர்த்து இப்போலிக் கம்யூனிஸ்டுகள் போர்க்கொடி உயர்த்தினர். இன்று இக்கட்சியின் அணிகள் என்ன செய்யப் போகிறார்களோ, அவர்களுக்கே வெளிச்சம். ஓட்டுப்பெட்டியை முன்னுக்குத் தள்ளி புரட்சியை பின்னுக்குத் தள்ளும் இப் பச்சோந்திகளுக்கு இன்னும் சிவப்பு லேபிள் எதற்கு?



படிப்பகம்

www.padippakam.com

## நாற்காலி கம்யூனிஸ்டுகளுக்குள் நாய்ச்சண்டை

ராஜீவுக்கு தேசிய மாற்றை நிறுவ முயற்சிக்கும் எதிர்க்கட்சிகளின் நிலையைக் கண்டு பரிதாபப்படுவதா, பரிகசிப்பதா என்று தெரியவில்லை. எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமையை நிறுவ முயற்சிக்கும் அதே வேளையில் எல்லா கட்சிகளுக்குள்ளும் அதிருப்தி கோஷ்டிகள் பதவி வேட்டைக்கான நாய்சண்டையில் இறங்கி சந்திசிரிக்கின்றன. கர்நாடக ஜனதாவில் நடந்துவரும் குடுமிபிடி சண்டை ஊரறிந்த விஷயம். இப்போது மே. வங்க ஆளும் 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள்ளேயே அதிருப்தி கோஷ்டி கலகம் செய்து தலைமைக்கு பெருந் தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் மே. வங்கத்தில் நடைபெற்ற முனிசிபாலிடி தேர்தல்களில் ஆளும் இடதுசாரிக் கூட்டணி 11 முனிசிபாலிடிகளில் எட்டைக் கைப்பற்றியிருந்த போதிலும், அதிருப்தி- கலக கோஷ்டியைக் கண்டு கதிகலங்கி நிற்கிறது. 24 பர்கானா மாவட்டத்தில் உள்ள பாணிஹட்டி முனிசிபாலிடியை மார்க்சிஸ்ட் கட்சியின் அதிருப்தி கோஷ்ட்டி முற்றாக கைப்பற்றியுள்ளது. இம்மாவட்டத்தில் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளர்கள் 5 இடங்களில்தான் வெற்றிபெற முடிந்தது. பாணிகட்டி முனிசிபாலிடி மட்டுமல்ல, இம்மாவட்டத்தில் 9 கிளைக் கமிட்டிகளையும் அதிருப்தி கோஷ்டி தன்வயப் படுத்தியுள்ளது. கட்சியின் மாவட்டக் கமிட்டியோ தன் கட்டுப்பாட்டைச் செலுத்த முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது.

வெளியேற்றப்பட்ட முன்னாள் 24 பர்கானா மாவட்டக் கமிட்டி உறுப்பினர் துலால் சக்கரவர்த்தி தலைமையில், பாணிகட்டி நகரிக் கமிட்டி (PNC) என்ற பெயரில் இயங்கிவரும் அதிருப்தி கோஷ்டியினர், மார்க்சிஸ்ட் கட்சித் தலைமையின் அதிகாரத்துவப் போக்கையும், தலைவர்களின் சுயவிமர்சனமற்ற போக்கையும் எதிர்ப்பதாகவும், அரசாங்க எந்திரத்தைச் சார்ந்து நின்று முறைகேடாக கட்சியானது தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். அதிருப்தி கோஷ்டியின் முக்கிய புள்ளியும், பாணிகட்டி முனிசிபாலிடியின் முன்னாள் சேர்மனுமான அனிமேஷ் மஜும்தாரை தேர்தலில் தோற்கடிக்க மார்க்சிஸ்ட் கட்சி தலைகீழாக நின்றும்கூட முடியவில்லை. தேர்தல் முடிவுகள் வெளியானதும் வெற்றிக்களிப்பில் அதிருப்தி கோஷ்ட்டியினர் ஊர்வலம், பொதுக்கூட்டங்கள் நடத்தி மார்க்சிஸ்டுகளின் முகத்தில் கரிபூசுகின்றனர். பதிலுக்கு 'மார்க்சிஸ்ட்' கட்சி தனது சக்தியைக் காட்ட எதிர் ஊர்வலம் நடத்தியது. ஆனால் கூட்டம்தான் சேரவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, பாரக்பூர் தொழிற்பேட்டை பகுதியில் மார்க்சிஸ்ட் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு.வின் கையாலாகாத்தனத்தால் ஏராளமான ஆலைகள் மூடப்பட்டு வீதியில் வீசியெறியப்பட்டு விரக்தியடைந்த தொழிலாளர்கள் இப்போது அதிருப்தி கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டு மார்க்சிஸ்டுகளின் துரோகத்தை அம்பலப்படுத்தி வருகின்றனர். இனி சி.ஐ.டி.யு. 24 பர்கானா மாவட்டத்தில் தாக்குப் பிடிக்க முடியுமா என்பதே கேள்விக் குறியாகிவிட்டது. அதிருப்தி கோஷ்டியின் செல்வாக்கைக் கண்டு மாநிலத்தின் பல பகுதிகளிலும் இப்போது அதிருப்தியாளர்கள் கலகக் கொடி தூக்குகின்றனர்.

அரசியல் — சித்தாந்த காரணங்களால் குழுக்களாகப் பிளவுபட்ட நக்சல்பாரி புரட்சியாளர்களைப் பார்த்து அவதூறு — கேலி செய்த மார்க்சிஸ்டுகள் இன்று கேவலம் பதவி வேட்டைக்காக நாய்ச் சண்டையில் இறங்கி கணக்கிலடங்கா கோஷ்டிகளாகச் சிதறிவருகின்றனர். நேற்று கேரளத்தில் ராகவன் கோஷ்டி; இன்று மே. வங்கத்தில் சக்கரவர்த்தி கோஷ்டி.... நல்ல முன்னேற்றம்தான்!

---

பட்டு வந்ததும் நாடறிந்த விஷயம்''

நமது காலத்தில் நமது கண் முன்னாலேயே நடந்த உண்மைகளை மூடி மறைத்து திரித்துப் புரட்டி எவ்வளவு அயோக்கித்தனமாக எழுதுகிறார்? இந்திரா காங்கிரசு ஆட்சிக்கு வரவில்லையே தவிர அதன் எடுபிடியாகவும் கைப்பாவையாகவும் இருந்து தானே பாசிச எம்.ஜி.ஆரின் வக்கிர ஆட்சி நடந்தது! 1971 தேர்தலுக்குப் பிறகு எம்.ஜி.ஆரே வலியப் போய் தஞ்சை, திருப்பத்தூர் இடைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரசை ஆதரித்தார். ''வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்ட மாதிரி மீண்டும், அவர் இந்திரா காங்கிரசு பக்கம் தாவினார். அவரிடம் இந்தப் போக்கு தவறானது என்று அவ்வளவு மன்றாடிக் கேட்டுக் கொண்ட போதிலும் அது பயனளிக்கவில்லை'' என்று வெட்கமின்றி ராமமூர்த்தி எழுதுகிறார். (மேற்படி நூல், பக். 451-452)

அதே போல 1980 தேர்தலில் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு இந்திராவின் எல்லா மக்கள் விரோத, தேச விரோத, ஜனநாயக விரோதகொள்கைகளையும் எம்.ஜி.ஆர். ஆதரித்தார். சர்வதேச நிதிநிறுவனத்துக்கு இந்தியாவை அடகு வைக்கும் படியான நிபந்தனைகளை ஏற்றுக் கடன் வாங்கிய பின் வந்த ஐந்தாண்டு திட்டத்தை எதிர்க்கும்படி எம்.ஜி.ஆரைக் கோரினாராம், ராமமூர்த்தி. ''அச்சமயம் அ.தி.மு.க முதல்வர் எம்.ஜி.ஆரை நான் அணுகி இதை எல்லாம் எடுத்து விளக்கமாகக் கூறி அவரும் இதை நிராகரிக்க வேண்டும் என்று கூறினேன்.

''ஆனால் அவரோ 'எங்கிருந்து பணம் வந்தால் என்ன! தமிழ் நாட்டிற்கு அதில் ஒரு கணிசமான பகுதி கிடைக்க வேண்டும் என்பது தான் என் கவலை' என்று கூறி, திட்டத்தை ஏற்றுக் கொண்டு, இந்திரா காந்திக்கு ஒத்தூதினார்'' - என்று ராமமூர்த்தியே எழுதுகிறார் (மேற்படி நூல், பக். 452-453)

1977-ல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி. ஆர். டிஐ சைக்கிள்ஸ், டி.வி.எஸ். சிம்கோ மீட்டர் போன்ற தொழிலாளர் போராட்டங்களை மிருகத்தனமாக ஒடுக்கினார். மாணவர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் போலீசார் என்று சகலபிரிவினரையும் நசுக்கினார். அதைப் பற்றி ராமமூர்த்தி எங்கேயும் குறிப்பிடவில்லை. 1980-இல் மீண்டும் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த போது எந்த ஒரு பிரிவினரும் போராட முடியாத நிலைமை இருந்தது. எஞ்சியிருந்த விவசாயி சங்கத்தையும் ஒழித்துக் கட்டினார். ஆனால் சகல பிரிவு மக்களின் கோரிக்கையையும் அப்போது சட்டமன்றத்தில் வலியுறுத்தி ஊக்கமளித்ததாக ராமமூர்த்தி புளுகுகிறார்

பாசிச எம்.ஜி.ஆர். மக்கள் இயக்கங்களை ஒடுக்கியது பற்றி துளி கூட ராமமூர்த்தி மூச்சு விடவில்லை. 1970 தேர்தலுக்குப் பிறகு தி.மு.க. ஆட்சி மக்கள் இயக்கங்கள் மீது தொடுத்த தாக்குதலை மட்டும் குறிப்பிடுகிறார். அதுவும் அவசர நிலை ஆட்சியை எதிர்த்த பிறகு ஜனநாயகக் கட்சியாகி விட்டதாகச் சித்தரிக்கிறார். தமது சந்தர்ப்பவாதத் தேர்தல் கூட்டுகளை நியாயப் படுத்துவதற்காக எம்.ஜி.ஆர்.- கருணாநிதி கட்சிகளுக்கு ஜனநாயக, முற்போக்கு முலாம் பூசுகிறார்.

இந்திரா காங்கிரசுடன் அவ்விரு கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு மாறிமாறி தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டது பற்றி ''இது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்கல்ல திராவிட இயக்கத்தின் உள்ளடக்கம்; உண்மையில், தமிழ் நாட்டின் முதலாளி வர்க்கத்தின் நலன் காத்திடும் கட்சி'' என்று குறிப்படுகிறார். அண்ணாதுரையும், கருணாநிதியும், எம்.ஜி.ஆரும் மத்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களை அடிப்படையாக எதிர்க்கவே இல்லை. நாட்டின் முதலாளித்துவ வளர்ச்சியில் தமிழ் நாட்டிற்கு அதிக பங்கு வேண்டும் என்று மட்டுமே கோரினார். என்று எழுதுகிறார் ராமமூர்த்தி. ஏகபோக முதலாளிகளைக் கூப்பிட்டுத் தொழில் துவங்கும்படி கோரியதாக குறைபட்டுக் கொள்கிறார். திருவாளர் ராமமூர்த்தியின் கட்சி ஆளும் கேரள, மேற்கு வங்க, திரிபுரா முதல்வர்கள் வேறு என்ன செய்கிறார்கள்?

திராவிட இயக்கத்தை அம்பலப் படுத்துவதற்காக ஒரு நூல் எழுதப்புறப் பட்ட ராமமூர்த்தி தமது கட்சியின் துரோகங்களுக்கான வாக்கு மூலமளிப்பதோடு தானே ஒரு காந்திய - காங்கிரசு - பார்ப்பனியவாதி என்பதை நிரூபித்துக் கொண்டுள்ளார். அது மட்டுமல்ல தன்னைத் தானே ஒரு மிகக் கைதேர்ந்த நாடாளுமன்ற அரசியல் தரகர் என்பதையும் நிரூபித்துக் கொண்டுள்ளார். அதுபற்றிச் சற்று விரிவான தொகுப்போடு அடுத்த இதழில் இந்த விமர்சனத் தொடர் முற்றும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம். கே. சாமி, பிரேம் பிரஸ், 107-எ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

www.padippakam.com

அடையாளம் தெரிகிறதா? தன்னுடைய அலங்கார பேச்சால், எழுத்தால் சுயமரியாதை இயக்க வழி வந்தவராக, சாதி, மத அடிப்படையிலான பழமை, பிற்போக்கு ' மூடநம்பிக்கைகளுக்கு எதிரானவராக பெருமை பேசித் திரியும் 'கலைஞர்' கருணாநிதி தான் இவர். இவருடைய பகுத்தறிவு உபதேசங்களை, இவரோ, இவருடைய உடன்பிறப்புக்களோ மதிப்பதில்லை என்பது ஏற்கனவே ஊரறிந்த விஷயம் தான்! அதற்காக இப்படியா! முற்றும் முழுக்க மதவாதியாக முஸ்லீம் பெருமகனாக மாறி - முஸ்லீம் குல்லாவும் சால்வையும் அணிந்துக் கொண்டு கருணை பொங்க காட்சி தருவது!



வேறொன்றுமில்லை, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மறைந்த தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிபு அவர்களின் 93வது பிறந்தநாள் விழாவை அக்கட்சி சென்னையில் கொண்டாடியது. அதில் கலந்து கொள்ள வந்தவர்தான், இப்படி அரிதாரம் பூசிக் கொண்டார். முத்துவேலர் அஞ்சுகம் தம்பதிகள் பெற்ற பிள்ளை இப்படி தாற்காலிகமாக முஸ்லீம் பெருமகனாக மாறி முஸ்லீம் மக்களின் நெஞ்சங்களில் பாலை வார்க்க முயற்சித்தார்.

'காலஞ்சென்ற காயிதே மில்லத் அவர்களை நீண்ட நெடுங்காலமாக தனிப்பட்ட முறையிலும், அரசியல்ரீதியிலும் நண்பராகவும், வழிகாட்டியாகவும் பெற்றிருந்ததற்கு பெருமையடைவதாக' நிகழ்ச்சியில் நினைவு கூர்ந்தார். இருக்கட்டுமே! அதற்காக தம் நண்பர் சார்ந்திருந்த, பின்பற்றிய மதச் சடங்குகளை அப்படியே அச்சாக பின்பற்றி தொழுகை நடத்தி அஞ்சலி செலுத்தினால்தான் அவர் ஆன்மா சாந்தி அடையுமா என்ன? இறந்த நண்பன், வாழ்ந்த காலத்தில் பற்றியொழுகிய குறை நிறைகளை நினைவு கூர்ந்து அதனடிப்படையில் இறந்த நண்பருக்கு அஞ்சலி செலுத்துவதுதானே பகுத்தறிவு! கருணாநிதிக்கு தெரியும்; தம் நண்பர் குழாமிடமும், உடன்பிறப்புகளிடமும் பகுத்தறிவு பேசினால், அதற்காக அவர்களை நிர்ப்பந்தித்தால் ஓட்டுக்கிடைக்காது, செருப்படிதான் கிடைக்கும் என்று! அதற்காகத்தான் இந்த அரிதாரம்!

இதோ, இந்தியாவின் இளைய பிரதமர் ராஜீவ் காந்தியைப் பாருங்கள்! மாறுவேடப் போட்டியில் கருணாநிதியையும் தூக்கிச் சாப்பிடுகிறார். இவர், காலஞ்சென்ற முன்னாள் இந்திய குடியரசு தலைவர் பக்ருதீன் அலி அகமதுவின் 83வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக இப்படி நிறம் மாறிக் கொண்டார்.

இம் மாதிரி அசலாக வேடம் போடுவது இவருக்கு கைவந்த கலை. தமிழ் நாட்டுக்கு வந்தால் பஞ்சகச்சம், அங்கவஸ்திரம் இப்படி, எந்த மாநிலத்திற்கு செல்கிறாரோ, அந்த மாநிலத்து மக்கள் மாதிரியே நடை, உடை, பாவனைக்கு மாறி கொள்வார். மலைவாசி மக்களிடம் சென்றால் இறகு தொப்பி அணிந்து கொண்டு காட்சி தருவார். இன்னும் காட்டுமிராண்டி மாதிரி வெறும் உடம்புடன் உலா வருவதுதான் பாக்கி! நல்ல வேளை! ஓட்டுப் போடும் மக்களில் யாரும் இப்போது அம்மாதிரி வாழ்வதில்லை. நாம் தப்பித்தோம்!

21-ஆம் நூற்றாண்டு, நவீனமயம். கம்ப்யூட்டர் உலகம் பற்றி பேசும் ராஜீவ் ஆகட்டும், பகுத்தறிவு சுயமரியாதை பேசும் கருணாநிதி ஆகட்டும்; யாருக்கும் தான் பேசும் கொள்கைபற்றியோ, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுபற்றியோ சொரணை இருப்பது இல்லை. அறியாமையில் வாழும் மக்களிடம் இருக்கும் சாதி, மதம், அதன் அடிப்படையிலான பழமை, பிற்போக்கு, மூட நம்பிக்கைகளை ஊட்டி வளர்த்து, கெட்டிப்படுத்தி அதில் யார் அதிகமாக குளிர் காய்வது என்பதுதான் இவர்களுக்குள் இருக்கும் போட்டி, பொறாமை!

பிழைப்புவாதமே அரசியலாகக் கொண்ட இக்கும்பலிடம் வேறு எதை எதிர்பார்க்கமுடியும். இது தெரிந்தபிறகும், இன்னுமா நாம் இதுகளை விட்டு வைப்பது! விரட்டியடிப்பது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்